கல்கி

குடும்பத்துடன் படிக்க...

KALKI
4.3.2007 ரூ.8.00
80 பக்கங்கள்



Team Health Shoppe
For Wellness

nature's gift

குளிர்முறை தொழில்நுட்பம். தண்ணீருக்கு பதிலாக ஆலோ வீரா ஜெல். உடலிற்கு ஒவ்வாத ரசாயனங்களோ, இதர பொருட்களோ இல்லாதது தேங்காய் பால் மற்றும் ஆலோ வீராவினை கொண்டு தயாரிக்கப்பட்டதால் இயற்கையான Moisturiser மற்றும் க்ளீன்ஸர் - சருமத்தை மென்மையாக வைத்துக் கொள்ள உதவுகிறது.



பயனுள்ள உட்பொருட்களை குளிர்முறை தொழில்நுட்பத்தினால் பாதுகாத்து அளிக்கிறது. முதிர்ந்த இலையின் கூழினாலான அசல் சாறு. தண்ணீர் மற்றும் சுவை / வண்ண சேர்க்கை இல்லாதது. பறிக்கப்பட்ட சில மணி நேரங்களிலேயே 100% சீர்படுத்தப்படுகிறது.

ஆரோக்கியமான குடும்பங்களிற்கு... ரசாயனங்களில்லாத குளிர் முறை தொழில்நுட்பம் இயற்கையிலேயே உள்ள சத்துப் பொருட்கள் மற்றும் வாசனைகளின் தன்மை மாறாமல் பாதுகாக்கிறது.

- Aloe Care Facial Gel
- Aloe Multi-purpose Gel
- Aloe Care Fairness Oil
- Moisturising Cream

உடலிற்கு உகந்த எண்ணெய் வகைகளுடன் சேர்க்கப்பட்ட ஆலோ வீரா இயற்கையான ஈரப்பதனி மற்றும் க்ளீன்ஸர் - சருமத்தை மென்மையாக வைத்துக் கொள்ள உதவுகிறது.



ஆரோக்கியம் இயற்கையான வழியில்...

வருமுன் காப்பது நியதி என்பது ஆன்றோர் வாக்கு. நாம் உண்ணும் உணவு, பருகும் பானங்கள் மற்றும் சுவாசிக்கும் காற்றை இயற்கையோடு ஒன்றும் விதமாக அமைத்துக் கொண்டால், இன்றைய நவீன யுகத்தின் பல நோய்களை தடுக்க முடியும். மக்கள் உடல் நலம் காக்கவே தனது பல்வகையான தயாரிப்புகளை டீம் ஹெல்த் ஷாப்பி வழங்குகிறது.

டீம் ஹெல்த் ஷாப்பின் இதர பொருட்கள்

- டீம் சோடியம் அல்லாத உப்பு
- டீம் அரை உப்பு
- டீம் நல்லெண்ணெய்
- டீம் தேங்காய் எண்ணெய்
- கற்றாழை - சருமம் மற்றும் மேனிப் பராமரிப்பு பொருட்கள்
- தேன் பொருட்கள்
- டீம் எனர்ஜி வாட்டர்
- மரபு முறை, கைகுத்தல் உணவுப் பொருட்கள்
- கொடைக்கானல் மலை தைலம்
- பனைப்பொருட்கள்

Wellness of Body and mind



Fullness of Life and living

FREE

**ரூபாய் 500க்கும் மேல் வாங்குபவர்களுக்கு

NEW Now Available
- FLAXSEED OIL
- FLAXSEED POWDER
- ORGANIC PULSES

Team Eubio Care
(DIVISION OF CHEMFAB ALKALIS LIMITED)

Dr. Rao's

வண்டலூர்: டீம் ஹவுஸ், ஜி.எஸ்.டி. ரோடு, சென்னை - 48. போன்: 2275 0502

அண்ணாநகர்: பிளாட் 1200, Z பிளாக், 6வது அவென்யு, சென்னை - 40. (கோகினோ கராத்தே ஸ்கூல் எதிர்புறம்) போன்: 4269 3332

அடையார்: எண்.26, தரைதளம், கார்பரேஷன் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ், 3வது அவென்யு, இந்திரா நகர், சென்னை - 20. போன்: 4269 5115

E-mail : teamhealthshoppe@drraoholdings.com • Web : www.teamhealthshoppe.com


கல்கி
தரம் நிரந்தரம்
அடுத்த இதழ்...
+16
கல்கி
குடும்பத்துடன் படிக்க...
ஜெயிக்கப் போவது நீங்க!
இது புத்தகம்
மட்டுமல்ல...
பயனுள்ள
பெட்டகம்!
"அப்ளிகேஷன்
முதல்
அப்பாயிண்ட்மென்ட்
வரை..."
அப்டேட் தகவல்கள்!

கூடங்குளம் அணுமின் நிலைய எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்க அண்மையில் கன்னியாகுமரிக்கு வந்திருந்த சமூகப் போராளி மேதாபட்கர் நமது கேள்விகளுக்கும் சளைக்காமல் பதிலளித்தார்...





நாடு முழுவதும் ஏற்கெனவே எட்டு அணு உலைகள் உள்ள நிலையில் கூடங்குளத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பது ஏன்?

“இந்தியாவில் எங்கெல்லாம் அணு உலைகள் இயங்குகின்றனவோ, அங்கெல்லாம் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். கூடங்குளத்தை மட்டுமல்ல, அனைத்து அணு உலை நிலையங்களையும் தடைசெய்ய வேண்டும் என்பதே எங்கள் போராட்டத்தின் நோக்கம். அதன் தொடர்ச்சியாக, வரும் மார்ச் 19ஆம் தேதி புதுதில்லி ஜந்தர் மந்திரில் அணு உலை எதிர்ப்பு நடவடிக்கை ஒரு தொடர் போராட்டமாக நடக்க உள்ளது. அதற்கு முன்பான அடையாள எதிர்ப்புதான் கூடங்குளத்தில் நடைபெறுகிறது. அணு ஆயுதங்களும், அணுசக்தியும் நாட்டுக்குப் பெரும் ஆபத்து. ஜார்க்கண்ட் மாநிலம் சடுகுடாவில் யுரேனியம் எடுப்பதால் அங்குள்ள ஆதிவாசி மக்கள் புற்றுநோய், வாதம் உள்ளிட்ட பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். உலக நாடுகள் பலவும் அணு ஆயுத ஒப்பந்தத்தைப் புறக்கணித்து வரும் நிலையில் அமெரிக்காவுடன் நாம் கையெழுத்துப் போட்டுள்ளது தவறு. அதைத் தவிர்த்து, ‘அணு உலை’ என நினைவுச் சின்னமாக்குவதற்கு ஆவன செய்யலாமே!”

சிங்கூர் பிரச்னையில் உங்கள் போராட்டமும், அரசின் அணுகுமுறையும் எதிரெதிர் திசைகளில் உள்ளனவே?

“மேற்கு வங்காளத்தின் தொழில் துறை அமைச்சர் நிருபன்சென்கூட எங்கள் தரப்பு நியாயத்தை ஒப்புக்கொண்டார். ஆனால் என்ன செய்வது? அதை அமல்படுத்தும் அதிகாரம் அவரிடம் இல்லையே. காரணம், அரசுக்குப் பெரும் பணக்காரர்களின், ஒப்பந்தக்காரர்களின் பணம் தேர்தல் நேரத்தில் தேவைப்படுகிறதே!

சிங்கூர் பிரச்னையின்போது மேற்கு வங்கக் காவல்துறை என்னை ஒரு



“ஜெ., மோடியைவிட புத்ததேவ்

சமூக விரோதியைப் போல் நடத்தியது. அன்றைய ஜெய லலிதாவின் காவல் துறையையும், நரேந்திர மோடியின் காவல்துறையையும் விட புத்ததேவின் காவல்துறை நடவடிக்கை மோசமானது. ஒரே வாரத்தில் என்னை மூன்று முறை கைது செய்தார்கள். கொல்கத்தாவுக்கு உள்ளே வரக்கூடாது என்றார்கள். கொல்கத்தாவுக்கு வெளியே என் நண்பர் இல்லத்தில் இருந்தேன். அங்கேயும் வந்து கைது செய்தார்கள். நான் நீதிமன்றத்தை நாடினேன். என்னைக் கைது செய்தது தவறு என்றது நீதிமன்றம். மேற்கு வங்காளத்தில் நான் எங்கும் சுதந்திரமாகச் செல்லலாம் என்றது.



மேதா பட்கர்

சிங்கூரில் தினம்தோறும் மோதல்கள் ஏற்படுகின்றன. நிலத்தை விற்றவர்கள், நிலத்தை விற்காதவர்கள் எனப் பிளவுபட்டுக் கிடக்கிறார்கள். புத்ததேவ் பட்டாச்சாரியாவை அவர் கட்சியினரே சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறார்கள். அவர்களே போராட்டத்தில் ஈடுபட்டது, தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டது, மாநிலத்தில் ஐ.டி. துறை உட்பட பல்வேறு துறைகளை ஸ்தம்பிக்கச் செய்தது எல்லாம் எங்கள் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றிதான்."

இன்றைக்கு, பெரும் நகரம் முதல் சிற்றூர் வரை விளைநிலங்கள் அனைத்தும் வீட்டு மனைகளாக மாற்றப்படுகின்றனவே...

"இது ஒரு சமூகக் கொடுமை. எதிர்கால விளைவு பற்றித் தெரியாமல் நடக்கும் அக்கிரமம். நம்முடைய விவசாய விளைநிலங்கள் அரசின், அதிகாரவர்க்கத்தின், ஒப்பந்தக்காரர்களின் வேட்டைக் காடுகளாக மாறி வருகின்றன. ஒரு விவசாயியின் விவசாயத்தில் முதலீடு அதிகம். ஆனால், விளைபொருட்களுக்கு அதற்கான விலை இல்லை. கொள்ளை வியாபாரிகள் விவசாயிகளின் வறுமைச் சூழ்நிலையைப் பயன்படுத்தி அவர்களுடைய நிலத்தைக் குறைந்த விலைக்கு வாங்கிவிடுகின்றனர். விவசாயியின் ஏழ்மை நிலையைப் போக்க வேண்டிய அரசு, அதிகாரத் தரகர்களுக்கு ஆதரவாகச் செயல்படுகிறது."

- தாகூர்

மோசம்!"

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காட்டுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

தலைமை உதவி ஆசிரியர் :
மு.மாறன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன், பி.ஆர். ராஜன்
எம். மோகன், ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.440/-
ஆறு மாதம் : ரூ.220/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 65 யு.எஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.






படங்கள் : ஸ்ரீஹரி







சென்னை சங்கமம் விழாக் காட்சிகள்!







வட்டமேஜை

✉ அன்றாடம் அபத்தக் கருத்துக்களைத் தாங்கி வரும் சின்னத் திரைத் தொடர்களின் அவலங்களைக் களைவதற்கு சங்கு ஊதியுள்ளீர்கள்; என்று விடியுமோ?
நெய்வேலி, எஸ்.இந்துமதி

✉ 'நீதிமன்றம் வேஸ்ட்! மைனாரிட்டி அரசு கிரேட்!' என்ற உமது கார்ட்டூன் சரியான நோஸ் கட்! கீப் இட் அப்!
சென்னை - 109, எஸ்.ஆர்.ஹரிஹரன்



நோஸ் கட்!

✉ பிடிச்சு வெச்சால் பிள்ளையார் (பதவி), வழிச்சி எறிஞ்சா சாணி (பதவி காலி) என்பதைப் புரிந்துகொள்ளாத ஞானசூன்ய அரசியல்வாதிகள் - ஏதோ தாங்கள்தாம் வானத்தில் இருந்து குதித்து வந்தவர்களைப் போல வானத்துக்கும் பூமிக்குமாகக் குதிப்பது வேடிக்கையாக இருக்கிறது.
பெரம்பூர், மணிமகன்

✉ காதல் குறித்த வித்தியாசமான நடுப்பக்கச் சொல்லோவியம் சிந்திக்க, சிரிக்க வைத்தது.
சென்னை - 82, கிருஷ்ணமூர்த்தி

✉ டி.வி. சீரியல்களால் ஏற்படும் தொல்லைகளை வாசகர்கள் கொட்டித் தீர்த்து விட்டார்களே! வரவேற்கிறோம்!
பாளையங்கோட்டை, பி.சிவா

✉ கழனியூரனின் தெல்லி வீரன் வரலாறு, தமிழ் மண்ணின் வீரசாகசங்களைப் பறைசாற்றுகிறது.
கும்பகோணம், கே.என்.பாலகிருஷ்ணன்

✉ எழுத்தாளர் வண்ணநிலவன் பேட்டி செழுமையாக இருந்தது!
வயலூர், பா.அச்சுதன்

✉ காதலைப் பற்றி சிம்புவின் விளக்கம் சிம்ப்ளி சூப்பர்ப்!
ஈரோடு, ரேவதிப்ரியன்

✉ காதல் மணம் புரிந்த தம்பதியரின் நேச அனுபவம் இனிப்பு, சிலிர்ப்பு, உவர்ப்பு...!
திருவண்ணாமலை, என்.சண்முகம்

✉ குகை மா.புகழேந்தியின் கவிதை வரிகள், வானுயர்ந்த காதலின் இதமான தூறல்கள்! நேசிப்பின் சாரல்கள்!
நாகமலை, ப.கா.மணிமொழியன்

✉ காதல் என்பதற்குப் பலதரப்பட்ட மக்கள் கொடுத்த விளக்கம் அருமை!
மதுரை, ஆர்.பிருந்தா



பாட்டு

சீக்ரெட் ஆஃப் மை எனர்ஜி!

''நான் கொண்ட காதல்ல வெற்றி அடையணும்ங்கிறதுக்காக பதினைஞ்சு வருஷம் போராடினேன். என் காதல் எனக்கு வாழ்வளிக்கும் என்ற நம்பிக்கையில், கேரளாவில் பி.ஏ. இலக்கியம் படிச்சிட்டிருந்தவ. சென்னைக்கு வந்தேன். வந்தது வீண் போகல, என் காதலும் என்னைக் கைவிடல'' என்று சிலாகித்துப் பேசும் கங்கா யாரென்று நினைக்கிறீர்கள்? 'போக்கிரி'யில் ஹிட்டடித்திருக்கும் 'மாம்பழமாம் மாம்பழம்' பாட்டை அசினுக்காகப் பாடியவர். காதல்... காதல்... என்று மூச்சுக்கு முந்நூறு தடவை கங்கா அரற்றுவது பாடும் துறையைத்தான்.



''இன்னைக்குச் சின்னக் குழந்தைகூட 'மாம்பழம்' பாட்டை ரசிச்சுப் பாடும்போது ரொம்ப சந்தோஷமா இருக்கு. பாடும் கலை மீதான என் காதலுக்கு இனி எல்லையே இல்ல!'' என்று சந்தோஷப்படும் கங்கா, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் எனப் பல்வேறு மொழிகளில் இருநூறு பாடல்களைப் பாடியுள்ளார்.

''பாடகி ஆகணும்ங்கிற கனவோட வந்த எனக்கு ஆரம்பத்தில் கிடைத்தது ஏ.ஆர். ரகுமான் சார்கிட்ட ட்ராக் பாடுற சான்ஸ்தான். நெறைய கச்சேரிகள் பண்ணியிருக்கேன். என் கணவர் சினிமா புகைப்படக்காரர் சிற்றரசு. நான் சோர்ந்து போகும்போதெல்லாம் என்னை உற்சாகப்படுத்திக்கொண்டே இருப்பார். அவர்தான் 'சீக்ரெட் ஆஃப் மை எனர்ஜி'' என்று கூறும் கங்காவும், அவர் கணவரும் இசைக் கல்லூரி மாணவர்களாக இருந்து காதல் திருமணம் புரிந்தவர்கள்.

'''சமுத்திரம்' படத்துல 'கண்டுபிடி, கண்டுபிடி', 'வருஷமெல்லாம் வசந்தம்' படத்துல 'அடி அனார்கலி', 'தேவதையைக் கண்டேன்'ல 'அழகே பிரம்மனிடம்' போன்ற பாடல்கள் 'அட, இது யாரு?'ன்னு கேட்க வச்சிருந்தாலும், 'மாம்பழமாம் மாம்பழம்'தான் எனக்குப் பெரிய அடையாளத்தைக் கொடுத்திருக்கு. அசின்கூட போன் பண்ணி ரொம்பப் பாராட்டினாங்க'' என்று சொல்லும் கங்கா, விஜய்யின் தீவிர ரசிகை!

- வினோ

வேலை நிறுத்தத்தைப்



• தவறான அறிவிப்பு!

மேல்முறையீட்டில் தண்டனை குறை யாது.

● நீ.முத்துக்குமார், திருச்சி

? உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி தொடங்க இன்னும் சில நாட்களே உள்ளன. தற்பொழுது நமது அணி என்ன கண்டிஷனில் இருக்கிறது?

! அணி உடல்ரீதியாக நல்ல கண்டிஷனிலும் மனரீதியாக உற்சாக மிகுதியிலும் துள்ளிக்கொண்டிருக்கிறது.

● கு.கணேசன், பனங்கோட்டூர்

? ''தமிழகத்தில் பயங்கரவாதிகள் ஊடுருவல் இல்லை'' என்று டி.ஜி.பி. முகர்ஜி அடிக்கடி பேட்டியளிப்பது ஏன்?

! ''அப்பன் குதிருக்குள் இல்லை'' என்கிறார். சம்பவங்கள் இதைத்தான் நிரூபிக்கின்றன.

● ஜி.எஸ்.பாரதி, விபீஷணபுரம்

? தர்மபுரி பஸ் எரிப்பு வழக்கின் தீர்ப்பு...?

! காலதாமதமானாலும் நீதி வாழ்ந்து கொண்டிருக்கிறது என்று நிரூபணமாகி யுள்ளது. சொல்லில் அடங்காத கொடூர சம்பவத்தையும், மாண்ட மாணவியரின் பெற்றோர் அடைந்த துயரத்தையும், அரசியல் தலையீடின்றி நீதி நிலைக்க ஒரு தகப்பனார் எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியையும் நினைவில் இருத்தினால்,



• புத்திசாலி கருத்து!

● எஸ்.கே.மூர்த்தி, கும்பகோணம்

? 'பிக் பிரதர்' நிகழ்ச்சியில் அவமானப்படுத்தப்பட்ட ஷில்பா ஷெட்டிக்காக நாம் எல்லோரும் கொதித்தெழுந் தோம். ஆனால் அவர் அதே நாட்டில்–

நீங்கள் கேட்டவை


ரூ.100/- பரிசு பெறுபவர்:

ஜி.ஜி. சரவணன்,
52, மேல வீதி, திருஇந்தளூர்,
மயிலாடுதுறை - 609 001

• ரூ.50/- பரிசு பெறுபவர்:

கே. விஜி செந்தில்,
கீதா இல்லம், பொன் - காடு,
பேராவூரணி - 614 804
தஞ்சை மாவட்டம்

பணிக்காலமாக அறிவிக்கலாமா?



தராசு

அதே நிகழ்ச்சியில் தேர்வாகி நிரந்தரப் பணிக்கு ஒப்பந்தமாகியிருக்கிறாரே... இது முறை தானா?

! நாம் அனுதாபப் பட்டதை விடவும் அந்த நாட்டினரே அதிகமாகக் கொதித்தெழுந்ததால்தானே ஷில்பா ஷெட்டி வெற்றி பெற்றார்!

● **கே.விஜிசெந்தில், பேராவூரணி** ✱

? 'நான்' என்கிற அகங்காரம் இருக்கும் இடத்தில் கடவுள் இல்லை. பிறகெப்படி 'நான் கடவுள்'?

! 'நான் கடவுள்' என்று சொல்வது 'கடவுள் என் உள்ளேயும் இருக்கிறார்; எனது ஒவ்வொரு செயலையும் கவனிக்கிறார்' என்பதை உணர்த்த. அதை, 'நானே கடவுள்' என்று பொருள் மாற்றிக் கொண்டால் பிரச்னை தான்!

● **லெ.நா.சிவகுமார், சென்னை - 33**

? ரயில்வே கட்டண விஷயத்தில் 'நான் எப்போதும் முன்வாசல் வழியாகச் செல்பவன்' என்கிறாரே லாலு?

! ஆனால் ரயில்வே விபத்துகள் சொல்லாமல் கொள்ளாமல் பின்வாசல் வழியாக நுழைந்து விடுகின்றனவே!



• திறந்துள்ள பின் கதவு!



• வித்தியாச வன்முறை!



• கொதித்தெழுந்த காரிகை

● **மல்லிகா அன்பழகன், சென்னை - 112**


? "புத்திசாலிகள் சேமிக்கிறார்கள்; அதிபுத்திசாலிகள் கடன் வாங்குகிறார்கள்" என்கிற ப.சிதம்பரத்தின் கருத்தினைப் பற்றி...?

! ஆமாமாம்! நம் நாட்டில் அவர்களைவிட புத்திசாலிகள், வாங்கிய கடனைத் திருப்பித் தராது தப்புகிறார்கள். மேதாவிகளோ வரி விதித்து மக்களை வதைக்கிறார்கள்!

● **ஜி.ஜி.சரவணன், திருஇந்தளூர்** ❒

? கல்லூரி ஆசிரியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தைப் பணிக்காலமாக அறிவித்துள்ள முதல்வரின் அறிவிப்பு, சம்பந்தப்பட்டவர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தாலும் எதிர்காலத்தில் தவறான முன்னுதாரணமாகக் கொள்ளப்படாதா?

! அது மட்டுமல்ல, சரவணன்! அரசாங்கம் வழங்கும் எந்தவொரு சலுகையும் (இலவசம் உள்பட) முன்னுதாரணமாகும். அடுத்தடுத்து வரும் ஆட்சிகள் இந்தச் சலுகைகளைத் தொடர முடியாமல் திணறும். அவற்றைப் பெற



• பெரிய குதிர்!



• ஆன்லைன் கவலை!

• கே.ஜி.எஃப்.சி. பழனிச்சாமி, கிழக்குத் தாம்பரம்

? தமிழக மக்களிடையே காணப்படும் மிகப்பெரிய மூட நம்பிக்கை எது?

! இலவசங்கள்! இலவசங்கள் மூலம் வாழ்க்கைத் தரம் உயரும் என்ற நம்பிக்கை. இலவசங்களுக்கு மயங்கி வோட்டுப் போடும் அவலம்.

கோரிக்கைகளும் போராட்டங்களும் அதிகரிக்கும். பொருளாதாரம் குட்டிச் சுவராகும்.

• ப.க.மணிமொழியான், மதுரை - 19

? மெய்யான அன்பே தெய்வீகமாகும் - அது என்ன மெய்யான அன்பு?

! நிபந்தனைகள் அற்ற அன்பு. நேசிக்கப்படுபவரிடமிருந்து எதையும் எதிர்பாராத அன்பு!

• க.மோ.சிவா, கந்திருப்பம்

? காவிரிப் பிரச்னைக்குச் சட்டத்தால் மட்டுமே தீர்வு காண முடியாது என்கிறாரே தேவேகௌடா?

! சட்டத்தை மதிப்பவர்கள் நிச்சயம் சட்டத்தால் தீர்வு காண முடியும். சட்டத்தை மதிக்காதவர்கள்தான் யுத்தத்தால் தீர்வு காண முடியும் என்று கருதிப் புறப்பட்டிருக்கிறார்கள். அத்தகையவர்களுக்கு தேவேகௌடா (முன்னாள் பிரதமர்!) ஊக்கமளிக்கிறார்!

• ஏ.மோகன்சுவாமி, கொளத்தூர்

? 'ஏ.ஸி.'யில் 'ஓசி'யாகப் பயணித்த லாலுவின் மாமனாரிடம் கட்டணம் வசூலித்த டி.டி.ஈ.யைப் பாராட்டுவாரா ரயில்வே அமைச்சர்?

! பாராட்டியதோடு சன்மானமும் அளித்து, "டிக்கெட் இல்லாமல் பயணம் செய்யும் எல்லோருக்கும் இது ஒரு பாடம்" என்று எச்சரித்து, ஜோராய் நழுவித் தப்பிவிட்டாரே லாலு!

• எஸ்.சங்கர், திருப்பரங்குன்றம்

? மீண்டும் கஞ்சித்தொட்டி?

! அரசியல் நோக்கில் தப்பு; இரக்கம் மிக, அன்னதான நோக்கில் சரி.

• ஜே.செல்வராணி, மதுரை - 4

? விலைவாசி உயர்வைத் தடுக்க, அடிப்படைப் பொருட்கள் ஆன்-லைனில் விற்பனை செய்யப்படுவதைத் தடை செய்ய வேண்டும் என்று சி.பி.எம். தலைவர் சீதாராம் யெச்சூரி கூறியுள்ளது பற்றி..?

! அது சாத்தியமில்லை. விலை உயர்வுக்கு ஆன் லைன் வர்த்தகம் காரணமும் இல்லை. பண வீக்கமே முதல் காரணம். வரவுக்கேற்ற செலவு நிர்ணயித்து, துண்டு விழாத பட்ஜெட் என்று அமைக்கப்படுகிறதோ, அன்று விலைவாசி ஸ்திரப்படும். இரண்டாவது காரணம்: தொழில் வளப் பெருக்கம்தான் பொருளாதார முன்னேற்றம் என்று தவறாக எண்ணுவது. விவசாய வளத்தைப் பெருக்குவதும், உணவுப் பொருள் தேவையான இடங்களுக்குப் போய்ச் சேர வழி வகுப்பதும் தான் மெய்யான பொருளாதார வளர்ச்சி.

• அ.கஹைறல் ரஹ்மான், திருச்சி - 21

? ஹெல்மெட் கட்டாயமாக்கப்படுவதால் விபத்துகள் குறைந்துவிடுமா?

! விபத்துகள் குறைவதற்காக அல்ல; விபத்தில் தலைப்பகுதி பாதிப்புக்குள்ளாகாமல் காப்பதே ஹெல்மெட்டின் நோக்கம்!

• எம்.சம்பத், வேலாயுதம்பாளையம்

? "தேர்தல் வன்முறையில் ஈடுபட்டவர்கள் சட்டசபையில் இருப்பதால் நான் சட்டசபைக்குச் செல்வதில்லை" என்று விஜயகாந்த் சொல்வது சரியா?

! "சட்டசபைக்குப் போகமாட்டேன்; வாக்காளருக்கு ஜனநாயகக் கடமையைச் செய்ய மாட்டேன்" என்று முரண்டுபிடிப்பதேகூட வன்முறைதான். ●



ஆஹா... என்ன இது?
அடடா... என்ன இது?
கல்கி
வாசகர்களே...
கொட்டப் போகுது
பரிசு மழை...
நனையப் போவது
நீங்கள்...!
விவரங்கள்
அடுத்த இதழில்...



வெற்றிகரமான
21 – ஆம் ஆண்டில்...
ஏராளமான ஓவிய ஆசிரியர்களை
உருவாக்கிய ஒப்பற்றக் கலைக்கூடம்.
அஜந்தாவின்
அர்ப்பணிப்பில் உங்களையும் இணைத்து கொள்ளுங்கள்...
ஓவிய
ஆசிரியர்
பயிற்சி
வீட்டில் இருந்த படியே
தபால் மூலம் படிக்கலாம்.
கல்வித் தகுதி - SSLC, +2
● ஆண்கள், பெண்கள் தனித் தனி வகுப்புகள்.
● நேர்முகப் பயிற்சியும் உண்டு.
உங்கள் முகவரியை ஒரு தபால் கார்டில்
எழுதி அனுப்புங்கள். அல்லது
தொலைபேசியில் தெரிவியுங்கள்.
இலவச விவரப்புத்தகம்
உங்கள் இல்லம் தேடி வரும்...
AJANTHA
SCHOOL OF ARTS
(Govt. Regd.)
6, MUTHU NAGAR, POONAMALLEE,
CHENNAI - 600 056.
Ph : 044 -26490363, Cell: 9381050477, 9940390708

‘‘பாலியல் கல்வியை எங்களால் கற்றுத் தர முடியாது. மாணவனிடமோ, மாணவியிடமோ இதைப் பற்றிப் பேசினால், ஆசிரியருக்கான கண்ணியமும் மரியாதையும் குறைவுபடும். பாலியல் கல்வி நம்முடைய பண்பாட்டுக்கும், கலாசாரத்துக்கும் எதிரான விஷயம்'' என்று ஓர் எதிர்ப்பு அண்மையில் கேரள மண்ணில் எழுந்துள்ளது. இந் நிலையில், தமிழகப் பள்ளிகளில் அதனை அறிமுகம் செய்ய பரிசீலனை நடக்கிறது. இதுகுறித்து பாலியல் மருத்துவ நிபுணர் டாக்டர் ஆர்.காமராஜ் அவர்களிடம் கேட்டோம்.

''சென்னையில் இரண்டாவது பன்னாட்டு செக்ஸாலஜி மாநாட்டை நடத்தியுள்ள இந்த வேளையில் இது சிந்திக்க வேண்டிய விஷயம்.

பொதுவாக, பாலியல் கல்வி என்பது பாலியல் விஷயங்களைக் கற்றுத் தருவதாகவே பார்க்கப்படுகிறது. இலைமறைக் காயாக உள்ள விஷயங்களை நடுக்கூடத்தில் சொல்லித் தர வேண்டுமா, இதனால் நம் பண்பாடு என்ன ஆகும், கலாசாரம் சீரழிந்து விடாதா என்கிற கூக்குரல்கள் எங்கும் ஆவேசத்துடன் ஒலிக்கின்றன.

ஆனால், பாலியல் கல்வியை எதிர்த்து இப்படியோர் ஆவேசக் குரல் அவசியமில்லை. பருவ வயதில் உள்ள ஆண், பெண்ணுக்கு மன, உடல் ரீதியான பிரச்னைகளைப் பற்றிய விழிப்புணர்வை

பண்பாட்டைச் சீரழிக்குமா



ஏற்படுத்துவதே இக் கல்வியின் முக்கிய நோக்கம்.

உடல் ரீதியான மாற்றங்கள் குறித்த சந்தேகங்களை நீக்குவது முதல் கட்டம். மன ரீதியாகத் தெளிவுபடுத்தி ஆரோக்கியமான சிந்தனைகளை விதைப்பது அடுத்த கட்டம்.

இயற்கையின்படி ஆண், பெண் உருவாக்கம் என்ன, ஆண் - பெண் உறவுகள் எப்படி அமைய வேண்டும், நல்ல விதத்தில் அவ்வுறவினை எப்படி நிர்வகிப்பது, எல்லையை மீறினால் அந்த வயதில் என்னென்ன விளைவுகளைச் சந்திக்க நேரும் என்பதையெல்லாம் விரிவாக விளக்க வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டிருக்கிறது.



மருத்துவம்

யும் சொல்வதில் அர்த்தமில்லை. கண்டும் கேட்டும் விட்டுப் பெரியோர்களால் விளக்கப்பட்டும் இளைஞர்கள் பாலியல் விஷயங்களை அவ்வப்போது பருவத்துக்கேற்ப தெரிந்துகொண்டு வளரக்கூடிய சூழ்நிலை இன்று வீடுகளில் இல்லை. ஆனால் வெளிவாழ்க்கையில் ஆண் - பெண் அன்றாடம் நெருங்கிப் பழகுவதை அனுமதிக்கும் சூழல் ஏற்பட்டிருக்கிறது.

பாலியல் கல்வி?



* டாக்டர் ஆர். காமராஜ்

எது குறித்துமே தெளிவும் அறிவும் இருந்தால்தான் தவறுகள் நிகழாமல் இருக்கும். அதுவும் உணர்வின் உந்துதல் மிகுதியாக உள்ள பாலியல் விஷயத்தில் இந்தத் தெளிவு மிகவும் அவசியம்.

புரிதல்கள் இல்லாமல், வழிகாட்டுதல் இல்லாமல் எத்தனையோ பேர் தேவையற்ற மனப் பிரச்னைகளில் சிக்கிக் கொள்கிறார்கள் என்பது எங்களைப் போன்ற மருத்துவர்களுக்குத்தான் தெரியும்.

இக் கல்வியை முறைப்படியும் சரியான அணுகுமுறையுடனும் வழங்க ஆசிரியர்களுக்கும் பயிற்சி தர வேண்டும். அவ்வாறு பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களால்தான் மாணவர்களை அழகாகக் கையாள முடியும்.

நம் பண்பாடு - கலாசாரம் இக் கல்வியை அனுமதிக்காது என்று இனி

"பாலியல் கல்வியை முறைப்படியும் சரியான அணுகுமுறையுடனும் வழங்க ஆசிரியர்களுக்கும் பயிற்சி தர வேண்டும்!"

இதனால்தான் உரிய வயதில் பாலியல் கல்வியைப் புகட்டுவது மிகவும் அவசியமாகியிருக்கிறது.

மேலும், எய்ட்ஸ் அச்சுறுத்தல் வேறு! இன்று இந்தியா உலகிலேயே இரண்டாவது இடத்தில் இருக்கிறது - எய்ட்ஸ் பாதிப்பில்! மீடியா ஒரு புறம் காதல் 'என்றாலே காமம்தான் என்பதுபோல் சித்திரித்து வருகிறது.

இதையெல்லாம் கருத்திற்கொண்டு, சமுதாய நோக்கர்களும் மருத்துவ நிபுணர்களும் இணைந்து வகுக்கும் பாலியல் கல்வி முறையை நடைமுறைப்படுத்தி, நமது இளைய தலைமுறையின் மெல்லுணர்வுகளைப் பாதுகாப்பது அவசியமாகிறது" என்கிறார் டாக்டர் காமராஜ்.

- சிபி



கல்கி



2007 மார்ச் 4
விய மாசி 20
மலர் : 65
இதழ் : 31

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்.

தேர்தல் கமிஷனின் தனி அதிகாரம்!


தே.மு.தி.க. ஐந்து வார்டுகளில் வென்றது மட்டுமே எதிர்பாராதது. சென்னை மாநகராட்சி கவுன்சில் தேர்தலின் இதர முடிவுகள் எவ்வித ஆச்சர்யமும் அளிக்கவில்லை.


கடந்த முறை தேர்தல் நடந்தபோது நிகழ்ந்த வன்முறை பலரை அச்சுறுத்தியிருக்கிறது. அ.தி.மு.க. போட்டியிடாததால், எப்படியிருந்தாலும் தி.மு.க. கூட்டணியே அதிக இடங்களைக் கைப்பற்றும் என்பது முன்கூட்டியே தெரிந்த முடிவாகிவிட்டது. இவ்விரு காரணங்களினால் மட்டுமின்றி, சமீப காலத்து அரசியல் போக்கினால் விளைந்த சலிப்பு காரணமாகவும் வாக்குப்பதிவு மிகக் குறைவாகவே நிகழ்ந்திருக்கிறது.

மறு தேர்தல் உணர்த்தும் முக்கியமான பாடம் இதுதான் :

இப்போதுள்ள உள்ளாட்சித் தேர்தல் நடைமுறை என்பது சட்டமன்றத் தேர்தலின் மறுவடிவம் போன்றதாகவே இருக்கிறது. கட்சித் தலைமைதான் எங்கே, யார் போட்டியிடலாம் என்று நிர்ணயிக்கிறது. பண பலம், 'ஆள்' பலம், ஜாதி போன்றவையும் வேட்பாளரை நிர்ணயிக்கின்றன. தாங்கள் வோட்டளிக்கப் போகும் நபர் தங்களுள் ஒருவராக - தங்கள் பிரதிநிதியாக - விளங்கி நல்லது செய்வார் என்கிற நம்பிக்கையே வாக்காளர்களுக்கு ஏற்பட வாய்ப்பின்றிப் போய்விட்டது.

கட்சி அடிப்படையில் வோட்டுப் போட வேண்டியிருக்கிற போது, சட்டமன்றத்தில் அதிகார பலம் கொண்ட கட்சியையே உள்ளாட்சி அமைப்பிலும் தேர்ந்தெடுத்தால்தான் உள்ளாட்சி மன்றத்துக்கு அரசாங்கத்தின் ஒத்துழைப்பும் நிதி ஒதுக்கீடும் சிரமமின்றிக் கிடைக்கும் என்கிற அவல நிலை வேறு! ஆட்சி அதிகாரத்தில் உள்ள கட்சியின் ஆதிக்கத்தில், உள்ளாட்சித்





தேர்தல்களின்போது வன்முறையும் கள்ளவாக்குப் பதிவும்கூட நடைபெறுகின்றன. மறு தேர்தல் அறிவித்தால், அந்த மறு தேர்தலிலும் சிறிய அளவிலேனும் சில வார்டுகளில் கள்ள வோட்டு, வன்முறை, கலாட்டா!

கட்சி அரசியலில் ஆதிக்கம் மட்டும் இல்லாவிட்டால் உள்ளாட்சித் தேர்தல்களில் இத்தனை வன்முறையும் அராஜகமும் நுழையவே வாய்ப்பிராது என்பதுடன் சமுதாய நோக்கும் பரந்த சிந்தனையும் உள்ளவர்கள் தேர்தலில் வேட்பாளராக நிற்க முன்வருவார்கள். சுயநலமின்றியும் கட்சி சார்பின்றியும் பொதுப்பணிகள் நடக்கும். ஆனால் இன்றோ, உள்ளாட்சி தேர்தல் அரசியல் மயமானதுடன் மாநில தேர்தல் கமிஷனும் நடுநிலையும் சுதந்திரமும் இழந்து ஆளுங்கட்சியின் அரசியல் ஆதிக்கத்துக்கு உட்பட்டுப் போயிருக்கிறது.

"மாநிலத் தேர்தல் அதிகாரி தமது பொறுப்பை ஒழுங்காக நிறைவேற்றவில்லை. சென்னை மாநகராட்சித் தேர்தலின்போது புகார்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, எதுவுமே நடவாதது போல் பாசாங்கு செய்திருக்கிறார்" என்று பொது நல வழக்கில் தீர்ப்பு கூறிய மூன்றாவது நீதிபதி பி.கே. மிச்ரா விளாசித் தள்ளியிருக்கிறார். இவ்வழக்கின் முதல் தீர்ப்பில் இரு நீதிபதிகள் கருத்து வேறுபட்டபோதிலும் நீதிபதி கலீஃபுல்லாவும் தேர்தல் கமிஷனின் அசிரத்தையைச் சுட்டிக் காட்டியுள்ளார். தேர்தல் கமிஷனர் சந்திரசேகர் பதவி விலக வேண்டும் என்று கம்யூனிஸ்ட் மார்க்ஸிஸ்ட் கட்சி குரலெழுப்பியிருக்கிறது.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் அளிக்க முடியாத நிலையில், ராஜினாமா செய்ய மட்டும் மறுத்துவிட்டார் தேர்தல் கமிஷனர்! தனது தனி அதிகாரத்தில் தலையிட நீதிமன்றத்துக்கு உரிமை இல்லை என்று மாநில தேர்தல் கமிஷன் உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்ய உத்தேசித்துள்ளது. இது பிரச்னையை திசை திருப்பும் முயற்சியே!

தேர்தல்கள் நியாயமாகவும் முறைப்படியும் நடக்கவேண்டும் என்பதற்காக தேர்தல் கமிஷனுக்குத் தனி அதிகாரம் தரப்பட்டதுள்ளது உண்மைதான். அந்த உரிமை பதவிக்குத்தானே தவிர, அந்தப் பதவியை நாணயமற்ற ஒருவரோ திறமையற்ற ஒருவரோ வகிக்கிறபோது, அந்த நபருக்கும் தனி அதிகாரம் வழங்கப்பட்டதாகக் கருதவே முடியாது! ●

''இது எதிர்பார்க்காத சக்சஸ். இத்தனை கூடுதலா ஒரு சந்தோஷத்தை அனுபவிச்சு ரொம்ப நாளாச்சு. ஒட்டுமொத்த டீமுக்கும் இதுல பங்கிருக்கு. குறிப்பா, எங்க கேப்டன் தேவாஜி. அவருக்கு, ஸ்பெஷல் தேங்ஸ் சொல்லணும்.''

- 'போக்கிரி'யின் மாஸ் சக்சஸ் விஜயை சிறிதளவும் மாற்றவில்லை. அதே அடக்கம்; அதே பணிவு. இடையிடையே அந்த மின்னல் சிரிப்பு.

'தமிழ் மகன்' தொடங்கியாச்சு போல...

''ஆமாஜி. இப்பத்தான் ஆரம்பிச்சோம். இந்த ப்ராஜெக்டும் ரொம்ப நல்லா வரும். அப்பச்சன் சாருக்கும் எனக்கும் மட்டுமில்ல, இயக்குநர் பரதனுக்கும் இது மறக்க முடியாத படமா அமையும்.''

பரதன் இதுக்கு முன்னாடி ரெண்டு படம் பூஜை போட்டு நின்னுருச்சு. சென்டிமென்ட் நிறைஞ்ச சினிமா உலகத்துல, இந்த மாதிரி ஒரு இயக்குநருக்கு, அதுவும் புது இயக்குநருக்கு நீங்க வாய்ப்புக் கொடுத்தது எப்படி?

"கில்லிலேர்ந்தே அவரை எனக்குத் தெரியும். அவரோட ஸ்கிரிப்ட் நாலெட்ஜ் நல்லாருக்கும். இதுவரைக்கும் நான் பண்ணின நாற்பத்தஞ்சு படத்துல 'டச்' பண்ணாத ஒரு விஷயத்தை 'அழகிய தமிழ்மகன்'ல பண்றேன். நம்பிக்கைதான் வாழ்க்கைங்கறதை நம்பறவன் நான்!''



ரஜினிக்கு

போக்கிரில ஏன் ஓவர் வயலென்ஸ்?

"கதைக்கு ரொம்பத் தேவையாயிருந்தது. பக்கத்துல 'பாம்' வெடிச்சா 'ஐயோ, அம்மா'ன்னு அலறிக்கிட்டு ஓடறவங்க மத்தியில, இடியே விழுந்தாக்கூட ரொம்ப கேஷுவலாப் பார்த்துட்டுப் போறவன் போக்கிரி. அதுதான் எனக்குப் பிடிச்சிருந்தது. கதைன்னு பார்த்தா போக்கிரில எதுவுமில்ல. ஆனா ஹீரோவோட கேரக்டர், கதையில வர்ற சுவாரஸ்யமான விஷயங்கள், ஸ்கிரீன் ப்ளே, டைரக்ஷன் இதெல்லாம்தான் சக்சஸுக்குக் காரணம். இதே மாதிரி எல்லா நேரத்துலேயும் அமையறது கஷ்டம்.''

ஏன் ரீமேக் படங்களையே அதிகம் நம்பறீங்க?

"அப்படியெல்லாம் ப்ளான் பண்ணிப் பண்றதில்ல. அமையறதைப் பொருத்துதான்





கவர் ஸ்டோரி

எதுவும். திருப்பாச்சி, சச்சின், சிவகாசின்னு எல்லாமே நேரடிப் படங்கள்தான். இப்பக்கூட தமிழ் மகன் பண்றேன். அடுத்து மாறலாம். நமக்கே தெரியறதில்ல. ஆனா ஒண்ணு, இப்படித்தான் நடிப்பேன்னு நான் அடம் பிடிக்கிறதில்ல"

பூவே உனக்காக, காதலுக்கு மரியாதை, துள்ளாத

அடுத்து நானா?

மனமும் துள்ளும்- எல்லாம் இனி நினைவுகள்தானா?

"கண்டிப்பா அது மாதிரியான அழுத்தமான காதல் படம் கொடுக்கலாம்தான். ஆனா, இப்போ அதை மட்டுமே எங்கிட்ட எதிர்பார்க்கிறாங்கன்னு சொல்ல முடியாதே! அதோடு சேர்த்து நிறைய விஷயங்களையும் எதிர்பார்க்க ஆரம்பிச்சுட்டாங்க. இப்பல்லாம் ஷூட்டிங் போகும்போது எத்தனை ஃபைட் இருக்கு, எத்தனை பாட்டு இருக்கு, காமெடி இருக்கான்னு கேட்கிறாங்களே தவிர, என்ன கதைன்னு யாரும் எங்கிட்ட கேட்கிறதில்ல. எனக்கும் உணர்வுபூர்வமான கதையில நடிக்கணும்னு ஆசைதான். அதுகூட ரசிகர்கள் எங்கிட்ட எதிர்

"நாற்பத்தஞ்சு படத்துல பண்ணாத ஒரு விஷயத்தை பண்ணப்போறேன்!"

பார்க்கிற விஷயங்களை மிக்ஸ் பண்ணி கொடுக்கலாம்னா, கண்டிப்பாக் கொடுக்கலாம்."

வழக்கமான கேள்விதான், யாரோட டைரக்‌ஷன்ல நடிக்கலையேன்னு வருத்தம்?

"வேற யாரு, நம்ம ஷங்கர் சார்தான். ஏக்கத்தோடு காத்திட்டிருக்கேன். தலை



வர் 'சிவாஜி' முடிச்சுட்டு வரட்டும்!''

இளம் நடிகர்கள் நிறைய வந்துட்டாங்க... உங்களுக்குப் போட்டி அதிகமாயிடுச்சே...?

"யாரையும் நான் போட்டியா கருதறதில்ல. எல்லாரையுமே எனக்குப் பிடிக்கும்; எல்லாருமே என் நண்பர்கள். எல்லாருக்குள்ளும் ஒரு தனித் திறமை இருக்கு. அத்தனை பேர் படத்தையுமே பார்ப்பேன்''.

ஜூனியர் விஜய் எப்படி இருக்காரு?

"சஞ்சய் செகண்ட் ஸ்டாண்டர்ட் படிக்கிறான். நான்கூட அந்த வயசுல அப்படியிருந்திருக்க மாட்டேன். அந்த அளவுக்கு ஓவர் மெச்சூரிட்டி. சினிமா விமர்சனங்களைப் பத்திரிகையில பார்க்கிறதுக்கு முன்னால அவங்கிட்ட கேட்டுத் தெரிஞ்சுக்கலாம்னா பார்த்துக்கோங்க. போக்கிரியில வர்ற 'நான் ஒரு தடவை முடிவு பண்ணிட்டா, அதை நானே கேட்க மாட்டேன்'ங்கிற பஞ்ச் டயலாக்கை ஸ்கூல் டீச்சருங்ககிட்டேயும் ஃப்ரெண்ட்ஸுங்ககிட்டயும் சொல்லிக்கிட்டுத் திரியறானாம்.''

ரஜினிக்கு அடுத்தது பேசப்படறீங்க... எப்படியிருக்கு?

"அண்ணா! ரொம்ப பயமுறுத்தாதீங்கண்ணா. அவர் எங்கே! நாம எங்கே! ஆனா ஒண்ணு. இப்ப நான் இருக்கற இடம் சும்மா வந்துடலை. நிறைய போராட்டம், சோதனைகளைத் தாண்டித்தான் கிடைச்சிருக்கு. கடின உழைப்புக்கு ஈடு இணை கிடையாது. அது நிச்சயம் ஒரு மனுஷனை உயர்த்தியே தீரும்!''

ஒரே மாதிரி நடிக்கிறீங்களே... போரடிக்கல?

"இல்லைங்க. என்கிட்ட இதைத்தான் விரும்பறாங்க... கெட்டப் மாத்தி நடிக்கணும்ங்கிற ஐடியா எனக்குக் கொஞ்சம் கூட இல்ல. என் முகத்தோட நடிக்கிறது தான் எனக்கும் பிடிக்கும்; என் ரசிகர்களுக்கும் பிடிக்கும்!''

பஞ்ச் வசனங்கள்ன்ற பேர்ல துதி பாடறது அவசியம்தானா?

"இப்படி எழுதுங்க, இப்படி வசனம் இருக்கணும்னு எந்த இயக்குநரையும், வசனகர்த்தாவையும் வற்புறுத்துவதில்லை. 'விஜய்க்கு நல்லாயிருக்கும்; பார்க்கிற ரசிகர்களுக்குப் பிடிக்கும்'னு அவங்களா எது பண்றாங்களோ அதைத்தான் பண்றேன்.''

மாஸ் ஹீரோல்லாம் அரசியலுக்கு வர்ற சீஸன்... நீங்க எப்படி?

"அரசியலுக்கு வந்துதான் நல்லது செய்யணும்ங்கிற அவசியமில்ல. என்னால முடிஞ்ச அளவுக்கு நான் மக்களுக்குச் சில உதவிகளை செஞ்சுக்கிட்டுத்தான் இருக்கேன். கடவுள் இன்னும் கொடுத்தா, இன்னும் செய்வேன்.''

அப்புறம்... அஜீத்?

"தன்னம்பிக்கை.''

- மனோ விக்டர்



வாழ்க மணமக்கள்



மணமகள்: சௌபாக்கியவதி **R.காமாக்ஷி**

கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் இளைய சகோதரர் புத்தமங்கலம் (லேட்) **R. ஜகதீச அய்யர்** அவர்களின் பௌத்திரி. சென்னை, திருவொற்றியூரில் உள்ள அருண் இண்டஸ்ட்ரீஸ் மற்றும் ஸ்ரீ சங்கர வித்யாகேந்திரத்தின் உரிமையாளர் திரு. **J.ரங்கநாதன்** திருமதி **நீலா ரங்கநாதன்** தம்பதியரின் செல்வப் புதல்வி.

மணமகன் சிர. S. சங்கர் என்கிற **வெங்கடசுப்ரமணியன்**

ஆவணம் பருத்தியூர் (லேட்) ஜகதீச அய்யரின் பௌத்திரன் புது டில்லி **J. ஸ்ரீராம்** திருமதி **மாலினி ஸ்ரீராம்** தம்பதியரின் சீமந்தப் புத்திரன்.

சௌ.காமாக்ஷி - சிர. S.சங்கரின் திருமண வைபவம் பிப்ரவரி 8-ம் தேதி வியாழக்கிழமை சென்னை நியூ G.G.மஹால் கல்யாண மண்டபத்தில் வெகு விமரிசையாக நடந்தேறியது. காலையில் நடந்த முகூர்த்தத்தின்போதும் மாலையில் நித்யஸ்ரீ மகாதேவனின் இன்னிசையுடன் நடந்த வரவேற்பின்போதும் ஏராளமான உறவினர்களும் நண்பர்களும் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்.



இரண்டு


காஞ்சிபுரம்
10.01.2007

அன்புள்ள அக்காவுக்கு...

தம்பி சம்பத்குமார் எழுதுவது. 'அன்புள்ள அக்காவுக்கு' என்று தொடங்கும் இந்தக் கடிதம் உனக்கு ஆச்சரியம் தரலாம்! எனக்கும்தான்!

யோசித்துப் பார்க்கையில் உன்னை அக்கா என்று நான் அழைத்த சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவு. விசேஷ தினங்களில் உறவினர்களின் ஜமா கூடுகையில், ஏதோவொரு கிழவி வெற்றிலை எச்சிலை கன்னத்தில் பதித்து "யாரு? சகுந்தலாவோட பையனா? வேற யார் யாரு வந்திருக்கீங்க?" என்று கேட்கையில், "அப்பா, அம்மா, அப்புறம் அக்கா!" என்று உன்னைச் சொல்லுவேன். தவிர, என் தோழர்களிடமும் உன் தோழிகளிடமும் உன்னை அக்கா என்று சொல்லியிருக்கிறேன். மற்றபடி என் அகராதியில் உன் பெயர்கள்: ராட்சஸி, குண்டுச்சி, ஓட்டைப்பல்லி.

அக்கா... உனக்கும் எனக்கும் இடையே எப்போது மிகப்பெரிய சுவர் எழுந்தது? தெரியாது. என்னைவிட ஆறு வயது மூத்தவள் நீ. எல்லா அக்கா - தம்பிகளையும் போலவே நாம் சண்டையிடாத நாட்கள் குறைவு. நினைவு தெரிந்து இன்பதற்கு



சிறப்புச் சிறுகதை

கடிதங்கள்!

நா.முத்துக்குமார்

பலப்பக்குச்சிகள் தீர்ந்த நாளொன்றின் பிற்பகலில் உன் பேனாவை நான் கடித்த போது நீ என்னை முதன்முதலாக அடித்தாய். வலியைவிட என் அலறல் அதிகமாக இருந்ததால் முதுகில் மீண்டுமொரு அடி. அன்று முதல் என் பார்வையில் நீ ராட்சஸி!

மழை பெய்யும் நாட்களில் உனக்குத் தெரியாமல் கிழிக்கப்பட்ட உன் கணக்கு நோட்டுத்தாள்கள் காகிதக் கப்பல்களாகி, மழை வெள்ளத்தில் மிதந்து செல்லும்.

தண்டவாளத் துண்டு காற்றில் ஒலியெழுப்ப பள்ளிக்கூடம் முடியும். உன் தோழிகளோடு நீ வீடு சேர்வாய். ஆற்றில் குளித்து உள்ளங்கை மணலெடுத்து... கரும்புத் தோட்டங்களில் இருட்டுக் கரும்புடைத்து... தொடரும் எங்கள் அட்டகாசம், கடைசியாக கிளை படர்ந்து நிற்கும் நாவல்பழ மரத்தில் வந்து நிற்கும். உனக்கான பங்கை என் ஜாமெட்ரி பாக்ஸ் சுமந்து வரும். வீடு வருகையில்நாவல் மரத்தின் உச்சியில் நான் இருந்த காட்சியை நீ சொல்லியிருக்க, அப்பாவுடன் பிரம்பும் வாசலில் கோபமாகக் காத்திருக்கும். என் ஜாமெட்ரி பாக்ஸிலிருந்து நாவல் பழங்கள் குரல் எழுப்பும் - "ராட்சஸி! ராட்சஸி!"

விடுமுறை நாட்களில் வீட்டுக்குத் தெரியாமல் வாடகை சைக்கிள் எடுத்துப் பெரிய வயதுப் பையன்ளுடன் நான் பயின்றுகொண்டிருக்க.... எந்தப் பக்கம் நீ வந்தாய்? எப்போது பார்த்தாய்? தெரியாது! சைக்கிளில் இருந்து விழுந்து முட்டியில் அடிபட்ட காயமும் அப்பாவின் விரல்கள் பதிந்த தடயமும் மாலை நேரத்தில் உன் பெயரைத்தான் சொல்லும் - "ராட்சஸி! 'ராட்சஸி!'

நீ சிவப்பு. கொஞ்சம் அசாதாரண அழகு என்றுகூடச் சொல்லலாம். உன் அழகு குறித்து எனக்கு கர்வம்கூட உண்டு. என்னை 'கறுப்பா' என்று அழைக்கையில் அந்த கர்வம் தோலுரித்துக் கிளம்பும்.

நானறிந்தவரையில் கடைசியாகப் பிறக்கிற பிள்ளைகள் இரவல் பொருட்களில்தான் காலம் தள்ளுகிறார்கள். ஒவ்வொரு வருடமும் உனக்கு மட்டும் பிரித்தால் வாசனை வரும் புதுப் புது புத்தகங்கள். எனக்கு... நீ பயன்படுத்திய கூர் உடைந்த பென்சில்;

நமக்கிடையில் சில வானவில் தருணங்களும் உண்டு. நான் காய்ச்சலில் படுத்திருந்தபோது உன் விரல்கள் என் நெற்றியைத் தடவி இருக்கின்றன. விளையாடும் நேரத்தில் என்னை சகமாணவர்கள் அடிக்கும்போது நீ எனக்காகச் சண்டையிட்டிருக்கிறாய்.

உறவின் அருமை பிரிவில்தான் தெரியுமென்று சொல்லுவார்கள். உனக்கென்ன? திருமணமாகி மாப்பிள்ளை வீடு சென்றுவிட்டாய். இந்த ஆறு மாத காலமாக வீட்டில் அனைவரும் உன் ஞாபகத் தூண்டில்களில் மாட்டிக்கொண்டு தவிக்கிறோம். நீ பறிக்காத பவழமல்லிகள் காற்றில் உதிர்கின்றன. வெயிலில் சென்று வரும் அப்பா, உன் பெயரைச் சொல்லித் தண்ணீர் கேட்டுவிட்டு நாக்கைக் கடிக்கிறார்.

நன்றாக நினைவிலிருக்கிறது. உனக்குக் கல்யாணமான மறுநாள் நீ மாப்பிள்ளையுடன் ஊருக்குக் கிளம்புகிறாய். வீடு முழுக்க உறவினர்களின் கலகல. வாசல்வரை வந்து அப்பாவும் அம்மாவும் உன்னை வழியனுப்புகிறார்கள். சட்டென்று சூழலின் சந்தோஷம் தொலைந்து ஓர் இறுக்கம் நிலவுகிறது. ரொம்ப நாளைக்குப் பிறகு நான் அழுததை அன்றுதான் மொட்டைமாடி நட்சத்திரங்களும் வியப்பாகப் பார்த்தன.

அக்கா... பால்யத்தின் புரியாத தருணங்களில் நாம் நமக்கிடையேயான

பராக்! பராக்! பர்ன் அவுட்!

சதா வேலை வேலை என்று அலைபவரா நீங்கள்? எச்சரிக்கை, உங்களுக்கு 'பர்ன் அவுட்' என்னும் மனநோய் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. எடுத்துக்கொண்ட வேலையை எப்பாடு பட்டேனும் செய்திட வேண்டும் என்று ஒரேயடியாக ஓடுபவர்களுக்கும், 'இவ்வளவு வருடங்கள் ஓயாது உழைத்தும், நான் எதிர் பார்த்த பதவி பலன் கிடைக்கவில்லை' என்று வருந்துபவர்களுக்கும்தான் இந்த மன அழுத்தப் பிரச்னை ஏற்படுகிறது என்கிறார்கள் உள வியலாளர்கள்.

வேலைக்கு மனதளவில் 'லீவு' கொடுத்து விட்டு மகிழ்ச்சியாக இருப்பது, குழந்தை குடும்பத்துடன் அதிக நேரத்தைச் செலவிடுவது போன்றவையே இந்த 'பர்ன் அவுட்' மனநிலைக்குத் தகுந்த சிகிச்சையாகும்.

- நளினி சம்பத்குமார்



கவிதை நொடிகளைத் தவறவிட்டு விட்டோம். ஒரே வீட்டில் அந்நியர்களாகத்தான் இந்த இருபது வருடங்கள் வாழ்ந்திருக்கிறோம். இனி விசேஷ தினங்களில் மட்டும்தான், நம் உறவுக் கிளைகள் பூக்கும். நாம் தொலைத்த இந்த இருபது வருடங்களை யார் தருவார்?

முக்கியமான விஷயத்துக்குத் தயங்கித் தயங்கி வருகிறேன். எழுதலாமா, வேண்டாமா என்று யோசித்தே இதை எழுதுகிறேன். நீ நேசித்த சண்முகசுந்தரத்துக்கே உன்னைத் திருமணம் செய்து கொடுத்திருக்கலாம். உன் காதலுக்கு வீட்டில் எதிர்ப்புக் கிளம்பியபோது நானாவது உன்னை ஆதரித்திருந்திருக்கலாம். மாறாக, உனக்கு வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்த்ததில் நான்தான் முன் நின்றேன். நீ எவ்வளவு உடைந்து போயிருப்பாய்? உன் கண்ணீர் என்னைத் துரத்திக்கொண்டே இருக்குமே. அக்கா... என்னை மன்னித்து விடு!

குற்ற உணர்வுடன் உன் தம்பி
சம்பத்குமார்

தஞ்சாவூர்
20.01.07

அன்புள்ள தம்பிக்கு...
அக்கா செண்பகவள்ளி எழுதுவது.

உன்னை மாதிரி எனக்குக் கவிதையா எழுத வராது. இங்க எல்லோரும் நல்லா இருக்கோம். அங்க அப்பா, அம்மா, எல்லோரும் நலமா? அம்மாவுக்கு இப்ப ஆஸ்துமா எப்படி இருக்கு? இங்க போன வாரம் பக்கத்து வீட்டுக்காரர் வண்டியில் போகும்போது லாரி மோதி கால்ல பயங்கர அடியாம். அப்பாவை கவனமா பார்த்து வண்டி ஓட்டச் சொல்லு.

அப்புறம் நம்ம வீட்டு லட்சுமி கன்னு போட்டுடுச்சா? உன்னோட லெட்டர் வந்ததும் என்னவோ ஏதோன்னு எனக்குக் கையும் காலும் ஓடலை. அப்புறம் நிதானமா படிச்சேன். தம்பி, நீ இன்னும் சின்னப் பையனாவே இருக்கே! சின்ன வயசுல உன் தலையணையை யாருக்கும் தர மாட்டேன்னு அடம்பிடிப்பே! உன் தட்டுலயும் யாரும் சாப்பிடக்கூடாது. விருந்தாளிங்க நடுவே தட்டு, தலையணை ரெண்டுலதான் பிரச்னை வரும். ஒரு தடவை என் பொறந்தநாளுக்கு எனக்கு மட்டும் அப்பா புதுப் பாவாடை வாங்கித் தந்தாருன்னு நீ பண்ண அடம் இருக்கே.... இப்ப நெனைச்சாலும் சிரிப்பு வருது.

உன்னோட லெட்டர் வந்த அன்னிக்கு நான் ரொம்ப சந்தோஷமா இருந்தேன். பொதுவா அன்னிக்கு முழு நாளும் எனக்கு சந்தோஷமான நாள்தான். காலையில் இவரும் நானும் பெரிய கோயில் போயிட்டு வந்தோம். ரொம்ப நாளா போகலாம் போகலாம்னுட்டு அன்னிக்குத் தான் கூட்டிட்டுப் போனாரு. வாசல்ல ரொம்ப ரொம்ப அடக்கத்தோட

நம்மை வரவேற்கிற பெரிய கோயில் உள்ளே போனதும் விஸ்வரூபம் எடுத்திருக்குதோன்னு தோணுற அளவுக்கு பிரமிப்பா இருந்துச்சு.

தஞ்சாவூர்ல எல்லா கோபுரமும் அடக்கமா இருக்கு. உயரமா ஒரு கோபுரத்தைக் கட்டி ரொம்ப தலைக்கனப்படாதேன்னு தலையில தட்டி, குள்ளமா நகக்கிட்ட மாதிரி தோணுது இங்க இருக்குற கோபுரங்களைப் பார்க்குறபோது! (அட, நான்கூடக் கவிதை மாதிரி எழுதறேனே!)

'காவிரி காவரி'ன்னு எக்கச்சக்கமா எழுதுவாங்களே... இங்க வந்து பார்த்தா சப்புன்னு ஆயிடுச்சு, வயசான கெழவியோட கிழிஞ்ச புடைவை மாதிரி தண்ணி ஓடுது.

பெரிய கோயிலைப் பத்தி சொல்ல வந்துட்டு எங்கேயோ போயிட்டேன். அப்புறம கோயிலுக்குப் போயிட்டு வந்து, அந்தச் சந்தோஷத்துல இருந்து விடுபடாத நேரத்துல உன்னோட லெட்டர் வந்துச்சு. நல்லவேளை... வீட்டுல எல்லோரும் தூங்கிட்டிருந்தாங்க. நான்தான் லெட்டரை எடுத்தேன்.

உன்னோட கையெழுத்தைப் பார்க்கும்போது உன்னையே பார்த்த மாதிரி ஒரு சந்தோஷம்.

தம்பி, நீ ரொம்ப குழம்பிப் போயிருக்கே, சொந்தங்கிறது ஒரு பல்லாங்குழி மாதிரி. அதுல காய் முடிஞ்சதும் காலிக் குழியைப் பார்த்து மலைச்சுடக்கூடாது. ஒவ்வொரு காலிக்குழிக்கு அப்புறமும் ஒரு புதையல் காத்துக்கிட்டிருக்கும்.

ஒரு காலகட்டத்துக்குப் பிறகு பழைய சம்பவங்களை நெனைச்சுப் பார்த்தா எல்லாமே சிரிப்பாத் தோணுது இல்லியா... நடந்ததையெல்லாம் நினைச்சா எனக்கும் இப்ப அப்படித்தான் தோணுது. நான் இங்க வந்த புதுசுல ஒரு வாரம் அழுதுட்டிருந்தேன். அப்புறம் அப்புறம் மனசு தெளிவாயிடுச்சு!

தம்பி... நீ குற்ற உணர்ச்சி படுற அளவுக்கு என்னோட காதல் ஒண்ணும் பெரிசில்லை. அவன் எங்கிட்ட காதலைச் சொல்றதுக்கே மூணு வருஷம் எடுத்துக்கிட்டான். அதுவும் இல்லாம அவனுக்குக் கீழே மூணு தங்கச்சிங்க வேற. இப்பவும் வேலை தேடிகிட்டிருக்கான். எப்படி அவனை நம்பி நான் கழுத்தை நீட்டறது? அப்பா, அம்மா செஞ்சதுதான் சரி! இவரு என்மேல ரொம்பப் பிரியமா இருக்காரு. இப்ப நான் பாதுகாப்பான உணர்வோடு இருக்கேன். நீ கெடந்து மனசை அலட்டிக்காதே!

அப்புறம்... போன வாரம் உன்னோட நண்பன் மகேஸ்வரனை இங்க தஞ்சாவூர் மார்க்கெட்ல பார்த்தேன். ஏதோ இன்டர்வியூவுக்கு வந்ததானாம். உன்னைப் பத்தி நிறையச் சொன்னான். நீ பக்கத்துத் தெரு துரைசாமி பொண்ணைக் காதலிக்கிறியாமே? கவிதை, கதைன்னு சுத்திக்கிட்டிருக்காம ஏதாவது கம்ப்யூட்டருக்குப் படி. இவரோட சொந்தக்காரர் சிங்கப்பூர்ல இருக்காரு. உனக்கும் வேலை பார்க்கறேன்னு சொன்னாரு. இவரோட தங்கச்சி இப்ப டாக்டருக்குப் படிக்கறா. நீ நல்ல நிலமைக்கு வந்ததும் இவருகிட்ட பேசலாம்னு இருக்கேன். காதல் கத்திரிக்காய்னு வெட்டியா அலையாதே! இது விஷயமா நான் அம்மாவுக்கும் லெட்டர் போடுறேன். வருத்தப்படாதே! வாழ்க்கையோட கணக்கு மெதுவாத்தான் புரியும்!

இப்படிக்கு

உன் அன்புள்ள அக்கா,

செண்பகவள்ளி



"நீங்க நடந்து போயிட்டு இருக்கும்போது உங்க மனைவிகிட்டே யிருந்து செல்ஃபோன் அழைப்பு வந்தா, டக்குனு அங்கேயே நின்னுடறீங்களே... ஏன்?"

"பொண்டாட்டி பேச்சைக் கேட்டுக்கிட்டு நடக்கிறேன்னு யாரும் சொல்லிடக் கூடாது பாருங்க, அதான்!"

- ஃபாத்திமா

19 வராது வரும்



பெண்களின் குழந்தைப் பேறின்மை பிரச்னையை ஆயுர்வேதத்தில் வந்யத்வம் என்கிறோம்.

குழந்தையின்மைக்கான காரணங்கள் :

சினைமுட்டை உற்பத்தி (Ovulation) : சினை முட்டை உற்பத்தி மாதந்தோறும் 'ஓவரி' எனப்படும் ஸ்த்ரீ பீஜத்திலிருந்து உற்பத்தியாக வேண்டும். பிட்யூட்டரி சுரப்பியின் குறைபாட்டினாலோ, அட்ரீனல் அல்லது தைராய்டு சுரப்பிகளின் குறைபாட்டினாலோ சினை முட்டை உற்பத்தி பாதிக்கப்படலாம்.

சினை முட்டைகள் progesterone என்கிற ஹார்மோனைச் சரியாக சுரக்காமல் போனால், கர்ப்பப்பை குழந்தையைத் தாங்கும் சக்தியைப் பெறாமல் போகக் கூடும்.

ப்ரோலேக்டின்: தாய்ப்பால் சுரக்க சக்தியாகச் செயல்படும் prolactin எனும் ஹார்மோன் அதிக அளவில் காணப்பட்டாலும் குழந்தையின்மை ஏற்படும்.



தைராய்டு சுரப்பி : இது அளவுக்குக் குறைவாக சுரப்பதும், அதிக உடல் பருமன், மனக்குழப்பங்கள், அதிக வேலைச்சுமை ஆகியவையும் பெண்களின் மகப்பேறின்மைக்குக் காரணங்கள்.

ஃபேலோபியன் குழாய்: ஃபேலோபியன் குழாயில் ஏற்படும் அடைப்பு, புண்கள், அக்குழாயில் ஏற்படக் கூடிய கர்ப்பம் ஆகியவையும் காரணங்களாகும்.

கர்ப்பப்பை வாயின் கபத்தன்மை :
சினைமுட்டை உற்பத்தியாவதற்கு முன்பு கர்ப்பப்பையின் வாயில் கபத்தன்மை உண்டாகும். இந்தக் கபத்தினால்தான் விந்தணுக்கள் முன்னோக்கி நகரும். இச்சமயத்தில் இந்தக் கப / நீர்த்தன்மை மாறுபடுமேயானால் கர்ப்பம் ஏற்படாது. இந் நீர் சில சமயங்களில் விந்தணுவை அழிக்கக் கூடியதாகவும் இருக்கலாம்.

பாலி சிஸ்டிக் ஓவரியன் சின்ட்ரோம்:
இந்த நோய் இன்றைய பெண்களிடையே அதிகமாகக் காணப்படுகிறது. சினைப்பையில் நீர்க் கட்டிகள் காணப்படுவதால் அவை பருத்து வீங்கிக் காணப்படும்.

இந்தப் பிரச்னை உள்ளவர்களுக்கு ஆண்களுக்குச் சுரக்கக் கூடிய ஆன்ட்

மாணிக்கம்!

ரோஜன் ஹார்மோன் அதிகமாகச் சுரக்கும். இந்நோய் 7 - 10 சதவிகிதம் பெண்களிடையே இன்று காணப்படுகிறது. பிட்யூட்டரி சுரப்பியில் இருந்து லூட்டினீஸிங் ஹார்மோனும் அதிக அளவில் சுரக்கும். பருவமடைந்த இளம் பெண்களுக்கு இந்த ஹார்மோன் பிரச்னை வந்தால் மாதவிடாய் சுழற்சி சீராக இருக்காது. சினை முட்டை உற்பத்தியாகாது. மேலும் முகப்பரு அதிகமிருக்கும். குரலில் மாற்றம் ஏற்படும். மார்பகம் சிறிதாக இருக்கும். உடலில் தேவையில்லாத இடங்களில் கூட முடி வளரும். அதேபோல் இன்சுலின் உற்பத்தி அதிகமாகக் காணப்படும், அல்லது இன்சுலின் சரியாக வேலை செய்யாது. உடல்பருத்திருக்கும், மாதவிடாய் வந்தால் சீக்கிரத்தில் நிற்காது.

பெண்களின் குழந்தைப் பேறின்மையை நான்கு கோணங்களில் அணுகுகிறது ஆயுர்வேதம்.

ருது : ஆர்த்தவ ஸ்வரணம் என்கிற இருபத்தெட்டு நாட்களுக்கு ஒருமுறை வருகின்ற மாதவிடாய் சீராக நடைபெற வேண்டும்.

க்ஷேத்ரம் : ஆரோக்கியமான ஆர்த்தவக ஸ்ரோதங்கள் - அதாவது சினை முட்டையுடன் சேர்ந்த கர்ப்பத்தைத் தாங்குகின்ற கர்ப்பப்பை போன்ற உறுப்புகள்.

அம்பு: பெண்களுக்குக் கிடைக்கும் ஊட்டச்சத்து.

பீஜம்: சினை முட்டை.

இந்த நான்கும் சரியாக இருந்தாலும், விதிவசத்தால்தான் கர்ப்பம் தரிக்கிறது என்கிறார் ஆயுர்வேதத்தின் தந்தையான ஸுச்ருதர்.

சிகிச்சை:

மாதவிடாய் நின்ற பன்னிரண்டாவது நாளிலிருந்து நல்லெண்ணெயில் முழு உளுந்தை வடைபோல் செய்து சாப்பிட, முறையாக, சீராக மாதவிடாய் வரும். இவற்றின் உஷ்ண குணத்தால் சினை முட்டைகளை எளிதில் உருவாக்கும் தன்மை விளைகிறது. (நவீன மருத்துவம் இதனை inducing ovulation என்கிறது.)

சினை முட்டை உற்பத்தியில் குறைபாடு இருப்பின் ஸப்தஸாரம் கஷாயம், சதகுப்பை சேர்ந்த கணாசதாக்வாதி






டாக்டர் எல்.மஹாதேவன்

கஷாயம் போன்ற கஷாயங்களைக் கொடுக்கலாம். சினை முட்டையை உருவாக்குவதில் சதகுப்பை சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது. சதகுப்பை எண்ணெய், முக்கிய மருந்தாகும். வெள்ளைப் பூண்டு, மாதுளம் பூ, சோராங்கொட்டை, கொள்ளு, சிறுதேக்கு போன்றவையும் இதற்கு அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன.

இக் குறையுள்ள பெண்களுக்கு பல சர்ப்பீஸ், மஹா கல்யாணக கிருதம் போன்ற நெய்களை உண்ட பின்பு, சுகுமார ஏரண்டம்



அல்லது கல்யாணக குடம் போன்ற மருந்துகளினால் மலசுத்தி (எனிமா) க்ஷீரபலா எண்ணெய் கொண்டு செய்வது சிறந்ததாகும்.

சினை முட்டை உருவாகவில்லை என்றால் திப்பிலிப் பொடியைத் தினம் சிறிய அளவில் சேர்த்துக் கொடுப்பது சிறந்த சிகிச்சையாகும்.

சினைக் குழாயில் ஏற்படும் அடைப்புக்கு நவீன மருத்துவமே சிறந்தது.

Poly Cystic Ovarian Disorder நோயுடையவர்கள் உடற் பயிற்சி செய்வது, இனிப்புகள், எண்ணெய் பதார்த்தங்கள் போன்றவற்றைத் தொடாமல் இருப்பது சிறந்தது. இந் நிலையில் மாதவிடாய் வராது; அப்படியே வந்தாலும் நிற்காது. மாதவிடாய் வராத நிலையினைக் கபவாதமாகவும், வந்தால் நிற்காத நிலையை வாதபித்த நிலையாகவும் கருதி சிகிச்சை தருகிறோம். இதற்குச் சிகிச்சையினை மாற்றி மாற்றிச் செய்ய வேண்டும். மாதவிடாய் இரத்தப் போக்கு அதிகமாக இருக்கும்போது வெள்ளிலோத்திப்பட்டை, அசோகம், கொம்பரக்கு, செம்பருத்திப் பூ, பால் முதுப்பன் கிழங்கு, கருங்காலி, மஞ்சள்,

"விதி வசத்தால்தான் கர்ப்பம் தரிக்கிறது என்கிறார் ஆயுர்வேதத்தின் தந்தையான ஸுச்ருதர்!"

நெல்லிக்காய், அசோகப் பட்டை போன்றவை மிக்க பலனுள்ளவையாகக் கருதப்படுகின்றன. மேலும் இந்நோய்க்கு வஸ்தி மிகவும் இன்றியமையாத சிகிச்சை ஆகும்.

எத்தனை சிகிச்சைகளை அளித்தாலும், ஸுச்ருதர் கூறியதைப் போல் விதி வசத்தாலும் குழந்தையின்மை ஏற்படும். இதற்கு தெய்வீக சிகிச்சையாக ஸந்தான கோபால மந்திரம், ஸந்தான பரமேச்வர மந்திரம், திலஹோமம், கர்பர க்ஷாம்பிகை கோயிலுக்குச் செல்லுதல், இராமேஸ்வரம் செல்லுதல் போன்றவை இறைநிலை வழிபாட்டுச் சிகிச்சையாக கருதப்படுகின்றன.

(தொடரும்)

தன்வந்தரி டாலர் பரிசுப் போட்டி - 16

பிரசவத்துக்குப் பின் தாய்மார்களுக்குக் கொடுக்க வேண்டிய பத்திய உணவுகளையும், வீட்டில் செய்யக்கூடிய பிரசவக் கைமருந்துகளையும் எழுதி அனுப்புங்கள். சிறந்த குறிப்புக்கு முதல்பரிசாக டாக்டர் மஹாதேவன் தன்வந்தரி டாலர் பரிசளிப்பார். இரண்டாவது பரிசாக டாக்டர் எல்.மஹாதேவனின் தேவ மருந்து முதல் பாகம் பரிசளிக்கப்படும்.

கடைசி தேதி : 5.3.2007.
ஆசிரியரின் தீர்ப்பே இறுதி

Gurunathar Charanam

PRASHANTI

(HOUSE OF SILK COTTONS)

பிரசாந்தி புகழுக்கு மேலும் பெருமை சேர்த்த

மங்கையர் மலர் பிப்ரவரி - 2007 இதழுக்கு

வாசகர்கள் / வாடிக்கையாளர்கள்

அளித்த வரவேற்புக்கு **நன்றி!!**



Avail Prashanti's UGADI TAMIL NEW YEAR Special Offer!!!

For Purchases...

Upto Rs 5000 -	5 %
5001 to 10000 -	7 %
10001 to above -	10 %

* Cards Accepted

At Chennai
Mar 01 - April 13, 2007

PRASHANTI,
(Temporarily Shifted to Next Street)
16, 5th Cross St, C.I.T. Colony,
(Behind Chettiar Hall),
Mylapore, Chennai - 4.
Ph: 24991850 / 24997636.

At Bangalore
Feb 22 to Mar 22, 2007

PRASHANTI'S PARIPURNA
52, 4th Main, 17th Cross,
Malleswaram,
Bangalore - 55.
Ph: 23341632 / 98861 85951.

Sale also @ Bangalore
Mar 8,9,10 - 2007

SHREE DEEPAM DELUXE HALL
28, 9th Main Rd, (Nr. Mono Type)
Banashankari IInd Stage
Bangalore - 70.
Ph: 6919126 / 26710210
Timing : 10am - 8pm

சில்க் காட்டன் என்றாலே பிரசாந்தி
லைட்வெயிட் பாலிகாட்டன் என்றாலும் பிரசாந்தியே!!!

SRI SWARNAMBIGAI ALL INDIA TRAVEL CO. SALEM - 636001.

யாத்திரை

தனி 3 -Tier கேரேஜ் மற்றும் ரிசர்வேஷன் மூலம் முதல் தரமான சைவ உணவு, தங்கும் வசதிகளுடன் கீழ்கண்ட பயணங்கள் புறப்பட உள்ளன.

16. 03. 07	-	16 நாட்கள் பஞ்சதுவாரகை யாத்திரை
02. 04. 07	-	13 நாட்கள் குலு.மணாலி பயணம்
16. 04. 07	-	20 நாட்கள் காசி யாத்திரை (தனி கேரஜ்)
18. 04. 07	-	12 நாட்கள் டார்ஜிலிங் பயணம்
30. 04. 07	-	13 நாட்கள் நேபாளம் - முக்திநாத் யாத்திரை
13. 05. 07	-	8 நாட்கள் ஆந்திரா பயணம்
26. 05. 07	-	6 நாட்கள் கேரளா பயணம்
09. 05. 07	-	20 நாட்கள் காசியாத்திரை (தனி கேரேஜ்)

மற்றும் அந்தமான் பயணம். -:விபரங்களுக்கு:-

Murali/slm/9362110604

®

ஸ்ரீஸ்வர்ணாம்பிகை ஆல் இந்தியா டிராவல் கம்பெனி

(Recognized by the Ministry of Tourism, Government of India)

ஸ்ரீதர் காம்ப்ளக்ஸ், 124/1, டவுன் இரயில்வே ஸ்டேஷன் ரோடு, சேலம் - 636 001

போன்: **0427 - 2450622, 2450633, 2450644, 4051991,** வீடு: **2416387**

செஞ்சுரி அடிப்பது

கிரிக்கெட்டில் மட்டுமல்ல... 'ப்ளஸ் டூ' பொதுத் தேர்விலும் செஞ்சுரி அடிப்பவர்கள்தான் அதிக கவனம் பெறுகிறார்கள். அப்படிப்பட்ட ஒருவர்தான் அஸ்வின்! சொல்லி வைத்து, நான்கு பாடங்களில் செஞ்சுரி அடித்தவர், இதோ வெற்றிக்கான வியூகத்தைச் சொல்லித் தருகிறார்...

"தேர்வு நெருங்கிவிட்டது. இந்தச் சமயம் பார்த்து உலகக் கோப்பை கிரிக்கெட் வேறு நம்மை ஆசை காட்டுகிறது. சச்சின் செஞ்சுரி அடிப்பாரா, லாரா செஞ்சுரி அடிப்பாரா என்கிற ஆவலை ஒதுக்கி வைத்துவிட்டு நாம் செஞ்சுரி அடிக்க என்னென்ன செய்ய வேண்டும் என்று திட்டமிடுவதுதான் புத்திசாலித்தனம்.



நான் பள்ளியில் படிக்கும்போது கணிதம், இயற்பியல் பாடங்களைத் தவிர, வேறு எதிலும் செண்டம் வாங்கியது கிடையாது. ஆனால் பொதுத் தேர்வில் மொழிப் பாடங்களைத் தவிர, இதர தேர்வுகளில் செண்டம் வாங்குவதில் எந்தத் தடங்கலும் இருக்காது. 'நம்மால் செண்டம் நிச்சயம் வாங்க முடியும்' என்கிற எண்ணத்தை மனத்தில் ஆழமாக விதைக்க வேண்டும். சிந்தனை தெளிவாக இருக்க வேண்டிய காலகட்டம் இது. கடந்த ஒரு வருடமாகப் பாடப் புத்தகங்களைப் புசித்த நீங்கள், இப்போது படித்ததை நினைவூட்டிக் கொள்ளும் காலம்.



கேள்வித்தாள்களின் வடிவமைப்பை முன் கூட்டிய

நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். சாய்ஸ் கேள்விகளை எப்படிக் கேட்கிறார்கள், அதை நமக்குச் சாதகமாக எப்படிப் பயன்படுத்துவது என்று திட்டமிட வேண்டும். பழைய கேள்வித்தாள்களை எழுதிப் பார்த்துப் பழக வேண்டும். இதனால் கேள்விகள் எப்படி கேட்கப்படுகின்றன என்பதில் தெளிவு கிடைக்கும்.

கணிதப் புத்தகத்திலுள்ள கணக்குகளை தினமும் செய்து பார்த்து பயிற்சி எடுப்பது அவசியம். இந்த விடை சரியா, தவறா என்று 'ப்ருவ்' பண்ணச் சொல்லி பத்து மதிப்பெண்களுக்கான கேள்விகள் கேட்கப்படும். இவற்றைத் தவிர்க்கவே கூடாது. இந்தக் கணக்குகளில் இதுதான் விடை என்று தெரிந்துவிடுவதால், கடைசி நேரத்தில் மண்டையை உடைத்துக் கொள்ள வேண்டியதில்லை. அதேபோல சென்டிமீட்டர், மில்லிமீட்டர் போன்ற யூனிட்டுகள் எழுதுவதில் எக்காரணம் கொண்டும் பிழை நேர்ந்துவிடக் கூடாது. இந்தப் பிழைகளால்தான் சொற்ப மதிப்பெண்களில் பலரும் சென்டமை இழந்திருக்கிறார்கள்.

இயற்பியல் பாடத்திலும் நிறைய கணக்குகள் உண்டு. அவற்றை எழுதினால்

எப்படி?

மதிப்பெண்கள் முழுதாகக் கிடைப்பதோடு நேரமும் நிறைய மிச்சமாகும். தியரி பதில்களில் பாயிண்ட்ஸ் போட்டு எழுதினால் அழகாகவும் இருக்கும்; முழு மதிப்பெண்களும் கிடைக்கும். முக்கியமான விஷயங்களை அடிக்கோடிட வேண்டும். இதற்காக நிறைய நேரம் எடுத்துக்கொள்ளவும் கூடாது. வரைபடங்களை ஓயாமல் வரைந்து பழகுங்கள். அப்பொழுதுதான் தேர்வில் வேகமாக வரையமுடியும்.

நான் நிறைய நேரம் செலவிட்டது வேதியியலுக்குத்தான். ஈகுவேஷன்களும் சென்டமை நிர்ணயிக்கும். ஈகுவேஷன்கள் தொடர்பான பதில்களை எழுதும்போது, ஒரு மார்க் கேள்விகளுக்காக ஒவ்வொரு பாடத்துக்கும் ஒரு நாளை செலவழியுங்கள். பத்து மதிப்பெண்களாவது எப்படியாவது வாங்கிவிடலாம். ஆனால், இந்த ஒரு மார்க் கேள்விகள்தான் நம் கழுத்தைப் பிடிக்கும்.



+2

தேர்வு நெருங்கும் வாரத்தில் நன்றாகத் தூங்கி உடலையும் மனதையும் தயாராக வைத்துக்கொள்ளுங்கள். எந்தப் படபடப்பும் வேண்டாம். இனி புதிதாகப் படிக்க எதுவும் இல்லை என்று நான் தேர்வு ஆரம்பிக்கும் மூன்று மணி நேரத்துக்கு முன்பு புத்தகத்தை மூடி வைத்துவிட்டேன். அதனால் எனக்கு டென்ஷன் ஏற்படவில்லை.

தேர்வுக்குச் சில மணி நேரங்கள் முன்பு மனது முழுக்க நம்பிக்கையைப் படரவிடுங்கள். பிறகு பாருங்கள், செஞ்சுரி அடிக்கப் போவது நீங்களாகத்தான் இருக்கும்."

- ச.ந.கண்ணன்

(நிறைந்தது)

2002ஆம் ஆண்டு பொதுத் தேர்வில் கணிதம், இயற்பியல், வேதியியல், கம்ப்யூட்டர் சயின்ஸ் என நான்குப் பாடங்களிலும் நூற்றுக்கு நூறு வாங்கி 1186 மதிப்பெண்களைப் பெற்ற அஸ்வின், சென்னை பம்மலிலுள்ள ஸ்ரீசங்கரா வித்யாலயா பள்ளி மாணவர். எம்.ஐ.டி.யில் ஏரோனாடிக்கல் இன்ஜினியரிங் முடித்து, இப்போது இந்தியப் பாதுகாப்பு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தில் விஞ்ஞானியாகப் பணியாற்றி வருகிறார்.





போட்டி முடிவு

கடந்த 7.1.2007 இதழில் 'காதல் ஹைக்கூ' எழுதக் கேட்டிருந்தோம். குவிந்த படைப்புகளில் சிறந்தவையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டு தலா ரூபாய் 250/- பரிசு பெறும் ஹைக்கூக்கள்...



எட்டாவது ஸ்வரம்!

கடுங்கோபம் உன்மேல்
சண்டையிட வேண்டும்
முகத்தை மூடிக் கொள்.

- சு.மோகன்,
சிதம்பரம்

உன் மௌனத்தை
மொழிபெயர்க்கின்றன
பாதக் கொலுசுகள்!

- ஸ்ரீ பிரசாத்,
சாலியமங்கலம்

அழகிய பௌர்ணமி
நீ வரவில்லை
எங்கும் இருட்டு.

- ஜி.பி.சதுர்புஜன்,
சென்னை - 33

நிலவும்
காதலித்தது
மொட்டை மாடியில் நீ!

- வே.சித்ரா,
கும்மிடிப்பூண்டி

எட்டாவது ஸ்வரம்
அவள்
சிரிப்பு!

- ஆர்.ஜெயசீலன்,
மன்னார்குடி

காதலித்துத் திருமணம்
செய்து கொண்டு
பெற்றான்
விவாகரத்து!

- ஜி.ஸ்ரீனிவாசன்,
சென்னை - 91

காதல் சமாதிகளில்
பூப்பதேயில்லை
ஜாதி மல்லி!

- வந்தை முருகுபாரதி,
வந்தவாசி

ஊரிலிருந்து நீ வந்துவிட்டதை
கொடிக்கயிறு சொல்லியது
தாவணிகளைச் சுமந்து!

- மலை அரசன்,
அருகந்தம்பூண்டி

இப்போது விற்பனையில்...
வாசியோக வள்ளல் மகரிஷியின் கணிப்பில் மார்ச் இதழ்



ஞான சிந்தாமணியுடன் சர்வஜித் வருட முழு பஞ்சாங்கம்

ஏராளமான சிறப்பம்சங்களுடன், கூடுதல் பக்கங்களுடன்
முழுமையான திருக்கணித பஞ்சாங்கம். விலை.ரூ50/-

<u>முகவர்கள் இல்லாத ஊர்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

ஞானசிந்தாமணி (ஜோதிட, ஆன்மீக, மருத்துவ மாத இதழ்)
285,என்.எச்.ரோடு, கோயமுத்தூர் 641 001
போன். 0422 2399934, செல். 94433 01314

GUJARAT TOURISM

வட இந்திய சுற்றுலாக்கள்

இரயிலிலும் ஆகாரத்துடன் மற்றும் LTC / LFC வசதியுடன்

Authorised Agent aptdc

சிம்லா, குளுமணாலி, அமிர்தசரஸ், பொற்கோயில், ஆக்ரா, மதுரா, டெல்லி ரூ. 7290/– 12 நாட்கள்
புறப்படும் தேதிகள் 29.03.07 17.04.07 03.05.07 17.05.07

குளுமணாலி, ரோத்தாங்பாஸ், ஆக்ரா, மதுரா, டெல்லி ரூ. 6450/– 10 நாட்கள்
புறப்படும் தேதிகள் 31.03.07 21.04.07 05.05.07 22.05.07

காசி, கயா, அலகாபாத், ஹரித்துவார், ரிஷிகேஷ், ஆக்ரா, மதுரா, டெல்லி ரூ. 7550/– 13 நாட்கள்
புறப்படும் தேதிகள் 08.04.07 22.04.07 13.05.07 20.05.07

டார்ஜிலிங், கேங்டாக், சாங்குவேலி, பூரி, புவனேஸ்வர், கொணார்க், கொல்கத்தா ரூ. 6975/– 11 நாட்கள்
புறப்படும் தேதிகள் 30.03.07 23.04.07 06.05.07 19.05.07

ஜம்மு, வைஷ்ணவதேவி கோயில், ஜெய்ப்பூர், அமிர்தசரஸ், ஆக்ரா, சிக்ரி, டெல்லி ரூ. 7350/– 12 நாட்கள்
புறப்படும் தேதிகள் 18.04.07 09.05.07 23.05.07

Tour க்காகும் மொத்த தொகையில் – இரயில் மற்றும் பஸ் கட்டணம் L.T.C. மூலம் Claim செய்து கொள்ளலாம்

SINGAPORE - MALAYSIA - TOUR

8D / 7N - Rs. 33,000. Incl : Airfare, Visa Air Port Tax, A/c Accom, B/F, A/c.Transport, Entry fee

கம்பெனி குரூப் டூர்/ரோட்டரி/லயன்ஸ் Club குரூப் டூர்களுக்கு அணுகவும், எங்களுடன்
திண்டுக்கல் ரோட்டரி கிளப் மூலம் 70 நபர்கள் வட இந்தியா சுற்றுலா சென்று வந்துள்ளனர்.

Cost Inclusive : Sleeper Train Fare, Hotel Accd., 2 x 2 Bus Facility & Food

METRO TRAVELS

67, Basha Street, Choolaimedu, Chennai - 600 094.
E-mail : metrotravelsindia@yahoo.co.in Website : metrotravelsindia.com

Ph : 2374 2994, 2374 2466
Cell : 9841577615, 98411 36563
Fax : 2374 2882

சில ஆண்டுகளுக்கு முன்புவரை, நம்முடைய தொலைக்காட்சிகளில் ஒன்றிரண்டு சேனல்கள்தான் இருந்தன. அவையும் நாளுக்குச் சில மணி நேரங்கள் மட்டும் சோகையாகப் படம் காட்டி விட்டு இராத்திரியானதும் சமர்த்தாகத் தூங்கப் போய்விடும். ஆனால் இன்றைக்கு? நூற்றுக்கணக்கான சேனல்கள்!

தொலைக்காட்சி பார்க்கிற மக்களின் எண்ணிக்கை அதிகரித்து, புதுப் புது எதிர்பார்ப்புகள், தேவைகள் அதிகரிக்க, அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு ஏராளமானவர்கள் கிளம்பி வந்துவிட்டார்கள்.

சாஃப்ட்வேர் சந்தையும் இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக உருவான விஷயம்தான். பில் கேட்ஸ் கூட்டாளிகள் சாஃப்ட்வேர் எழுதப் புறப்பட்ட காலத்தில், அதற்கான தேவைகள் குறைவு. இதனால், அங்கொன்றும் இங்கொன்றுமாக வெகு சிலர்தான் இதில் ஈடுபட்டிருந்தார்கள்.

இப்படி அபூர்வமாக சாஃப்ட்வேர் எழுதியவர்களும்கூட, அதை விற்றுப் பணம் சம்பாதிக்க எண்ணவில்லை. அப்படியே விற்றாலும், குடிசைத் தொழில் போல ஒரு சிலர்தான் அதை வாங்க முன்வருவார்கள் என்பதால், 'நீ எழுதிய சாஃப்ட்வேரை நான் பயன்படுத்துகிறேன், நான் எழுதியதை நீ பயன்படுத்து' என்று ஒருவருக்கொருவர் இலவசமாகத்தான் விநியோகித்துக் கொண்டிருந்தார்கள்.

இதெல்லாம் பில் கேட்ஸுக்குப் பிடிக்கவில்லை. 'கஷ்டப்பட்டு நான் சாஃப்ட்வேர் எழுதுகிறேன். அதை இலவசமாகக் கொடுப்பதா?'

ஒரு பொருளுக்குத் தேவையிருந்தால், நிச்சயமாக அதைக் காசு கொடுத்து வாங்கிக் கொள்வார்கள் என்ற எண்ணத்தோடு, தனது மைக்ரோசாப்ஃடைத் தொடங்கியவர், உரிமை அடிப்படையில்தான் தனது மென்பொருள்களை விற்பனை செய்து கொண்டிருந்தார்.

பில் கேட்ஸ் ஒருவர்தான் இப்படி விற்றுக் கொண்டிருந்தார். மற்றவர்கள் எல்லோரும் இலவசமாகவே விநியோகித்துக் கொண்டிருந்தார்கள்.

இதனால் மைக்ரோசாஃப்டின் மென்பொருள்களை விலை கொடுத்து வாங்கியவர்கள், அதைப் பல பிரதிகள் எடுத்துத் தங்களுடைய நண்பர்களுக்கெல்லாம் விநியோகிக்கத் தொடங்கினார்கள். பில் கேட்ஸும் தோழர்களும் ராத்திரி பகலாகக் கண் விழித்து எழுதிய சாப்ட்வேரெல்லாம் திருட்டு வி.சி.டி. கணக்காகத் தெருவில் மிதிபட்டன.

இதைக் கேள்விப்பட்ட பில் கேட்ஸ் கொதித்துப்போய் ஆவேசமாகச் சண்டை போட, சுற்றியிருந்தவர்கள் கிண்டலாகச்



8

என்.சொக்கன்



சிரித்தார்கள்.

'இந்தத் துறையில் இதெல்லாம் ரொம்ப சகஜம் கேட்ஸ்' என்று அவருக்கு அறிவுரை சொன்னார்கள். ஆனால் அவர் மனது சமாதானமாகவில்லை. தன்னுடைய சாப்ட்வேரைத் திருட்டுத்தனமாகப் பதிவு செய்கிறவர்கள் எல்லோருக்கும் ஒரு பகிரங்கக் கடிதம் எழுதினார் பில் கேட்ஸ். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அந்தக் கடிதம், ஒரே இராத்திரியில் அவரை மிகப்பெரிய அளவில் பிரபலமாக்கியது.

'ஏ தாழ்ந்த சாப்ட்வேர் திருடர்களே' என்கிற தொனியில் தொடங்கி, பில் கேட்ஸின் வழக்கமான, மிக நேரடியான பாணியில் தொடர்ந்து அந்தக் கடிதம்.

கில்லாடி!

படித்தவர்கள் ஒவ்வொருவரையும் திகைப்பிலும் ஆச்சர்யத்திலும் ஆழ்த்தியது.

'நானும் என் நண்பன் பால் ஆலெனும் சேர்ந்து, கிட்டத்தட்ட ஒரு வருட காலமாக உழைத்து, நிறைய பணமும் நேரமும் செலவழித்து ஒரு சாஃப்ட்வேர் எழுதியிருக்கிறோம். அதைப் பயன்படுத்தியவர்கள் எல்லோரும் பாராட்டுகிறார்கள்' என்று பெருமிதத்துடன் அதில் சொன்ன கேட்ஸ், மெதுவாக அடுத்த குண்டைத் தூக்கிப் போட்டார்.

'ஆனால், இப்படிப் பயன்படுத்துகிறவர்களில் பலர் அதைக் காசு கொடுத்து வாங்கவில்லை. இதனால், எங்களுக்குப் பைசா பிரயோஜனமில்லை. எங்கள் உழைப்புக்கு மரியாதையும் இல்லை. நீங்கள் எல்லோரும் ஹார்ட்வேர் காசு கொடுத்து வாங்குகிறீர்கள். ஆனால், சாஃப்ட்வேரைத் திருடுகிறீர்களே, இது நியாயமா?' அந்தக் காலத்தில் கணினி வட்டாரங்களில் இந்தக் கடிதம் ஏற்படுத்திய பரபரப்பு, மிகத் தீவிரமான அதிர்வுகளை உண்டாக்கியது. பில் கேட்ஸின் கருத்துகளை ஏற்றும், மறுத்தும் ஏராளமானவர்கள் வாதாடக் கிளம்பினார்கள்.

ஆனால், கேட்ஸ் தனது எண்ணத்திலிருந்து கொஞ்சமும் அசையாமல் இருந்தார். அவருடைய உறுதியான நம்பிக்கைதான் இந்தத் துறைக்கே அஸ்திவாரமாக அமைந்தது.

மென்பொருள் துறை மிகப் பெரியதாக வளரப்போகிறது என்று நம்பிய கேட்ஸுக்கு, எந்நேரமும் மைக்ரோசாஃப்டின் அடுத்த முயற்சி என்னவாக இருக்க வேண்டும் என்பதுதான் ஒரே சிந்தனை.

மக்கள் காசு கொடுத்து சாஃப்ட்வேர் வாங்க மறுக்கிறார்கள் என்றால், பயனாளர்களுக்கு ஆர்வம் ஊட்டும்படியான சாஃப்ட்வேர்களை அப்போது யாரும் உருவாக்கவில்லை என்பதுதான் உண்மை.

அதற்கேற்ப மைக்ரோசாஃப்டின் அடுத்தடுத்த தயாரிப்புகளை அமைத்துக் கொண்டார்.

இதில் கவனிக்க வேண்டிய விஷயம், இந்த மென்பொருள்களில் பல, மைக்ரோசாஃப்டால் முதன்முறை உருவாக்கப்பட்டவை அல்ல. சந்தையில எதற்குத் தேவை இருக்கிறது என்பதைக் கவனித்து, அந்தத் தேவையைப் பூர்த்தி செய்யும்விதமாக ஒரு மென்பொருளை வடிவமைத்துவிடுவது



பில் கேட்ஸின் சாமர்த்தியம்.

கில்லாடித்தனமான இந்த உத்தி, பின்னாள்களில் கேட்ஸுக்கும், மைக்ரோசாஃப்டுக்கும் மிகப்பெரிய வெற்றிகளைச் சம்பாதித்துக் கொடுத்தது.


தன்னுடைய மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் தகுதி, திறமையில் பில் கேட்ஸுக்குக் கொஞ்சம்கூட சந்தேகம் இல்லை. ஆனால், உலகத் தரத்தில் எடுத்த ஒரு படம், நாலே நாளில் பெட்டிக்குள் போய்விடுவதுபோல, அவர்கள் கஷ்டப்பட்டு எழுதுகிற சாஃப்ட்வேர்களை வாங்கிப் பயன்படுத்த ஆளில்லை. இதனால் மைக்ரோசாஃப்டின் கல்லாப் பெட்டியில் காசு இல்லை.

இதனால் மென்பொருள் விற்பனைதான் தன்னுடைய ஒரே நோக்கம் என்று முடிவு கட்டிவிட்டார் பில் கேட்ஸ், இதற்காக, ஆசை ஆசையாக சாப்ட்வேர் எழுதக் கற்றுக்கொண்ட அந்தத் தொழில்நுட்பப் புலி, அதிலிருந்து சற்றே விலகி, விற்பனையில் முழு கவனம் செலுத்தக் கூடத் தயாராக இருந்தது.

அமெரிக்காவில் மட்டுமின்றி, உலகம் முழுவதும் கணினி ஆர்வலர்கள் இருக்கிறார்கள் என்பதைக் கவனித்தார் கேட்ஸ். புதிதாக உருவாகிக் கொண்டிருக்கும் மென்பொருள் சந்தையை முழுவதுமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமானால், அங்கெல்லாம் மைக்ரோசாஃப்ட் விரிவடைய வேண்டும் என்று விரும்பினார்.

ஆனால், அப்போதைய மைக்ரோசாஃப்ட், வெளிநாடுகளில் கிளை நிறுவனங்கள் தொடங்குகிற அளவுக்கு வலுவானதாக இல்லை. இதனால், தன்னந்தனியராகப் பல நாடுகளுக்குச் சுற்றி, தன்னுடைய நிறுவனத்தைப் பற்றிய விளம்பர நோட்டீஸ்களை விநியோகித்துக் கொண்டிருந்தார்.

• இளவயதில் கேட்ஸ்



"இன்றைக்குப் பல கோடிக்கு அதிபதியான மைக்ரோசாஃப்ட், அன்றைக்கு கல்லாப்பெட்டி காலியான கம்பெனி!"

அப்போதெல்லாம் கணினி மென்பொருள் சம்பந்தப்பட்ட எந்தக் கண்காட்சியிலும் மைக்ரோசாஃப்டின் குட்டியூண்டு ஸ்டால் ஒன்றைப் பார்க்கலாம். அதில் சோடாப் புட்டிக் கண்ணாடியுடன் பில் கேட்ஸ் உட்கார்ந்திருப்பார்.

எந்த நாடு, எப்படிப்பட்ட மக்கள் வாழ்கிறார்கள், உள்ளூர் மொழி என்ன, அவர்களுடைய கலாசாரம் எந்த மாதிரியானது? எதைப்பற்றியும் அவர் கவலைப்படவில்லை. அந்த ஊரில் மைக்ரோசாஃப்ட் தயாரிப்புகள் விலை போகுமா? ஆம் எனில், பெட்டியைத் தூக்கிக்கொண்டு கிளம்பிவிடுவார்.

சுருக்கமாகச் சொன்னால், நம் ஊர் 'மெடிக்கல் ரெப்ரசன்டேடிவ்'கள் போலவேதான். கொஞ்சம் 'ஹைடெக்'கான சாஃப்ட்வேர் விற்பனைப் பிரதிநிதியாக உலகம் சுற்றிக் கொண்டிருந்தார் கேட்ஸ். அவருடைய உழைப்பின் பலனாக, மைக்ரோசாஃப்ட் நிறுவனம் படிப்படியாக முன்னேறிக்கொண்டிருந்தது.

(தொடரும்)



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை - 63. போன் : 22760612.
City Office No.7,முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை - 33.போன் 23714942.

கிளை நிறுவனம் : புதிய எண். 16, பழைய எண். 19, முதல் மாடி, 30வது தெரு,
தில்லைகங்கா நகர், நங்கநல்லூர், சென்னை - 600 061. போன் : 22333214

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 18 ஆண்டுகளாக நடைபெற்று வரும் **"ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்"** தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் **ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர்** ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

• காலை சிற்றுண்டி (200 பேருக்கு)	ரூ.	1,000/-
• மதிய உணவு	ரூ.	2,000/-
• இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
• இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை	ரூ.	1,000/-
• ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
• குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை **ஸ்ரீ சாரதா சக்தி பீடம்** என்ற பெயருக்கு Cheque / DD / MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்

கொசு

மண்ணும் கல்லும் மனிதர்களும் லாரிகளில் வந்து இறங்கியபோது, முத்துராமன் வேட்டியை மடித்துக் கட்டி, வானம் பார்த்து வணங்கியபடி தன் குடிசையை விட்டு வெளியே வந்தான். பரபரவென்று லாரிகளின் பின்புறத் தடுப்புகள் திறக்கப்பட்டு பலத்த ஓசையுடன் கல்லும் மண்ணும் சரிந்தது. தேர்தல் இல்லாத நேரத்திலும் தெய்வம் கண் திறந்து பார்க்கும். 'யாரங்கே' கூப்பிட்டுக் கொண்டிருக்க அவசியம் இல்லை. வீட்டு வேலைகள் முடிந்தால் யாரும் வந்து உதவிக்குக் கைகொடுக்கலாம்.

முன்னதாக தன் காலனியின் இளைஞர்களை ஒருங்கிணைத்து ஆற்றங்கரை ஓரத்தில் அணிவகுக்கச் செய்திருந்தான் அவன். இது நம் ஏரியா, நம் பேட்டை. உதவிக்கு ஒரு மனிதர் வந்திருக்கறார். நடக்கப்போவது நமது பணி. எடுத்துப் போட்டுக்கொண்டு முடிந்ததைச் செய்வதுதான் நாட்டுக்கும் காலனிக்கும் நல்லது. சுகாதாரத் துறையும் பொதுப்பணித் துறையும் நகராட்சி நிர்வாகமும் ஒருங்கிணைந்து செய்வதற்கு எத்தனையோ நலப்பணிகள் உண்டு. கசக்கி எறிந்த குப்பைக் காகிதம் போல ஆற்றங்கரை ஓரத்தில், நாற்பது ஆண்டுகளாகக் கவனிப்பாரற்றுக் கிடக்கிற காலனி.

"மாப்ளே, நம்பவே முடியலடா. தலைக்குப் பத்து, நூறு தேறிச்சின்னா கூட நல்லாத்தான் இருக்கும். பணப் பட்டுவாடா யார் பொறுப்பு? வட்டம் ஆள் அனுப்புறாரா? நம்மாண்டயே குடுக்குறாராமா?"

"பிச்சிருவேன் மவனே. பத்து பைசா எவனும் தொடக்கூடாது சொல்லிட்டேன். ஆன செலவுக்குக் கணக்கு எழுதி சப்ஜாடா செட்டில் பண்ணிரணும்னு சொல்லியிருக்காரு. அவரு சொல்லலைன்னாங்காட்லும் நான் அதத்தான் செய்யறதா இருந்தேன். எவனாச்சும் கோல்மால் பண்ண நெனச்சிங்கன்னா, திரும்ப ஒருக்கா குப்பத்துப் பக்கம் வர முடியாது. சொல்லிட்டேன்..."

அவன் திடமாக, தீர்மானமாகச் சொல்லியிருந்தான். இரண்டு பெரிசுகளைக் கூப்பிட்டு, நதிக்கரை ஓரத்து அரசமரத்தடிப் பிள்ளையார் நிழலில் நாற்காலி போட்டு உட்கார வைத்து சம்பளமில்லாத தற்காலிக மேஸ்திரி ஆக்கியிருந்தான்.

என்ன செய்ய வேண்டும் என்று ஒரு திட்டம் இருந்தது. முதலில் சாக்கடைகள். சாலைக்கு மேலே ஓடும் கழிவுகளுக்குச் சாலையோரத்தில் இரண்டு கால்வாய் கட்டி மேல்புறம் மூட கான்கிரீட் வசதி. தற்காலிக வசதிதான் என்றாலும், செம்மண் கொட்டிச் சமப்படுத்திய சாலைகள். சீரழிந்த குடிசைகளுக்குப் புதிய ஓலைகள். ஆற்றங்கரை ஓரத்தில் சிறியதொரு தடுப்புச் சுவர். அப்புறம் கொசுக்கள். மருந்தடித்து அழித்துவிடக்கூடிய வம்சம் இல்லை அது. மக்கள் மனோபாவத்தில் மாற்றம் வரவேண்டும் என்று வட்டச் செயலாளர் சொல்லியிருந்தார். கைதட்டிய கூட்டத்தில் பெரும்பாலும் யாருக்கும் புரியவில்லை.

"சுத்தமா இருக்கணும்னு சொல்றாரு பாண்டியம்மா. குந்திக்கினு இருக்கற எடத்துலயே மூக்க சிந்திப் போட்டுட்டு முந்தானைல தொடச்சிக்காதங்கறாரு. புரியுதா?'

சிரித்தார்கள். யாரும் சிரிக்க வேண்டாம் என்று முத்துராமன் கேட்டுக்கொண்டான்.

"சிரிச்சி சிரிச்சித்தான்யா சீரழிஞ்சி போயிருக்கோம். நம்மள்ள எவன் வூட்லயானா அரிசி களைஞ்சிட்டு தண்ணிய

பா.ராகவன்

வாசல்ல கொட்டாம இருக்கமா? நைட்டுல பாரு... வூட்டு வாசல்ல படுத்துக்கினு இருப்பான். அப்பிடியே திரும்பி பொச்சுனு எச்சி துப்புவான். அப்பால எப்படி கொசு வராம இருக்கும்?''

இதற்கும் கைதட்டினார்கள். வட்டம் சிரித்தார். "பாத்துக்க முத்துராமா" என்று தோளைத் தட்டிவிட்டு சுமோவில் ஏறி மிதந்து போனார். முத்துராமன் வெறி கொண்டவன் போல உழைக்கத் தொடங்கினான். அடுத்த உள்ளாட்சித் தேர்தலில் தயங்காமல் கவுன்சிலருக்கு நிற்கலாம்.

டர்ர்ர்ர் என்று சத்தத்துடன் வந்து நின்ற புல்டோசர், ஆற்றங்கரை ஓரத்துக் குப்பை மேடுகளை அப்புறப்படுத்தின.

''தபார்றா... நம்மாளுங்க ரேஞ்சே தனிதான் இல்ல. அந்தா பாரு.. நாலு காலி குவாட்டர். பாட்டிலு கெடக்குது பாரு. அவனவன் ரெண்ருவா பாகிட் சரக்குக்கு வழியில்லாம அல்லாண்டு கெடக்கறான். எவந்தலையைத் தடவி மொட்ட போட்டானோ...''



தொடர்கதை

பென்சிலில் எழுதிக் கசக்கிப் போடப்பட்ட ஒரு காதல் கடிதத்தை எடுத்துப் பிரித்து வைத்துக்கொண்டு அது யார் கையெழுத்து என்று கொஞ்ச நேரம் அலசிக் கொண்டிருந்தார்கள்.

''டேய், போதும் எந்திரிச்சி வாங்கடா...'' யாரோ குரல் கொடுத்தார்கள். உழைத்தவர்களுக்கான சாம்பார் சாதப் பொட்டலங்களுடன் வட்டச் செயலாளர் புன்னகையுடன் கைகூப்பும் விசிட்டிங் கார்ட் பின் செய்யப்பட்டிருந்து. முத்துராமனுக்குச் சாப்பிட நேரம் இருக்கவில்லை. தன் நண்பர்களுடன் அவன் இருட்டும் வரை ஓயாமல் காலனி முழுதும் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான். ஒவ்வொரு வீட்டிலும்

8



சாக்கடைப் பாதைக்கான தடத்தை முடிவு செய்வது பெரிய காரியமாக இருந்தது. ஒரு ஒழுங்கில்லாமல் உருவாகியிருந்த காலனி. வாசல்புறம் மட்டுமே வழி இருந்தது. பின்புறம் என்று ஏதுமில்லாத இட நெருக்கடி. ஒவ்வொரு குடிசையின் பின் புறத்திலும் இன்னொரு குடிசை ஒட்டிக் கொண்டிருந்தது. அரையங்குல இடை வெளிகளில் அவர்கள் துணி உலர்த்திக் கொண்டார்கள். முறத்தில் மிளகாய் கொட்டி, கூரைச் சரிவுகளில் காய வைத்துக் கொண்டார்கள். எத்தனை நூறு குழந்தைகள் அதற்குள் பிறந்து, வளர்ந்து ஆளாகிவிட்டன! இதே சாக்கடைதான். இதே குப்பம்தான். இதே கொசுக்கடிக்கு நடுவில்தான். துயரங்களைப் பொருட் படுத்தாமலிருக்கப் பழகிவிட்டது மனம்.

அன்றைய பணிகள் முடிந்து ஆட்கள் கூலி வாங்கிக்கொண்டு மறுநாள் வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்ற பிறகு அவன் நிலவரம் சொல்வதற்காக வட்டத்தின் அலுவலகத்துக்குப் போய்ப் பார்த்துப் பேசிவிட்டு, அப்படியே தொண்ணூறு மில்லி மட்டும் சாப்பிட்டு மேலுக்கு அரைப் பொட்டலம் பிரியாணியை முடித்து விடைபெற்று வீடு திரும்பும்போது மணி பதினொன்றாகி விட்டிருந்தது.

வீதி அடங்கிவிட்டது. வாசல்களைக் கால்களும் நபர்களும் நிறைத்திருந்தார்கள். நாயொன்று விடாமல் ஊளையிட்டுக் கொண்டிருந்தது. 'த. சொம்மாகெட' என்று சொல்லியபடி அதனைக் காலால் ஒரு உதை உதைத்து அவன் தன் குடிசையின் வாசலை அடைந்தான்.

அப்பா வெளியே கயிற்றுக் கட்டிலில் படுத்திருந்தார். அவனும் அப்பாவும் வாசலில் படுப்பது. தம்பியும் அம்மாவும் வீட்டுக்குள்ளே. எப்போதாவது பேச வாய் திறந்தால், 'வலிக்குதுடா ரொம்ப' என்பார் முதல் சொல்லாக. இட்டத்தட்ட வாழ்ந்து முடித்துவிட்ட வாழ்க்கை குறித்த அதிருப்திகளிலேயே அவர் நோயாளி ஆகிவிட்டதுபோல அவனுக்குத் தோன்றும்.

சத்தமில்லாமல் உள்ளே போகப் பார்த்தான். ஆனால் அப்பா தூங்கியிருக்கவில்லை. புரண்டு படுத்தவாறு, "இப்பத்தான் வரியா" என்று கேட்டார்.

"அ... ஆமாப்பா..." சே... ஒரு பீடா போட்டிருக்கலாம்.

அவருக்கு சுவாசித்த காற்றின் ஒரு துளி நாசியைத் தொட்டால் போதும். அவர் அடிக்காத சரக்கா? மறைக்காத லாகவமா? ஒளித்து வைக்க என்ன இருக்கிறது? "உக்காரு" என்றார் மெது

தனிமுகம்!



• விஷ்வகுமார்

"நான் புதுமுகம்தான். ஆனா தனி முகமா தெரிவேன்" என்று நம்பிக்கையுடன் பேசுகிறார் விஷ்வகுமார். 'மனுநீதி', 'சவுண்ட் பார்ட்டி' போன்ற படங்களைத் தயாரித்த ஜி.ஆரின் தயாரிப்பில் உருவாகி வரும் 'காசு இருக்கணும்' படத்தின் நாயகன்.

"பணமில்லாம வாழ்க்கை இல்லை; அதே நேரத்துல பணம் மட்டுமே வாழ்க்கை இல்லைங்கறதுதான் இந்தப் படம் மூலமா டைரக்டர்கள் குமரன், பிரியவன் சொல்ற மெசேஜ். ஜி.ஆர். சாரோட கடின உழைப்பாலயும் ஆர்வத்தாலயும் இந்தப் படம் சிகரத்தைத் தொடுறது உறுதி" என்கிறவர், "பாக்யராஜ் சாரும் படத்துல நடிக்கிறார். இதுவரை அவர் ஏத்திராத கேரக்டர். ஒரு இக்கட்டிலிருந்து ஆறுபேரை காப்பாத்துறார். அடுத்த நாள் ராத்திரிலேர்ந்து ஒவ்வொருத்தரா கொலை செய்யப்படுறாங்க. இப்படி சஸ்பென்ஸ், திகிலுக்கும் படத்துல பஞ்சமில்லை" என்றார். ஜி.ஆரின் கதை, திரைக்கதையில் உருவாகும் 'காசு இருக்கணும்', பல புதியவர்களுக்கு வாசலாக அமைந்திருக்கிறதாம்.

- ரேவதி



"கள்ள நாணயம் தயாரிச்சி யாமே... ஏன்?"

''சில்லறையா நிறைய கடன் இருக்கு சாமி!''

- அம்பை தேவா

வாக. 'உன்ன போனன்னா உங்கம்மாக் காரி பொலம்ப ஆரம்பிச்சிருவா. சரக் கடிக்காதன்னு சொல்ல எனக்கு யோக்கி யத இல்ல. சரக்கடிச்சிட்டு வீட்டுக்கு வராத. புரியுதா?''

அவன் பேசாதிருந்தான்.

"சாப்ட்டியா?"

"சாப்ட்டேம்பா... படுக்க வேண்டியது தான். உடம்பெல்லாம் வலிக்குது...''

இரண்டுக்குமாகச் சேர்த்துச் சொன் னான். சொல்லிவிட்டுத் தன் கட்டிலை இழுத்து அவருக்குச் சற்றுத் தள்ளிப் போட்டான்.

அவர் நெடு நேரம் பேசவில்லை. ஆனால் ஏதோ பேச விரும்புகிறார் என்று அவனுக்குத் தோன்றியது. பேசினால் பதில் சொல்ல வேண்டியிருக்கும். ஆனால் தூக்கம் வருகிறது. உழைத்த களைப்பு. நாய் விடாமல் ஊளையிட்டுக் கொண்டிருந்தது. அதுவேறு எரிச்சலாக இருந்தது. இரவில் அமைதியைத் தவிர பொதுவில் இன்னொன்று சரிப்பட மாட்டேனென்கிறது.

"இன்னிக்கி அந்தப் பொண்ணோட அப்பாரு வந்துட்டுப் போனாரு" என்று சடாரென்று ஓரிடத்தில் தொடங்கினார்.

முத்துராமனுக்கு முந்தைய தினம் ஆல்பர்ட் தியேட்டரில் பார்த்தபோது சாந்தி சொன்னது நினைவுக்கு வந்தது. ஆ, திருமணம்!

"ஜனவரி கடேசில இருவத்தேழாந்தேதி வெச்சிக்கிரலாமான்னு கேட்டாரு.''

பரபரவென்று அவன் கணக்குப் போட்டான். ஜனவரி இருபத்தி மூன்று, இருபத்தி நான்கு, இருபத்தைந்து மாநாடு. ஒரு பிரச்னையும் இல்லை.

''வேலை நெறைய கெடக்குது. மொதல்ல மாவட்டச் செயலாளராண்ட சொல்லி அப்பாயின்மெண்டு கேக்கணும். நோட்டீஸ் அடிக்கணும். துணி எடுக் கணும். எல்லாத்துக்கும் பணம் வேணும் மொதல்ல. காதுல விழுதா?''

"ம்..." என்றான் மெதுவாக.

"விளையாட்டில்லடா... இது பெரிய காரியம். கல்யாணம் ஒரு நாளோட செரி. வாழ்க்கை ரொம்பப் பெரிசு முத்து... சமயத்துல பேஜாராத் தோணும். ஓடிர லாமான்னுகூடத் தோணும். உன் வயித்த நீ நெனச்சிப் பாக்கறது எப்பவாச்சும்தான். கல்யாணம்னு ஆயிடிச்சின்னா இன் னொரு வயித்துக்கு நீ பொறுப்பாயிருவ. மொத மாசமே கர்ப்பம்னிட்டான்னு வையி... ஒண்ணோட ஒண்ணு, இன் னொண்ணு.''

அவனுக்கு மிகவும் ஆச்சர்யமாகப் போய்விட்டது. அவனது அப்பா ஒரு போதும் இப்படியெல்லாம் பேசியவரல் லர். இப்படியெல்லாம் சிந்திக்கக்கூடிய வர் என்றும் அவன் நினைத்ததில்லை. தன்னிடம் ஏதோ ஒன்று முக்கியமாக - மிக முக்கியமாக அவர் தெரிவிக்க விரும்பு கிறார் என்று அவனுக்குத் தோன்றியது.

அவன் ஆர்வமாகக் கேட்கத் தயாரானபோது பின்னால் யாரோ வருவது போலிருந்து.

(தொடரும்)



''மன்னா! உங்கள் வாளுக்கு வேலை வந்துவிட்டது.''

''என்ன, போர் அறிவிப்பா?''

''ம்ஹூம்... சாணை பிடிப்பவர் வந்துள்ளார்.''

- சென்னிமலை
சி.பி.செந்தில்குமார்



''போர் முரசு ஒலித்ததே இப்போது, கேட்டீரா அமைச்சரே...?''

''மன்னியுங்கள் மன்னவா, என் வயிறுதான் கொஞ்சம் கடமுடா என்றுவிட்டது!''

- பி.ஜோதிரஞ்சன்

அட்மிஷ



''என்ன இது, போலீஸ் ஸ்டேஷன் வாசல்லே இவ்வளவு பெரிய கட்-அவுட்?''

''நம்ம கபாலி இந்த ஸ்டேஷனுக்கு அம்பது வருஷமா மாமூல் கட்டுறானாம். அதைக் கொண்டாடுறவிதமா இத வச்சிட்டுப் போயிருக்கான்.''

- எஸ்.விஜயராணி

"குருவே, வாழ்வில் 'போலி'களை இனங்கண்டு கொள்வது எங்ஙனம்?"

"சிஷ்யா, என்னோடு இத்தனை காலம் இருந்துமா உன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை!"

- யமுனா ரெங்கநாதன்





"ஏண்டி குழந்தைகளைப் பரண் மேல ஒளிச்சு வைக்கறே?"

"ஸ்கூல் அட்மிஷனுக்குக் குழந்தைகளைப் பிடிக்க தெருத் தெருவா டீச்சர்ஸ் வந்துக்கிட்டு இருக்காங்களாம்!"


- கிரிஜா மணாளன்

ுக்கு ஆள் பிடி!

"சமையலறைக்குப் போன மன்னர் மயக்கம் போட்டுட்டாரா, ஏன்?"

"ராணி பீட்ரூட்டைக் கத்தியால நறுக்கிட்டு இருக்கறதைப் பார்த்துப் பயந்துட்டார்!"

- வெ.சீதாராமன்



செல்லம்மாளின் கணவன்!

செல்லம்மாள் அன்றைக்கே கிளம்பி மறுநாள் தஞ்சாவூர் போய்ச் சேர்ந்தாள். சந்து பொந்துகளுக்குப் பேர்போன தஞ்சாவூரில், கடிதத்தில் கொடுத்திருந்த விலாசத்தைக் கண்டுபிடிப்பது ரொம்பவும் கஷ்டமாயிருந்தது. கடைசியில் எப்படியோ கண்டுபிடித்தாள். கிழ வேலைக்காரி ஒருத்தி செல்லம்மாளை அழைத்துக் கொண்டு போய் மச்சு அறையில் விட்டாள். அங்கே ஒரு கயிற்றுக் கட்டிலில் அனாதை ஸ்திரீயான அம்முலு படுத்திருந்தாள். உண்மையிலேயே அவள் சாகக் கிடக்கிறாள் என்பது பார்த்தவுடனே தெரிந்து போயிற்று. அந்த நிலைமையில் கூட அவள் முகத்தில் ஒரு களை இருந்தது. அதைக் காட்டிலும் அந்த முகத்தில் குடி கொண்டிருந்த சோகம் செல்லம்மாளின் உள்ளத்தின் அடிவாரத்தில் மறைந்திருந்த இரக்க உணர்ச்சியை எழுப்பிற்று. செல்லம்மாள் தான் சாபங் கொடுக்க வேண்டுமென்று வந்ததையெல்லாம் மறந்து அவள் சொல்வதைக் கேட்கச் சித்தமானாள்.

செல்லம்மாளைக் கண்டதும் அம்முலு படுத்தபடியே இரண்டு கையையும் கூப்பிக் கும்பிட்டாள். அவளைத் தன் அருகில் உட்காரச் சொன்னாள். மிகவும் ஈனமான குரலில், குழந்தைப் பிராயத்தில் சிறிய தாயாரின் கொடுமைகளுக்கு ஆளானதிலிருந்து தொடங்கி, தன்னுடைய துயரக் கதையை மளமளவென்று சொல்லி முடித்தாள். முடிப்பதற்குள் பல தடவை செல்லம்மாளின் கண்களில் ஜலம் துளித்து விட்டது.

கடைசியாக, உலக வாழ்க்கையின் கஷ்டங்களைப் பொறுக்க முடியாமல் அம்முலு ரயில் தண்டவாளத்தில் விழுந்து பிராணனை விடுவதென்று தீர்மானித்தாள். அவ்விதம் தண்டவாளத்தில் படுத்துக் கிடந்தபோதுதான் அனந்தராமன் வந்து அவளைத் தொட்டு எழுப்பினார். அவளுக்கு எவ்வளவோ சமாதானம் சொல்லி அழைத்துப் போனார். அவளுடைய நிர்க்கதியான நிலைமையைத் தெரிந்துகொண்டு தஞ்சாவூருக்கு அழைத்துப் போய்த் தனிவீட்டில் குடிவைத்தார். வாழ்நாள் முழுவதும் அன்பான வார்த்தையையே கேட்டறியாத அம்முலு, அனந்தராமனிடம் தன்னுடைய இருதயத்தை ஒப்புவித்தாள். அனந்தராமன் அடிக்கடி செல்லம்மாளைப் பற்றியும் அவளுடைய உயர்ந்த குணத்தைப் பற்றியும் அம்முலுவிடம் சொல்வதுண்டு. அப்போதெல்லாம் அம்முலுவின் மனம் படாத வேதனைப் படும் – அப்படிப்பட்ட உத்தமிக்குத் துரோகம் செய்கிறோமேயென்று. இப்படியே சில காலம் சென்றது. ஒரு நாள் அனந்தராமன் செல்லம்மாளின் அத்தானை ரயிலில் சந்தித்தார். அவனுடன் பேசியதிலிருந்து அத்தானுக்குத் தன்னுடைய இரகசியம் தெரியுமென்று அறிந்து கொண்டார். அவன் போய்ச் செல்லம்மாளிடம் சொல்லிவிட்டால் என்ன செய்கிறதென்று அனந்தராமன் பீதியடைந்தார். அம்முலுவிடம் "நானே போய் செல்லம்மாளிடம் எல்லாவற்றையும் சொல்லிவிடப் போகிறேன்; அப்புறம் நடந்தது நடக்கட்டும்" என்று கூறிவிட்டுக் கிளம்பினார்.

கொஞ்ச நாளைக்கெல்லாம் அவரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. ஊருக்குப் போய்ச் சேரும்போதே 104 டிகிரி சுரத்துடன் போனதாகவும், 'காலாஹஸார்'

என்னும் விஷசுரம் தன்னைப் பிடித்திருப்பதாகவும், பிழைப்பது துர்லபம் என்றும் தெரிவித்திருந்தார். அதோடு செல்லம்மாளிடம் உண்மையைச் சொல்லத் தனக்குத் தைரியம் வரவில்லை என்றும், அவளுடைய மனதைப் புண்படுத்த விரும்பவில்லையென்றும், தனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால் அம்முலுவே எல்லாவற்றையும் செல்லம்மாளிடம் சொல்லிவிட வேண்டுமென்றும், அவள் அம்முலுவுக்கு உதவி செய்து காப்பாற்றுவாள் என்றும் எழுதியிருந்தார்.

அதற்குப் பிறகு அனந்தராமனிடமிருந்து கடிதம் ஒன்றும் வரவில்லை. துடியாய்த் துடித்துக் கொண்டிருந்த அம்முலு ஒரு ஆளை அனுப்பி விசாரித்துக்கொண்டு வரச் சொன்னாள். ஆள் வந்து, அனந்தராமன் இம் மண்ணுலகை நீத்த விவரத்தைக் கூறினான்.

“அக்கா! அந்த நிமிஷத்திலேயே நான் பிராணனை விட்டிருக்க வேண்டியது. ஆனால், அதோ தொட்டிலில் இருக்கிறானே, அவனுக்காக உயிரைக் காப்பாற்றிக் கொண்டிருந்தேன். அவன் அப்போது என் வயிற்றில் இருந்தான்; ஆறு மாதம்” என்றாள் அம்முலு.

அம்முலுவின் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தபோது செல்லம்மாளின் கவனம் அடிக்கடி அதே அறையில் ஒரு மூலையில் தரையில் வைத்திருந்த தொட்டிலின் பக்கம் சென்று கொண்டிருந்தது. அந்தத் தொட்டிலில் ஒரு குழந்தை கிடந்தது.




அமரர் கல்கி

குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது. அம்முலுவின் கதை முடியும் சமயத்தில் குழந்தை தன் கண்களை மலர விழித்து அப்புறமும் இப்புறமும் பார்த்து அழத் தொடங்கியது. செல்லம்மாள் ஒரு பாய்ச்சல் பாய்ந்து தொட்டிலின் பக்கம் சென்றாள். குழந்தையின் முகம் அப்படியே அப்பாவை உரித்து வைத்ததுபோல் இருந்ததைக் கண்டாள்!

- ‘என் தெய்வம்’ சிறுகதையிலிருந்து...

‘கல்கி களஞ்சியம்’ வானதி வெளியீடு



நடக்குமென்பார்; நடக்கும்!

மேஷம்: யோகமான வாரம். உத்தியோகத்தில் நற்பெயர் ஏற்படும். வீடு / மனை வாங்க நல்ல தருணம். திடீர் தனயோகம் கிட்டும். சுபநிகழ்ச்சிகள் நடக்கும். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினையாகும். குரு / ராகு / கேது/சனி வழிபாடு செய்து வருதல் நலம்.

ரிஷபம்: எண்ணங்கள் யாவும் ஈடேறும். வீடு / மனை / வாங்க நல்ல தருணம். கல்வி வளம் மேலோங்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணலாம். மகப்பேறு பாக்கியம் கிட்டும். குரு / சனி வழிபாடு செய்து வருதல் நற்பலன் தரும்.

கடகம்: எதிலும் கவனத்துடன் செயல்படுவது நற்பலனைத் தரும். திருமணம் கைகூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. வேலையில் இடமாற்றம் ஏற்படும். சனி / ராகு / கேது வழிபாடு செய்து வருதல் நற்பலனைத் தரும்.

பரத்வாஜ் பதில்கள்

● **என் மகனுக்கு சுயதொழில் பொருத்தமானதா? எப்போது திருமணம் நடக்கும்?**

- எஸ்.கே.சர்மா, சென்னை - 19

உங்கள் மகனுக்கு புதன் தசை நடப்பதால் சொந்தத் தொழில் பண்ணுவது சிலாக்கியம் இல்லை. 25 வயதுக்கு மேற்பட்டு திருமணம் கைகூடும்.

● **என் தங்கை மகனுடைய திருமண வாழ்க்கை, வருங்காலம் எப்படி இருக்கும்?**

- விஜயலெக்ஷ்மி, புனே


உங்கள் தங்கை மகனுக்கு 2007ல் திருமணம் நடக்கும். நல்ல வேலைவாய்ப்பு அமையும்.

தொழில் அபிவிருத்தி ஏற்படும் நண்பர்கள் / உறவினர்கள் மூலம் ஆதாயம் கிட்டும். குடும்ப உறவு நன்றாக இருக்கும். குழந்தைப் பேறு ஏற்படும். திருமணக் காரியம் கைகூடும். வேலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். புதிய தொழில் முயற்சி பலன் தரும். ராகு / கேது வழிபாடு செய்துவர, நற்பலன் கிட்டும்.

மிதுனம்: தெய்வ பலம் நிறைந்த வாரம். உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படும். நண்பர்கள் / உறவினர்கள் மூலம் ஆதாயம் கிட்டும். கல்வி வளம் மேலோங்கும். தடை விலகித் திருமணம் நடக்கும்.

சிம்மம்: மனச்சலனம் விலகும் வாரம். திருமண முயற்சி கைகூடும். வேலையில் இடமாற்றம் ஏற்படும். மனத்தில் தைரியம், தன்னம்பிக்கை ஏற்படும். நண்பர் / உறவினர்கள் மூலம் ஆதாயம் கிட்டும். செல்வ நிலை உயரும். வெளியூர்ப் பிரயாணம் வந்து சேரும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். ராகு / கேது / குரு / சனி வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

கன்னி: அற்புதமான வாரம். மனத்தில் மகிழ்ச்சி பொங்கும். வீடு / மனை வாங்க நல்ல தருணம். பொருளாதாரம் பலப்



ராசிபலன்

படும். கல்வி வளம் வளர்ச்சி அடையும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். புதிய தொழில் முயற்சி கைகூடும். குரு வழிபாடு செய்து வருதல் நற்பலனைத் அளிக்கும்.

துலாம்: திருமணம் கைகூடும். மகப்பேறு பாக்கியம் கிட்டும். பூர்வீகச் சொத்து பாகப்பிரிவினை ஆகும். குழந்தைகள் வழியில் சுப நிகழ்ச்சி கைகூடும். கொடுக்கல் / வாங்கல் நற்பலனைத் தரும். ராகு / கேது வழிபாடு செய்து வருதல் நற்பலனைத் தரும்.

விருச்சிகம்: மிகவும் யோகமான வாரம். வெளிநாட்டு அழைப்பு வந்து சேரும். சிலருக்கு வீடு வாங்கும் யோகம் வந்து சேரும். கடன் சுமைகள் குறையும். குழந்தை பாக்கியம் கிட்டும். எதிர்பாராத தனம் கிட்டும். கொடுக்கல் வாங்கல் சிக்கல் தீரும். குரு / ராகு / கேது வழிபாடு செய்து வருதல் நலம் தரும்.

தனுசு: பொருளாதாரம் பலப்படும். திருமண காரியம் கைகூடும். வெளியூர்ப் பிரயாண வாய்ப்பு வந்து சேரும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும். மனக் குறைகள் விலகும். சனி / குரு வழிபாடு செய்து வருதல் நற்பலனைத் தரும்.

மகரம்: திருமணம் கைகூடும். வீடு / மனை வாங்க நல்ல தருணம். பணக் கஷ்டம் விலகும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் கிட்டும். தொழில் / பூமி மூலம் ஆதாயம் கிட்டும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். குழந்தை பாக்கியம் கிட்டும். ராகு / கேது / சனி வழிபாடு நற்பலனைத் தரும்.

கும்பம்: வேலையில் உயர்வு, இட மாற்றம் ஏற்படும். தூரதேச அழைப்பு கிட்டும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கல்வி வளம் மேலோங்கும். கடன் தொல்லை குறைய ஆரம்பிக்கும். செலவுகள் சுபமானதாக இருக்கும். திருமண காரியம் கைகூடும். கொடுக்கல் / வாங்கல் சிக்கல் தீரும். வீடு / மனை வாங்க நல்ல தருணம். எதிர்பார்த்த காரியம் நிறைவேறும். வழக்கு வெற்றி அளிக்கும். ராகு / கேது / குரு வழிபாடு செய்து வருதல் நற்பலனைத் தரும்.

மீனம்: எதிர்பாராத தனயோகம் கிட்டும். வீடு /மனை வாங்க நல்ல நேரம். திருமண காரியம் கைகூடும். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வந்து சேரும். வராத நிலுவை வசூலாகும். புதிய தொழில் வளம் நற்பலனைத் தரும். ஆஞ்சநேயர் நாமாவளி படித்து வருதல் நற்பலனை அளிக்கும். ●






அக்கம் பக்கம்


ராஜினாமா விசித்திரம்!

குஜராத் மதக் கலவரத்தை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்ட 'பச்சானியா' படம் பற்றிய சர்ச்சை அடங்குவதற்கு முன்பாகவே, அடுத்து வெளியாக இருக்கும் 'டிராஃபிக் சிக்னல்' என்ற படம் சர்ச்சைக்குள்ளாகி இருக்கிறது. இது மும்பைக் கலவரத்தை வைத்து எடுக்கப்பட்ட படம். 'இந்தப் படம் குஜராத்தியர்களைக் கேவலப்படுத்தும் வகையில் எடுக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்தின் மூலம் உலகமெங்கும் வசிக்கும் குஜராத்தியர்களை படத்தின் இயக்குனர் அவமானப்படுத்திவிட்டார்' என்று சிலர் ஈ-மெயில் பிரசாரத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். படத்தின் இயக்குநர் மதுர் பாண்டர்கர் இதைப் பற்றி என்ன சொல்கிறார்? "படத்தின் ஆரம்பத்திலேயே 'இந்தக் கதையும் கதாபாத்திரங்களும் கற்பனை. யாரையும் குறிப்பிடுவன அல்ல' என்று கூறிவிட்டேனே... அதற்கு மேல் எதுவும் நான் சொல்ல விரும்பவில்லை" என்கிறார்.


• அம்பரீஷ்



எப்போதுமே காவிரிப் பிரச்னை கர்நாடக அரசியல்வாதிகள் கையில் படாதபாடு படும். இப்போதும் கர்நாடகாவுக்கு அநீதி இழைக்கப்பட்டு விட்டதாகக் கூறி தன் எம்.பி. பதவியையும், மத்திய அமைச்சர் பதவியையும் ராஜினாமா செய்திருக்கிறார் நடிகர் அம்பரீஷ். அவரது ராஜினாமா கடிதத்தில் ஒரு விசித்திரம். அதாவது, தான் ஏன் ராஜினாமா செய்கிறேன் என்ற காரணத்தைக் கடிதத்தில் குறிப்பிட்டு இருக்கிறார். பாராளுமன்ற விதிகளின்படி, ஓர் உறுப்பினர் ராஜினாமா செய்ய விரும்பினால், ராஜினாமா செய்வதாக மட்டும்தான் சபாநாயகருக்கு கடிதம் எழுத வேண்டுமே ஒழிய, காரணத்தைக் குறிப்பிடக் கூடாது.




• என்.டி.திவாரி



கடந்த முறை உத்ராஞ்சல் மாநில முதலமைச்சராக இருந்த என்.டி.திவாரி, இந்த முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை. மாநில காங்கிரஸின் முக்கிய தலைகள். 'திவாரிக்கு வயசாகி விட்டதால் அவர் அரசியலிலிருந்து ஓய்வு பெற்று விட்டார்' என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அது தவறு என்று டெல்லியில் பேசிக் கொள்கிறார்கள். காங்கிரஸ் என்ன நினைத்தாலும் முட்டுக்கட்டை போடாத திவாரி போன்ற ஒருவர்தான் ஜனாதிபதி பதவிக்குப் பொருத்தமானவர் என்று சோனியா காந்தி நினைப்பதுதான் காரணமாம்.

- எஸ்.சந்திரமௌலி



அருள்வாக்கு

கல்வியின் பயன்!



கல்வியின் முதல் பிரயோஜனமாக விநயம் (அடக்கம்), ஏற்பட வேண்டும். பழைய நாளில் மாணவனுக்கு 'விநேயன்' என்றே பெயர் இருந்தது. அடக்கம் இல்லாத படிப்பு, படிப்பே ஆகாது. தன்னைத்தானே அடக்கிக் கொள்ளும்படியான நல்ல குணம் முதலில் வர வேண்டும். ஆனால் நடைமுறையிலோ படிப்பு இல்லாத மலைவாழ் மக்களிடையே, நாகரிகம் இல்லாத ஜனங்களிடத்திலே கெட்ட குணங்கள் அதிகம் இருப்பதாகக் காணவில்லை. அங்கே மாஜிஸ்திரேட் கோர்ட்டு, ஐகோர்ட்டு ஆகியவை இல்லை; குற்றங்கள் இல்லை. நிறைய ஹைஸ்கூல், காலேஜ், யுனிவர்ஸிட்டி எல்லாம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு போகிற இடங்களில்தான் கோர்ட்டு வழக்குகள், கிரிமினல் குற்றங்கள், ஏமாற்று வித்தை, ஜேப்படித் திருட்டு போன்றவை அதிகமாகிக் கொண்டிருக்கின்றன.

இது வேடிக்கையாக இருக்கிறதல்லவா? படித்ததன் பிரயோஜனம் நல்ல குணம்; அடக்கம். இப்போது நாட்டில் முன்னைவிட நிறையப் படிப்பு இருக்கிறது; ஹைஸ்கூலில் இடம் இல்லாமல், 'ஷிஃப்ட்' வைத்து வகுப்பு நடத்துகிறார்கள். இவ்வளவு இருந்தும் படிப்பின் பிரயோஜனமான விநயம் ஏற்படவில்லை. அதற்கு நேர் விரோதமான குணம் அல்லவா வளர்கிறது? ஏன் இந்த நிலைமை?

கல்வியின் பயன் மெய்யான பொருளாகிய ஆண்டவனைத் தெரிந்து கொள்வதுதான். ஆனால் இந்தக் காலத்தில் படிக்கிறவர்களில் அனேகருக்குத் தெய்வ பக்தியே இருப்பதில்லை. இந்த நிலை மாறி, கடவுளைத் தொழும் நிலையை மனிதன் எட்டினாலே மனம் தூய்மை பெறும்; குற்றம் எனும் சொல் அற்றுப் போய்விடும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்



ஒரு பக்கக் கதை

விழா துவங்கியது. விருது கொடுத்துக் கொண்டிருந்தார் முதலமைச்சர். இந்தியாவிலேயே இளம் முதலமைச்சர் எனப் பெயர் பெற்றவர்; நல்ல பெயரும் புகழும் கொண்டவர் முத்து.

ஆசிரியர்கள் வரிசையாக வந்து விருது பெற்றுச் சென்றனர்.

ஆசிரியர் ஆதவன் மேடை ஏறியதும், தடாலென அவருடைய காலில் விழுந்தார் முதலமைச்சர் முத்து. அங்கு கூடியிருந்த அனைவரும் அதிர்ந்தனர். நிருபர்கள் ஸ்தம்பித்தனர். போட்டோ கிராஃபர்கள் 'பளிச் பளிச்'சென படம் பிடித்தனர்.


ஆசிரியர் ஆதவன் யார், அவருக்கும் முதலமைச்சருக்கும் என்ன உறவு என எண்ணிப் பலவிதமாகக் குழம்பினர்.

காலில் விழுந்த முதலமைச்சரைத் தூக்கிக் கட்டித் தழுவினார் ஆதவன். மரியாதையும் பெருமிதமும் பொங்கிப் பிரவகித்தன.

உணர்ச்சிவசப்பட்ட நிலையில் முதலமைச்சர் பேசினார்.

"ஒரு நல்ல மாணவனால்தான் ஒரு நல்ல மனிதனாகப் பரிணமிக்க முடியும். ஒரு நல்ல ஆசிரியரால்தான் ஒரு நல்ல மாணவனை உருவாக்க இயலும். அந்த வகையில் என்னை இந்த உயர்ந்த நிலைக்கு ஆளாக்கிய என் ஆசானுக்கு, என் கையில் நல்லாசிரியர் விருது வழங்குவதில் மிகவும் பெருமைப் படுகிறேன்" என்று உருக்கமாய்ப் பேசி

மதிப்புப் பாலம்!



விருதைக் கொடுக்க, ஆதவன் நெகிழ்ச்சிக் கண்ணீர் வடித்தார்.

ஒரு நல்ல ஆசிரியருக்கும், ஒரு நல்ல மாணவருக்கும் இடையே சக்தி வாய்ந்த மதிப்புப் பாலமாக ஆதவனின் கையிவிருந்த விருது பளிச்சிட்டது!

●

தமிழ்நாயகி



JAYA TV
வழங்கும்
Gold Winner
விசு வின்
மக்கள் அரங்கம்
ஞாயிறுதோறும் பகல் 11 மணி முதல் 12 மணி வரை
Hamam
நலங்குமாவு
SPB
அழைக்கும்
என்னோடு பாட்டுப் பாடுங்கள்
சனிக்கிழமை இரவு 8-9 மணிவரை
ஏவிஎம். குமரனின்
கிரிஜா
M.A.
திங்கள் முதல் வெள்ளிவரை தினமும் இரவு 8.30 முதல் 9.00 வரை
AVM PRODUCTIONS
உங்கள் ஜெயா டிவியில் காணத் தவறாதீர்கள்

தயாரிப்பாளர் சத்யராஜோட நம்பிக்கை வீண் போகல. எதிர்பார்த்ததைவிட கலவையான அம்சங்களை அள்ளிக் கொடுத்திருக்காரு டைரக்டர் பிரபு சாலமன்.

ஓப்பனிங்லயே ராஜேஷ் யாதவோட ஒளிப்பதிவும் இமானின் இசையும் தியேட்டரை அதிர வெச்சுடுது. திறமையான ஃபுட்பால் டீமை சின்னா பின்னப் படுத்துற முக்கியப் புள்ளிக்கு முடிவு கட்டுற கதை.

சும்மா சொல்லக்கூடாது, ஃபுட்பால் ப்ளேயரா மட்டுமில்ல, நல்ல நடிகராவும் அலம்பல் பண்ணியிருக்காரு சிபி. இதுதான் அவருக்கு நிஜமான முதல் படம். ஃப்ளாஷ்பேக் காட்சியைக் கேட்கறதுக்கு மட்டுமே அழகு பொம்மையா வந்து போறாங்க நிலா. பிரகாஷ்ராஜ் உணர்வுபூர்வமான உள்ளத்துக்குச் சொந்தக்காரரா மிளிர்றாரு.

ஆட்டோக்காரன் புள்ள டாக்டர் ஆகணும், விவசாயி புள்ள வக்கீல் ஆகணும், பானை செய்யறவன் புள்ள இன்ஜினீயர் ஆகணும்ங்கிற வசனங்கள் நெஞ்சைத் தொட்டுக் கண் கலங்க வெச்சுடுது.

அனல் அரசோட ஸ்டண்ட் காட்சிகள்ல 'அனல்' அதிகம்.






சினிமா டிக்கெட் பின்னாடி எழுதிடுற அளவுக்கு ரொம்பச் சின்னக் கதை. தெளிந்த நீரோடை மாதிரியான அன்பான குடும்பம். வஞ்சகர்களோட மாய வலைல சிக்கிச் சீரழிஞ்சு, மீண்டும் உயிர் பெற்றுத் திரும்புது. கௌதம் மேனனுக்கே உரிய விஷயங்கள் படத்தை தூக்கி நிறுத்தினாலும், நிதானமான காட்சிகளும், வசனங்களும் ரசிகனை ரொம்ப சோதனைக்குள்ளாக்குது.

முதல் படம்னே தெரியாத அளவுக்கு அமைதியா நடிச்சு ஆர்ப்பாட்டம் பண்ணியிருக்காங்க ஆண்ட்ரியா. மலர்ந்த பூ மாதிரி இருக்கற அவங்களும் சரி, 'இப்படியெல்லாம்கூட பெர்ஃபார்ம் பண்ண முடியுமா?'ன்னு ஆச்சர்யப்பட வைக்குற ஜோதிகாவும் சரி, குறை வைக்காம நடிச்சிருக்காங்க. அண்டர்ப்ளே பண்ணி அடக்கமா வர்றாரு சரத். ஆனா, அடி வாங்கி வில்லனுக்குப் பணியும்போதெல்லாம் அடிதடி நாயகனா பார்த்துப் பழக்கப்பட்டு போனதால நமக்குச் சலிப்பாயிடுது. வில்லனா வர்ற மலிந்த் சோமன், நல்ல தேர்வு. கொடுக்கப்பட்ட பாத்திரத்தை தூக்கிச் சாப்பிட்டுட்டார்.

ஹாரிஸோட பாடல்களைவிட




விமர்சனம்

குறிப்பா, க்ளைமாக்ஸ்ல வில்லனைக் கால் பந்தாடுற சிபி.

இமான் புண்ணியத்துல எந்தப் பாட்டும் போரடிக்கல. பின்னணியில மனுஷன் மிரட்டுறாரு. ஆக்ஷன் காட்சிகள்ல ராஜேஷ் யாதவோட கேமரா கோணங்கள் சுழன்றடிக்குது.

யதார்த்தம்தான் 'வீ'யை வெற்றிக் கோட்டைத் தொட வைக்குது. பொசுக்குன்னா துப்பாக்கி தூக்குற தமிழ் சினிமாவுல, துப்பாக்கி வாங்கறதுக்கே அல்லாடுற இளைஞர்களைப் பார்க்கும்போது சாலமனுக்கு சலாம் போடத் தோணுது. அடுத்தடுத்த காட்சிகளைப் பரபரன்னு நகர்த்தி, ரசிகனை நாற்காலி முனையிலேயே கடைசி வரை உட்கார வெச்ச திரைக் கதை நேர்த்திக்கு பூச்செண்டு தரலாம். சிபியைச் செதுக்குன சிற்பி 'கொக்கி' சாலமன், இனி 'கிங்'தான்!



பின்னணி இசையில ஸ்கோர் ஜாஸ்தி. இரயில் நிலையத்தைக்கூட அழகாய் காட்டியிருக்கு அரவிந்த் கிருஷ்ணா கேமரா. தாமரை வரிகள்ல தமிழ் கொஞ்சுது.

●

ஒரு முடிச்சை நோக்கிப் பயணப்பட்ட திரைக்கதை, முடிச்சு அவிழ்ந்ததும் தள்ளாடுது. தக்கவைக்க இன்னும் முயற்சி செஞ்சிருக்கலாம் டைரக்டர். அடுத்தடுத்த கதைகளை ஏன் க்ளைம் பேஸா செலக்ட் பண்ணாருன்னு தெரியல. ஒரே மாதிரி மாடுலேஷன், ஒரே மாதிரி டயலாக் டெலிவரின்னு பழைய ஞாபகம் வர்றதைத் தவிர்க்க முடியல.

படம் முழுக்க ஒருவித மென்மைத்தனம் இழையோடுறது எல்லாருக்கும் பிடிக்கும்னு சொல்ல முடியாது. இந்தப் படத்தோட கதை பத்தி பல்வேறு விமர்சனங்கள் இருந்தாலும் புதிய முயற்சியை வரவேற்கலாம்.

- லஜ்ஜாவதி



பச்சைக்கிளி முத்துச்சரம்

நான் அழ ஆரம்பித்ததும் என் பள்ளிக்கூட மாணவர்கள் மத்தியில் மட்டுமல்லாமல், அந்த ரிலே ரேசை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்த மாணவர்கள் மத்தியிலும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அவர்களில் சிலர் ஓடிவந்து எனக்காக வாதாடினார்கள். கடைசியில் வேறு வழியில்லாமல் எனக்கே மூன்றாவது பரிசைக் கொடுத்தார்கள். அந்த சந்தோஷத்துடன் நான் நடந்து வந்து கொண்டிருந்தபோது, ஒருவர் என்னை நிறுத்தி கைகுலுக்கி, "துப்பாக்கிச் சத்தம் கேட்டவுடன் ஓட ஆரம்பிக்காமல் தாமதப்படுத்திவிட்டாய். அப்படிக்கூட உன்னால் மூன்றாவது பரிசு பெற முடிந்திருக்கிறதே! அப்படி என்றால், நீ வெடிச் சத்தம் கேட்டவுடன் ஓட ஆரம்பித்திருந்தால், முதல் பரிசே வாங்கி இருப்பாய்" என்றார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு எங்கள் ஸ்கூலில் மிகவும் பிரபலமாகிவிட்டேன். அடுத்த வருடம் விளையாட்டுப் போட்டிகளைப் பற்றிய அறிவிப்பு வந்தவுடனேயே, எங்கள் பள்ளிக்கூடம் முழுவதும் நான் எப்படியும் ஒரு பரிசு வாங்கி விடுவேன் என்று எதிர்பார்த்தது. எங்கள் பள்ளிக்கூட ஸ்போர்ட்ஸின் நம்பிக்கை நட்சத்திரம் ஆகிவிட்டேன்.

மறுபடியும் போட்டி தினம் வந்தது. முதலில் நூறு மீட்டர் ஓட்டத்தில் நான் பங்கேற்றேன். என்னால் ஜெயிக்க முடியவில்லை. அடுத்து, இருநூறு மீட்டர் ஓட்டப்பந்தயம். நான் கொஞ்சம் நம்பிக்கை இல்லாமல்தான் இருந்தேன். ஆனால், 'குரு பிரீத் சிங்' என்ற மாணவன் என்னிடம் வந்து "பயப்படாதே! உன்னிடம் ஸ்டைலான நல்ல ஓட்டம் இருக்கிறது. நீதான் இந்தப் பந்தயத்தில் ஜெயிக்கப் போகிறாய்" என்றான். அந்த குரு பிரீத் சிங் யார் தெரியுமா? கடந்த வருடம் ரிலே ரேசில் எனக்கு மூன்றாவது இடம் கிடைத்தபோது, முதல் பரிசு பெற்றானே அந்த மாணவன்தான். அவனே என்னை உற்சாகமூட்டும் விதமாகப் பேசியது எனக்குள்ளே புது ரத்தம் பாய்ச்சிய உணர்வினை ஏற்படுத்தியது. உற்சாகத்துடன் ஓடினேன். முதல் பரிசு எனக்குத்தான் கிடைத்தது. பள்ளிக்கூடத்தில் எனக்கு மாபெரும் அதெலெட் போன்ற ஒரு அங்கீகாரம் கிடைத்தது. 'அமர்' என்ற பெயர் பள்ளிக்கூடத்தில் ரொம்பப் பிரபலமாகிவிட்டது. அது யார் என்கிறீர்களா? வேறு யாருமில்லை; நானேதான். ஆமாம் எனக்கு ஸ்கூலில் 'அமர்' என்று தான் பெயர். 'ஜீவா' என்பது திரையுலகம் வைத்த பெயர்.

அடுத்த கட்டமாக, சென்னை நகர பள்ளிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிக்கு நாள் நெருங்கியது. என் உடற்பயிற்சி ஆசிரியரின் ஊக்கத்துடன்



நான் தீவிரமாகப் பயிற்சி செய்து கொண்டிருந்தேன். போட்டி நாளன்று, நேரு விளையாட்டரங்கத்துக்குச் சென் றேன். அதற்கு முன்னால் அவ்வளவு பெரிய ஸ்டேடியத்தை நான் பார்த் ததே இல்லை. நூறு மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் பங்கேற்கும் மாணவர்களின் பெயர்கள் பள்ளி வாரியாக அறிவிக்கப் பட்டன. ஒவ்வொரு மாணவனின் பெய ரும் அறிவிக்கப்பட்டபோது, அந்தந்த பள்ளிக்கூட மாணவர்களும், மாணவி களும் கைத்தட்டியும், கூக்குரல் எழுப்பி யும் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண் டிருந்தார்கள். என் பெயர் அறிவிக் கப்பட்டபோதும், அதே மாதிரி ஒலி எழுந்தது. நான் இலேசான டென்ஷனுடன் ஓடிப் போய் பந்தயத்தில் பங்கேற்கும் மற்ற மாணவர்களுடன் வரிசை யில் நின்றுகொண்டேன். பந்தயங்களை நடத்துவதற் காக நியமிக்கப்பட்டிருந்த ஒருவர், ஒவ்வொரு மாணவ ராகச் சரிபார்த்துக் கொண்டே வந்தார். என்னிடம் வந்து, பெய ரைக் கேட்டபோது, எதேச்சையாக அவரது பார்வை என் கால்களில் பட்டது.

"ஸ்பைக்ஸ் பதித்த ஷூதானே?" என்று கேட்க, நான் என் வலக்காலை மடக்கி ஷூவின் அடிப்பாகத்தைக் காட்டினேன். "சாரி! நீ ஆணிகள் பதித்த ஷூக்களை அணிந்திருக்கிறாய். ஓட்டப்பந்தயப் பாதை செயற்கை இரப்பராலானது. இந்த ஷூவைப் போட்டுக்கொண்டு ஓடினால், பந்தய டிராக் பாழாகி விடும்; எனவே, இந்த ஷூவை அணிந்துகொண்டு நீ ஓட முடியாது" என்று கட் அண்ட் ரைட்டாகக் கூறிவிட்டார். எனக்கு அந்த அதிர்ச்சியைத் தாங்கிக்கொள்ள முடிய வில்லை. "இப்போ என்ன சார் பண்றது?" என்று அவரிடமே கேட்க, "வேறு ஷூ இருந்தால் அணிந்து கொண்டு ஓடு; இல்லையென்னால் வெறும் காலுடன் ஓடு" என்று சொல்லி விட்டார்.

(பேசுவேன்)



டிஷ்யூம்



8
ஆக்ஷன் ஸ்டார் ஜீவா

யார் கொடுத்த உரிமை?





சென்னை மைலாப்பூரில் உள்ள சி.பி.எஸ்.சி. பள்ளியொன்றில் பத்தாம் வகுப்புப் படிக்கும் மாணவி ஒருவர் சமீபத்தில் தற்கொலை முயற்சியில் இறங்கிவிட்டார். அவரைக் காப்பாற்றுவதற்குள் பெரும்பாடு ஆகிவிட்டிருக்கிறது.


வேறொரு சி.பி.எஸ்.சி. பள்ளியின் தலைமையாசிரியர் சொன்ன அதிர்ச்சியான செய்தியால், பத்தாம் வகுப்பைச் சேர்ந்த இருபதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பீதியடைந்து, தீவிர மன அழுத்தத்துக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

இதற்கெல்லாம் என்ன காரணம் தெரியுமா? "உங்களுக்கு எங்கள் பள்ளியில் பதினொன்றாம் வகுப்புக்கு ஸீட் கிடையாது" என்று சம்பந்தப்பட்ட பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் சொன்னதுதான்.

பாதிக்கப்பட்டவர்களின் பெற்றோர்கள் பள்ளியில் விசாரித்தால், "நாங்கள் வைத்திருக்கும் கட் ஆஃப் மார்க்கை உங்கள் பையன் தாண்டவில்லை" என்று கறாராகக் காரணம் சொல்லியிருக்கிறார்கள். இதில் வேடிக்கை, பத்தாம் வகுப்பு முழுத் தேர்வு (போர்டு எக்ஸாம்) இன்னும் நடக்கவில்லை என்பதுதான்! முழுத் தேர்வு மார்க்குகளை வைத்துத்தான் பதினொன்றாம் வகுப்புக்கு அனுமதி நடக்க வேண்டும். ஆனால், அரையாண்டுத் தேர்வு மார்க்குகளை அடிப்படையாக வைத்துப் பதினொன்றாம் வகுப்புக்கு மாணவர்களைத் தேர்வு செய்கின்றன இப்பள்ளிகள்.

"இவர்களின் தேர்வு முறையே தவறு. அரையாண்டுத் தேர்வில் ஒரு பையன் சரியாக மார்க் வாங்காவிட்டாலும், முழு ஆண்டுத் தேர்வில் நல்ல மார்க்குகள் பெற வாய்ப்பு இருக்கிறது. இது தவிர, பள்ளிகள் போர்டு தேர்வுக்கு முன்னர், 'பதினொன்றாம் வகுப்புக்கு அட்மிஷன் கிடையாது' என்று அறிவித்தால், அந்த ஏமாற்றமே சம்பந்தப்பட்ட மாணவன் சரியாக முழுத் தேர்வு எழுதாததற்கு

வழி வகுத்து விடும்" என்கிறார் பாதிக்கப்பட்ட ஒருவர் மாண வனின் தந்தை.



கல்வி

“மாணவன் மனத்தில் ஏற்படும் இத்தகைய குழப் பங்கள் அவனுடைய படிப்பை பாதிக்கும். மற்றொரு பள்ளியில் இதைக் காரணம் காட்டி அட்மிஷன் கொடுக்க மறுப்பதற் கும் வாய்ப்பு ஏற்படும். புதிய சூழல், தாழ்வு மனப்பான்மை, பெற்றோர் கொடுக்கும் நெருக்கடி போன்றவற்றால் படிப்பில் பனிச்சிடாமல் போக நிறைய சந்தர்ப்பம் இருக்கின்றது" என்கிறார் மனநல ஆலோ சகர் பிருந்தா ஜெயராமன்.

"அரையாண்டுத் தேர்வை வைத்து பதினொன்றாம் வகுப்பு அட்மிஷனை நிர்ணயிக்கும் உரிமையைப் பள்ளிகளுக்குக் கொடுத்தது யார்? போர்டு எக்ஸாமைவிட இவர்கள் நடத்தும் பரீட்சை மிக உயர்ந்ததா என்ன? வர்த்தகமயமாகிவிட்ட இன்றைய கல்வி முறையின் கொள்ளை யடிக்கும் நோக்கம்தான் இது!" என்று குமுறுகிறார் வழக்கறிஞர் சுரேஷ்.

சி.பி.எஸ்.சி. பள்ளிகளின் இந்த அராஜகப் போக்குக்கு முடிவு கட்டும் வகையில் 'கண்ணியத்தோடு கற்போம்' என்ற உறுதியான கோஷத்தோடு, 'கவலைப்படும் நகர மக்கள் கமிட்டி' என்கிற அமைப்பு துவங்கப்பட்டிருக்கிறது. இந்த கமிட்டியின் கூட்டம் சமீபத்தில் சென்னையில் நடந்தது. கல்வி நிபுணர்கள், பொதுநல ஆர்வலர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

"சி.பி.எஸ்.சி. பள்ளிகள் இந்த விஷயத்தில் நடந்துகொள்ளும் முறை சட்ட விரோதம்" என்று எல்லோரும் ஒருமித்த குரலில் அந்தக் கூட்டத்தில் பேசினர்.

பள்ளிகளின் இந்த அடாவடித் தனத்துக்கு, அயல்நாட்டில் தம் வாரிசு படிக்க வேண்டும்; சம்பாதிக்க வேண் டும் என்று மோகம் கொள்ளும் பெற் றோரும் ஒரு காரணம் என்பதும் மறுக்க முடியாத உண்மை.

- ப்ரியன்





உலகம்

சதாமுக்குப் பின்!


ஜி. எஸ். எஸ்.

வெளிநாடுகளிலிருந்து மட்டும் அகதிகள் வருவதில்லை. சொந்த நாட்டிலேயே 'உண்டு' என்கிறது இடம் பெயர்பவர்களுக்கான உலக அமைப்பு (International Organisation for Migration). இந்த வருடம் மட்டும் பத்து இலட்சம் ஈராக் மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேறி விட்டிருக்கிறார்கள். சிரியா போன்ற அண்டை நாடுகள் கொண்டிருக்கிறது. அமெரிக்கா உள்பட இன்ன பிற காரணிகளும் அதற்குக் காரணம்.

ஏழாயிரம் பேரைத் தன் எல்லைக்குள் அனுமதிக்கத் தயார் என்று அறிவித்திருக்கிறது அமெரிக்கா. தவிர, ஈராக்கின் அண்டை நாடுகள் ஈராக்கியர்களை அனுமதித்தால், அதற்கு நிதியுதவி செய்யத் தயார் என்று தொட்டிலையும் ஆட்டுகிறது. ஐரோப்பிய யூனியன் 1.3 கோடி டாலர்களை ஈராக் அகதிகளுக்கு அளிக்க முன் வந்திருக்கிறது. அதாவது சிரியா, லெபனான், ஜோர்டான் போன்ற நாடுகளில் தஞ்சம் அடைந்தவர்களுக்கு அந்த அரசுகளின் மூலமாக.

மக்கள் இடம்பெயர்வதில் வியப்பில்லை. தினமும் பாக்தாத் தெருக்களிலிருந்து பத்துப் பிணங்கள் அகற்றப்பட்டு வந்தன. சமீபகாலமாக இது நாற்பதாக அதிகரித்து இருக்கிறது.

இது தவிர, வெடிகுண்டுகளால் ஏற்படும் உயிரிழப்புகள் தனி. பாக்தாத்தின் தென்மேற்கில் உள்ள சல்மான் பாக் எனும் இடத்தில் வெடிகுண்டு தொழிற்சாலை ஒன்றைக்






தங்கள் எல்லைகளை மூடிவிட்டதால் ஈராக்கிலேயே பல்வேறு மூலைகளுக்கு இடம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

காரணம் தெரிந்ததுதான்... அறிவிக்கப்படாத யுத்தம். அமெரிக்கா - சதாமின் போர் ஒருவிதத்தில் முடிவுக்கு வந்தாலும், இரு முஸ்லிம் இனங்களுக்கிடையே உள்ள பகைமை தொடர்ந்து கண்டுபிடித்து அழித்திருக்கிறார்கள். அல்கொய்தாவின் ஆதரவுடன் இயங்கி வந்த இந்த இடம் கைப்பற்றப்பட்டபோது, அங்கே ஆயிரம் பவுண்டு எடை கொண்ட வெடிமருந்துகள் இருந்திருக்கின்றன.

சதாம் ஆட்சியில் அநீதிகள் அரங்கேறியதுண்டுதான். ஆனால், சதாம் மறைந்த பின் அவை அழிந்துவிடவில்லை. ○



மரணத்திலிருந்து மீண்டு காளியின்
அருள் சக்தி பெற்றவர்



என்னிடம் உங்கள் சுமைகளைச் சுமத்தினால் அதை நிச்சயமாகத் தாங்குவேன்.

நீங்கள் என் உபதேசங்களைக் கேட்கவும் காளியின் உதவிகளைப் பெறவும் என் மாகாளியிடம் சரணம் அடைந்தால்...

★ என் காளியின் வசிய எந்திர மூலம் கணவன் மனைவி ஒன்று சேர,

★ செய்வினைகள் நீங்க, ★ கல்வி, உத்யோகம், வதை வேதங்காண் திருமந்திரம், அமாவாசை பரிகார ஹோமங்கள் மூலம் என் காளி நிவர்த்தி செய்வாள்.

என் காளியை நாடி வந்தால் எந்தப் பிரச்னைகளில் நீங்கள் சிக்கியிருந்தாலும் ஜாதி மத பேதமின்றி என் மாகாளி இருளிலிருந்து உங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவாள் - நிச்சயமாக.

★ குபேர வசியம், ★ காதலர்கள் வசியம், ★ வியாபார வசியம், ★ தொழில் வசியம்,
★ புத்ரபேறு வசியம், ★ திருமண வசியம், ★ சர்வகாரிய வசியம்,
★ குடும்ப வசியம் ★ மேலதிகாரிகள் வசியம்,

★ கைகால் மூட்டு வலி, இடுப்பு வலிகளுக்கு மூலிகைகளின் முறைப்படி தயார் செய்யப்பட்ட மருந்துகள் கிடைக்கும்.

ஸ்ரீலஸ்ரீ தவத்திரு P.P. குமார்ஜீ,
நெ.14A, தேவனேரி, ECR ரோடு,
பட்டிபுலம் போஸ்ட், காஞ்சிபுரம் மாவட்டம் - 603 104
போன்: 2744 2733, செல்:94441 35526

பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
இல்வச ஆலோசனைகளுக்குத் தொடர்புகொள்ளவும்.

சூலமங்கலம் கோயில் கும்பாபிஷேகம்

தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டம், சூலமங்கலம் கிராமத்தில் உள்ள ஸ்ரீ பூமி நீளா சமேத செளந்திரராஜப் பெருமாள் திருக்கோயில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகத் தெரிகிறது. 15 ஆண்டுகளுக்குப் பிறகு இதன் ஸம்ப்ரோக்ஷணம் (குடமுழுக்கு) வருகிற **26.2.2007 திங்கட்கிழமை காலை 9.30 - 10.30 மணிக்கு** நடைபெற உள்ளது. சூலமங்கல கிராமவாசிகள் எங்கிருந்தாலும் இந்தப் புனிதமான திருப்பணியில் பங்கேற்று, நல்ல முறையில் கோயில் திருப்பணி, கும்பாபிஷேகம், அதன்பிறகு 48 நாள் மண்டலாபிஷேகம் இவற்றிற்கெல்லாம் மேலாக தினசரி இரு வேளையாவது பூஜை நடப்பதற்கும் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Contact:
R. Varadaraja Bhattachari
2/80, அக்ரஹாரம், சூலமங்கலம்,
பசுபதிகோவில் வழி
Pin: 614 206
Tel: 04374 240041

Chennai Contact:
B. Sivaramakrishnan
24860047
S.V.Krishnamurthy
22328292
S. Ramaswamy
24424913

நான் எந்தக் கட்சி?

சரத்... சதமடித்த களைப்பில்லாமல் பேசுகிறார்; சினிமாவில் புதிய முயற்சிகளுக்கும் வித்தியாசமான சோதனைகளுக்கும் தயார் என்கிறார். அரசியல், சினிமா, நடிகர் சங்கப் பொறுப்பு எனப் பல்வேறு பரிமாணங்களில் கிடைத்த அனுபவம் அவரது பேச்சில் தெறிக்கிறது...

நூறு படங்கள் தாண்டி, இதோ 'பச்சைக் கிளி முத்துச்சரமு'ம் திரைக்கு வந்துவிட்டது - எப்படி உணருகிறீர்கள்?

"ரொம்ப சந்தோஷமா இருக்கு. நான் தாண்டி வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கும்போது ரொம்பப் பிரமிப்பாகவும் ஆச்சர்யமாகவும் இருக்கு. முன்பைவிட கவனம் வருது. இதுவரை நான் கொட்டிய உழைப்புக்குத் தோள் கொடுத்த ரசிகர்களின் ஆதரவு என்றும் தொடர வேண்டும் என்ற எண்ணம் நெஞ்சில் ஆழமாக உள்ளது.'

இனிமேல் இந்த மாதிரியான படங்களில்தான் நடிக்க வேண்டும் என்று திட்டங்கள் ஏதாவது இருக்கின்றனவா?

"வன்முறை, காதல் என்ற எல்லைகளைத் தாண்டி, சிறந்த கதையம்சம் கொண்ட படங்களைத் தரவேண்டும். ரசிகர்களின் ரசனையை இந்த எல்லையைத் தாண்டிக் கொண்டு செல்ல வேண்டும் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்."

வில்லனாக நடிக்கவும் தயாராக இருக்கிறீர்களாமே?

"அதிலென்ன தப்பு? நான் வில்லனாகவும் செய்தவன்தானே? அது ரொம்பச் சவாலான விஷயம். பெயர் சொல்லுமளவுக்கு என் கேரியரில் இந்தப் பரிமாணமும் தேவை என்றே நினைக்கிறேன். ஆனால் நிஜ வாழ்க்கையில் நான் கதாநாயகன்தான்."

கதாநாயகர்கள் இணைந்து நடிப்பதைப் பற்றி...

"வரவேற்க வேண்டிய விஷயம். அம்மாதிரியான படங்கள், தயாரிப்பாளர்கள் கஷ்டத்தை ஒரு வகையில் குறைக்க உதவும்."

நடிகர்கள் தங்களது சம்பளத்தைக் குறைக்க வேண்டும் என்றொரு பேச்சு உள்ளதே!

"சினிமாத் துறையில் ஓடுகிற குதிரை மீதுதான் பணம் கட்டுவார்கள். வீட்டில் உட்கார்ந்திருக்கும் யாரையும் தேடிவந்து பணம் தருவதில்லை. வெளியில் ஒரு தொகையைச் சொல்லிவிட்டு, வாங்குவது வேறுவிதமாக இருந்தால் யார் என்ன செய்ய முடியும்? எல்லா நடிகர்களும் உட்கார்ந்து மனப்பூர்வமாகப் பேசி ஒத்துழைத்துத் தீர்மானிக்க வேண்டிய விஷயம் இது. அதற்கான சாத்தியம் மிகக் குறைவாக இருக்கிறது."

நடிகர் சங்கக் கட்டடம் கட்டுவது எந்த நிலையில் இருகிறது?

"புதுக் கட்டடத்துக்கான வரைபடம் தயாராகிவிட்டது. மே மாதத்துக்குள் அடிக்கல் நாட்டப்பட்டு, ஒரு வருடத்துக்குள் முடிவடைய திட்டமிடப்பட்டுள்ளது."



சந்திப்பு

உங்கள் எதிர்கால அரசியல்...?

"தி.மு.க.வில் பத்து வருடங்கள் இருந்து, அ.தி.மு.க.வில் ஆறு மாதங்கள் இருந்து நிறைய விஷயங்களைப் பார்த்துவிட்டேன். இனிமேல் எந்தக் கட்சியிலும் சேரவோ அல்லது தனிக் கட்சி ஆரம்பிக்கவோ எண்ணம் கிடையாது. ஒரு நடுநிலைவாதியாக இருக்கவே முடிவு செய்துள்ளேன்."

காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பால் கர்நாடகத் திரைத்துறையினர் ஆர்ப்பாட்டம், ஊர்வலம், கண்டனங்கள் என ஈடுபடுகின்றனர். தமிழ்ச் சினிமாவில் சின்ன சலசலப்பு கூட இல்லையே... ஏன்?

"நடுவர் மன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளது. நமது தமிழக முதல்வர், தீர்ப்பு போதிய திருப்தி அளிக்காத நிலையில் மேல் முறையீடு செய்யப் போவதாக அறிவித்துள்ளார்.

இந்நிலையில், நாங்கள் ஆர்ப்பாட்டம், போராட்டம் என்றால் அது தமிழகத்தில் வாழும் கன்னடர்களுக்கும், கர்நாடகாவில் வாழ்கின்ற தமிழர்களுக்கும் பாதகமாகத்தான் அமையும்.

ஆனால் தமிழகத்துக்குப் பாதகமான சூழல் ஏற்படுமெனில், திரையுலகம் போராடத் தயங்காது."

உங்களது வாழ்க்கை லட்சியம் என்ன?

"ஒரே இலட்சியம்தான்! சாதி, இன, மத பேதங்களைக் கடந்த மாமனிதர் கர்மவீரர் காமராசருக்கு அவர் பிறந்த மண்ணில் மணிமண்டபம் கட்ட வேண்டும். அதற்காகத்தான் எல்லாத் தலைவர்களையும் சந்தித்து வருகிறேன்."




மனம் திறக்கிறார் சரத்

தொகுப்பு:
அருணா செந்தில்
படங்கள் :
பொள்ளாச்சி சுந்தரம்

வேப்பிலாங்குளம்ங்கிற ஒரு ஊர்ல, முத்துவீர பகடைன்னு ஒருத்தன் இருந்தான். அவம் பொண்டாட்டி பேரு பூவுடையா. அழகான ஒரு ஆம்பளப் புள்ளை. பேரு சின்னத்தம்பி.

வளர்ந்து வாலிபமானதும் சின்னத்தம்பி வாட்டசாட்டமா உருண்டு திரண்டுட்டான். வெளியூர் அண்ணாவிமார்களிடம் போய் கம்பு சுத்தறது, வஸ்தாரி பிடிக்கிறதுன்னு சகல வீர வெளையாட்டுக்களையும் கத்துக்கிட்டான்.



8

கழனியூரன்


நாங்குனேரியில மாணிக்க வாசபிள்ளைன்னு ஒரு பண்ணையார் வளர்த்து வந்த குதிரைக்கு மதம் பிடிச்சிட்டு. பிள்ளைவாளைப் பார்த்தாலே ரொம்ப மெரண்டது. அத விற்கவும் அவருக்கு மனசில்லை. அதனால, 'இந்தக் குதிரையை யார் அடக்கி, வசத்துக்குக் கொண்டு வாராங்களோ, அவங்களுக்குப் பத்துப் பொன்காச பரிசாக் கொடுக்கிறேன்'னு அறிவிச்சாரு.

அந்தச் சேதி சுத்துப்பட்டி எல்லாம் பரவிச்சு. சின்னத்தம்பியோட சேக்காளிமாருக 'சின்னத்தம்பி, நீ நினைச்சா நாங்குனேரி பிள்ளைவாளோட குதிரையை அடக்கிடலாம்'னு சொல்லி அவனை உசுப்பேத்தினாங்க. இவனும் போனான்.

நேர குதிர லாயத்துக்குப் போயி, குதிரயையே கொஞ்ச நேரம் கண்ணால உத்துப் பாத்தான். குதிரயும் சின்னத்தம்பியக் கண் எடுக்காமப் பார்த்துச்சு. இப்படிக் கொஞ்ச நேரம் கண்ணால பார்த்து வசியம் செஞ்சி, குதிரையைத் தன் வசத்துக்குக் கொண்டு வந்தான். அப்புறம், குதிரய அவுத்துட்டு வந்து குதிர மேல ஏறி சவாரி செஞ்சபடியே, அந்த ஊர மூணு வளையம் சுத்தி வந்தான்.

அடங்காத குதிரையை அடக்கிய சின்னத்தம்பியோட வீரத்தப் பாராட்டி நாங்குனேரி நாட்டாமை, பத்துப் பொன்

நடுச்சாம நரபலி!



ஜனங்களின் சாமி

காசுகள சின்னத்தம்பியிடம் கொடுத்து, அவனப் பாராட்டினார். சினனத்தம்பி யோட புகழ் சுத்து வட்டாரமெல்லாம் பரவிட்டு.

சேதி, மகாராஜா காது வரைக்கும் போயிட்டு. ஒடனே அவரு சின்னத்தம்பி யக் கூப்பிட்டு,

"வள்ளியூர் காட்டுல அழிமானம் செய்யுற காட்டு வெலங்குக கொட்டத்தை ஒன்னாலதான் அடக்க முடியும். அப்படி அடக்குனா ஒனக்குச் சன்மானம் காத்துக் கிட்டு இருக்கு"ன்னார்.

'சரி'ன்னு சொல்லி புறப்பட்ட சின்னத் தம்பி, அவனோட சேக்காளிமாருகளோட வள்ளியூர் காட்டுக்கு வெட்டருவா, வேலு, வீச்சுக்கம்போட போயி, காட்டு மிருகங்கள வேட்டையாடினான். அப்புறம் அதுக ஊருக்குள்ளயே எறங்கல. வள்ளியூர்க் காரங்க நிம்மதியா வாழ்ந்தாங்க. சந் தோஷப்பட்டாங்க. சின்னத்தம்பியைப் பாராட்டுனாங்க.



சின்னத்தம்பி காட்டு வெலங்குகள வேட்டையாட வள்ளியூர் காட்டுல தங்கி இருந்தபோது, சோனாச் சிங்கிற கன்னிப் பெண் அழ குல மயங்கிட்டான். சோனாச்சி யும் சின்னத்தம்பியோட ஆணழகப் பார்த்து மயங்கிட்டா. ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் காதலிக்க ஆரம் பிச்சாங்க.

சின்னத்தம்பி காட்டு வெலங்குகளை வேட்டையாடியதால மகாராஜா கூப் பிட்டு சின்னத்தம்பிக்கும் அவனோட சேக்காளிகளுக்கும் சன்மானங்க கொடுத்து கௌரவிச்சாரு. அத்தோட அரண்மனைத் தளபதியா நெயமிச்சாரு.



தனது வீரதீரத்தால அரண்மனைத் தளபதியாகியிட்டானே சின்னத்தம்பின்னு மேம்பட்டறையைச் சேர்ந்த சிலரு பொறா மைப்பட்டாங்க. சின்னத்தம்பிய எப் படியாவது கொன் னுடனும்னு காத் துக் கிடக்க ஆரம் பிச்சாங்க. அதனால அவன் எங்க போறான், எங்க வாரான்னு கண் காணிச்சாங்க.

ஒரு நா சின்னத்தம்பி முக்கூடல் பக்கத்துல இருக்க பாப்பாக்குடிக்கு ஒரு ஜோலியாப் புறப்பட்டுப் போனான். அவன் மட்டும் தன்னந்தனியா, காட்டு வழியா ஒத்தயில நடந்து வந்துக்கிட்டு இருந்தான். சின்னத்தம்பிக்குத் துணையா ஒரு காவ நாயி கூட போச்சு. அவனைக் கொல்றதுக்காக நாலு பேர் தொடர்ந்து வந்துக்கிட்டே இருந்தாங்க.

முக்கூடல் பக்கத்துல இருக்குற பேய்ப் பாறை ஓடையை ஒட்டிய ஒரு புஞ்சையில, மாடன்னு ஒரு சம்சாரி உழுதுக்கிட்டு இருந்தான். அவன் கலப்பைக் கொழுவுல ஒரு 'கிடாரம்' தட்டுப்பட்டுச்சு. அப்ப மாடன்கூட அவனோட மச்சினனும் இருந்தான்.

புதையல் பானையைப் பார்த்த

மாடனோட மச்சினன் "மச்சான், புதையலைத் தொடாதே! ரத்தப்பொலி கொடுத்த பெறகுதான் புதையலை எடுக்கணும்"னான். மாடனும் "சரி'ன்னு சொல்லிட்டு உழுறத நிறுத்திட்டான்.


உழுறத எடையில நிறுத்திட்டு வாரவங்களப் பார்த்த சின்னத்தம்பியோட எதிரிங்க, என்ன... ஏதுன்னு விசாரிச்சாங்க. மாடனும் புதையல் விஷயத்தைச் சொன்னான். உடனே, வழிப்போக்கா வந்தவங்க தூரத்தில போகற சின்னத்தம்பியைக் காமிச்சு, "அவனை மாதிரி வாட்டசாட்டமான, கன்னி கழியாத எளவட்டத்தப் 'பொலி' கொடுத்தாத்தான் புதையலை எடுக்க முடியும்"னு சொன்னாங்க.

'சரி'ன்னு போன மாடனும் அவன் மச்சினனும் சின்னத்தம்பிகிட்ட போய், "ஐயாவுக்கு எந்த ஊரு. இப்ப எங்க போறீங்கன்னு?" பக்குவமா விசாரிக்கிற மாதிரி பேச்சுக் கொடுத்தாங்க. அப்படியே 'பதனி குடிச்சுட்டுப் போங்களேன்'னுக் கூப்பிட்டாக.

அவனும் வந்தான். பதனியில மயக்க மருந்த கலந்து ஊத்திக் கொடுத்தான் மாடன். சின்னத் தம்பி ஓலப்பட்டையில வாய் வைச்சு பதினியக் குடிக்கப் போறபோது, அவங்கிட்ட இருந்த காவல் நாயி சின்னத்தம்பியப் பெறாண்டுச்சு. ஆனா, நாய் எதேச்சயா பண்ணுதுன்னு நினச்ச சின்னத்தம்பி, பசியும் தாகமும் ரொம்ப இருந்ததால, பட்டையில இருந்த பதனி முழுவதையும் 'மடக் மடக்'னு குடிச்சிட்டான். உடனே மயக்கமாகி விழுந்துட்டான். அப்புறம் சின்னத்தம்பியைக் குண்டுக்கட்டாகக் கட்டித் தூக்கிட்டுப் போய் ஒரு புதர் மறைவுல போட்டுட்டாங்க.

நடுச்சாம வேளவரக் காத்திருந்து, சின்னத்தம்பியைத் தூக்கிட்டுப்போயி பொதையல் இருக்கிற இடத்தில போட்டு ஒரே வெட்டா வெட்டி அவனப் புதையலுக்கு நரபலியாக் கொடுத்துட்டாங்க.

நரபலி கொடுத்த பெறகு, கலப்பக் கொழு தட்டிய இடத்தைத் தோண்டிப் பார்த்தா, அதுல ஒரு பெரிய செப்புப் பானை இருந்திச்சு. அந்தப் பானையில, தங்கமும் இல்ல, வைரமும் இல்ல. சின்னத்தம்பியை நரபலி கொடுக்கச் சொன்னவங்க, புதையல் பானையில் ஒண்ணும் இல்லைன்னு தெரிஞ்சதும் சிட்டாப் பறந்துட்டாங்க.



சின்னத்தம்பி

அம்பாசமுத்திரம் வட்டம், பாப்பாக்குடியில் சின்னத்தம்பியின் மூலக்கோயில் உள்ளது. படத்திலுள்ள சின்னத்தம்பியின் பீடம், தென்காசி வட்டம் பட்டமுடையார்புரம் என்ற ஊரில் உள்ள அருந்ததியர் சமுதாயத்துக்குச் சொந்தமான கோயிலில் உள்ளது.

மாடனும், அவன் மச்சினனும் ராவோடராவா அந்த இடத்துலயே சின்னத்தம்பிய, புதையல் தேடி வெட்டிய குழிக்குள்ளயே போட்டு மூடிட்டாங்க. நடந்த நடப்பப் பார்த்த காவல் நாயி, சின்னத்தம்பியின் காதலி சோனாச்சியோட சேலையைப் பிடிச்சு இழுத்துக்கிட்டே வந்து சின்னத்தம்பியப் பொலி கொடுத்த இடத்தைக் காட்டுச்சு. தன் காதலன் செத்துட்டான்னதும் சோனாச்சியும் பக்கத்துல ஒரு ஒரு மரத்துல தூக்குப்போட்டுச் செத்துட்டா.

சின்னத்தம்பியக் கொன்னவங்களக் கண்டுபிடிச்சு மகாராஜா தண்டிச்சாரு. சின்னத்தம்பிய அடக்கம் செஞ்ச எடத்துல ஒரு கோயிலையும் கட்டி வச்சாருன்னு. சின்னத் தம்பியோட சோகக் கதையச் சொன்னாரு பனையன்குறிச்சியச் சேர்ந்த பெரிய கருப்பன்.

(தொடரும்)

சரோஜா வைத்யநாத ஐயர் பரம்பரை ஜோதிடர்

ஜோதிடத்தில் **50** வருட அனுபவம் கொண்ட

"ஜோதிட வாணி"

ஸ்ரீமதி சரோஜா வைத்யநாத ஸ்வாமி ஐயர்

கைரேகை, ஜாதகம், நியூமராலஜி, வாஸ்து, சாமுத்ரிகா லக்ஷணம், திருமணப் பொருத்தம், அனைத்தும் பார்க்கப்படும்.

அனைத்து ஆலோசனைகளும் வழங்கப்படும்.

வெளியூரில் வசிப்பவர்கள் அதிகபட்சமாக 5 கேள்விகள் வரை கேட்க ரூ.500/- கட்டணத்தை முன்னதாகவே அனுப்பவும்.

V. சரோஜா, 45/18, ஸ்ரீநிவாச ஐயர் தெரு, மேற்கு மாம்பலம்,
அயோத்யா மண்டபம் அருகில்,
பிள்ளையார்கோவில் அருகில் உள்ள தெரு.
Ph: 23716892, Cell: 9444230523, 9444684006, 9444506218



MAHALAKSHMI CATERING SERVICES

எங்களது முக்கியமான சேவைகள்

கோலம் போடுதல்,
கிரஷ், வைதீக சாமான்கள்,
அங்குமணி
சாமான்கள் டப்பாவுடன்

மண்டபம்
Cleaning Materials,
தாம்பூல பை
(With Printing)

மங்கள வாத்தியம்,
மாலை புஷ்பம்
வேண்டிய அளவு

ஆர்த்தி பச்சைபுடி
ஏற்பாடுகள், காசியாத்திரை
சாமான்கள், பெயருடன்
பட்டுபாய், மாப்பிள்ளை
சிறப்பு சீர்வகைகள்.

Sp.Tea / Coffee / Boost / Milk,
உயர்தர டிபன் வகைகள்,
உயர்தர சாப்பாடு வகைகள்,
சீர்பக்ஷணங்கள் இருவீட்டாருக்கும்,
வெற்றிலை சீவல்,
ரஷீக்லால் பாக்கு, பீடா

Paper roll,
Disposable Cups,
Mineral Water, சிறுவைட
பணியாளர்கள்.

Bridal
Make-up

**எங்கள் சேவை
உங்கள் மகிழ்ச்சியே!**

Contact: **B. NAGARAJAN**, 52, Balamurugan Nagar, 10" Street, Keelkattalai, Chennai - 600 117.
Phone: 2247 2255, 6546 2875 Cell: 98410 13540, 98410 77397 Trichy : 98424 51975

களைகளுக்கிடையே செந்நெல் கதிர்!



புத்தகம்

மூன்று பெயர்களும் என் முகவரிப் புத்தகமும் - ஈரோடு தமிழன்பன், மணிவாசகர் நூலகம், 12B, மேல சன்னதி, சிதம்பரம் - *608 001.*

'புதுக்கவிதை' என்ற பெயரில் மண்டிக் கிடக்கும் களைகளுக்கு மத்தியில் விளைந்துள்ள செந்நெல் கதிர் - இந்தத் தொகுப்பு. அலை அலையாய்ச் சிந்தனைகளை எழுப்பும் வலிமையான படிமங்கள், கூர்மையான சமுதாய நோக்கு, எளிய மொழிக்குள் செறிந்திருக்கும் கருத்தாழம். அச்சும் நேர்த்தியும் நூலின் மதிப்பும் நோக்க, விலை மிகக் குறைவே.

கதை - கபிலன் வைரமுத்து, சூர்யா இலக்கியம் வெளியீடு, *22*, நான்காம் குறுக்குத் தெரு, ட்ரஸ்ட்புரம், சென்னை - *24.*





எளிய நடையில் அரிய கதைகள். உருவகமா, யதார்த்தமா என்று புலப்படுத்தாமல் ஒளிந்து பிடித்து விளையாடும் அணுகுமுறை சுவாரஸ்யம் ஊட்டுகிறது. நடைமுறைக் கொடூரங்களால் கிறப்படாத, காயப்படாத இளமையின் புத்துணர்ச்சியும் இலட்சிய நோக்கும் பொதிந்துள்ள கதைகள்.

வாழ்வியல் நகைச்சுவை - முனைவர் கு.ஞானசம்பந்தன், அமுதம் பதிப்பகம், *3*, டெப்டி கலெக்டர் காலனி, மூன்றாவது தெரு, கே.கே.நகர், மதுரை - *625 020.*

அட்டையைப் பார்க்கிறபோது அரும்புகிற புன்னகை, புத்தகத்தைப் படித்து முடிக்கும் வரை நீடிக்கும். அன்றாடச் சிந்தனைக் கோலங்களை நகைச்சுவை ரங்கோலி பவுடரால் வண்ணமூட்டி வியக்க வைக்கிறார் பேராசிரியர். 'புதிய பார்வை' இதழில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பு.





தெய்வம் தந்த பூவே - மு.மாறன், குமரன் பதிப்பகம், *3*, முத்துக்கிருஷ்ணன் தெரு, த.பெ.எண்:*6124*, தியாகராய நகர், சென்னை - *600 017.*

பல்வேறு பத்திரிகைகளில் வெளியான சிறுகதைகளின் தொகுப்பு. பல்சுவைக் களஞ்சியம். கூர்ந்து கவனித்தால் பத்திரிகைக் கட்டாயங்கள் கதாசிரியரின் சிறகுகளைக் கட்டி வைத்திருப்பது தெரியும். அதையும் மீறி அங்கங்கே 'ஜில்'லென்று பறக்கும் இடங்களும் உண்டு.

- அத்தியாயன்





20 வீட்டுக்குச் செல்லும் வழி!



சுஜாதா

"விடுப்பா,
வீட்டுக்குப் போகலாம்"

- இந்த எளிய உரையாடலை யோசியுங்கள்.

'விடு' என்கிற வினைச்சொல்லைப் பெயர்ச் சொல்லாக்கும்போது 'வீடு' என்றாகி விடுதலையைக் குறிக்கிறது; நட்டபின் வீடில்லை (நட்பை எளிதாக விட்டுவிட முடியாது) என்கிறது குறள். 'வீடெனப்படும் வினைவிடுதல்' என்று சீவக சிந்தாமணியில் கருமவினைகள் நீங்குதல் என்கிற பொருளில் வருகிறது. இவை எல்லாம் வெளியே அழைக்கின்றன. அதேசமயம் மற்றொரு கோணத்தில் வீடு என்பது நம்மை அறைகளுக்குள் கட்டிப் போடுகிறது. வீடு என்ற சொல் மனை, இருப்பிடம் என்ற பொருளில் முதலில் புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூலில் வருகிறது. தமிழில் வீட்டுக்குப் பல பொருள்கள் உண்டு. வசிக்கும் இடம், சொர்க்கம், விடுதலை, ஜோசியர்கள் சொல்லும் கிரகங்களின் இருப்பிடம் - இப்படி இந்தச் சொல்லின் எல்லாப் பயன்பாடுகளையும் நம்மாழ்வார் ஒரு சிறிய வஞ்சிப்பாவில் வைத்திருக்கிறார்.

வீடுமின் முற்றவும்
வீடு செய்து உம்முயிர்
வீடுடையானிடை
வீடுசெய்ம்மினே

முதல் 'வீடு', 'வீடுமின்' விட்டுவிடுங்கள் என்று ஆணையிடுகிறது. முற்றவும் வீடுசெய்து - எல்லாவற்றையும் இவ்வாறு விட்டபின் வீடுடையானிடை - முக்தி அளிப்பவனிடத்தில்; வீடுசெய்ம்மின் - ஒப்படைத்துவிடுங்கள். ஒரு வீடு விடுதலை வேண்டுகிறது, ஒரு வீடு சொர்க்கம் காட்டுகிறது, ஒரு வீடு ஒப்படைக்கிறது. 'முற்றவும்' என்பது முக்கியம். யான், எனது என்ற இருவகைப் பற்றையும் பரிபூர்ணமாக விட்டுவிட வேண்டுமாம்.

நதியில் மூழ்கப் போகிறவன் ஆடை அவிழ்ந்து வெள்ளத்தில் சென்றால் கவலைப்பட மாட்டான். அதுபோல கடைசி ஆசைகளையும் துறந்து வீடுடையானிடத்தில் வீடு செய்தல் வேண்டும். அப்போதுதான் நம்மால் வீட்டுக்குப் போக முடியும். *(படிக்கலாம்)*

நோய்



காத்திருக்க வேண்டிய அவசியமில்லை; ஃபீஸ் கொடுக்க வேண்டியதில்லை; அப்பாயிண்ட்மெண்ட் இல்லை; டோக்கன் இல்லை. நேரே மெடிக்கல் ஷாப்புக்குச் சென்று 'தலை வலிக்குது, உடம்பு நோகுது... மாத்திரை குடுப்பா...' என்று வாங்கிப் போட்டுக் கொண்டு வேலைக்குக் கிளம்ப வேண்டியதுதான். இதுதான் நம்மில் பலருக்கும் இன்றைக்கு வழக்கமாக இருக்கிறது. இது சரியான முறைதானா? சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியின் பேராசிரியரும், பொது மருத்துவருமான எஸ்.கே.ராஜனிடம் கேட்டோம்:

"டாக்டரின் அறிவுரை இன்றி, கண்காணிப்பின்றி மருந்துக் கடைகளில் வியாதியைச் சொல்லி மருந்து வாங்கிச் சாப்பிடுவது மிகவும் ஆபத்தானது.

எல்லா மருந்துக் கடைகளிலும் பார்மஸி படித்தவர்கள் இருப்பதில்லை. 100க்கு 90 கடைகளில் சர்ட்டிஃபிகேட் ஒருவர் வைத்திருப்பார்; கடையில் இருப்பவர் வேறொருவராய் இருப்பார். வேலை கிடைக்காத, படிப்பைத் தொடர முடியாத, பல்வேறு பொருளாதாரச் சூழல்களில் இருக்கும் பெரும்பாலோர் இதுபோன்று கடைகளில் பணியில் உள்ளனர்.

• எஸ்.கே.ராஜன்



இந்த மாத்திரை இது என்பது மட்டுமே இவர்களுக்குத் தெரியும். இந்த மாத்திரை என்னென்ன செய்யும், பக்க விளைவுகள் என்னென்ன என்பதெல்லாம் தெரியாது.

ஒரு ஐம்பது வயதுக்காரர் மார்பு வலி என்று கூறினால், மார்பு வலி என்கிறாரே என்று இருதய வியாதி மாத்திரையைக் கொடுத்தால் என்னவாகும்? மயக்கம், படபடப்பு ஏற்பட்டு, மருத்துவமனையில் அட்மிட் பண்ண வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்.

ஆஸ்பிரின், புரூஃபன் போன்ற மாத்திரைகள் கடைகளில் கிடைக்கின்றன. இவற்றைச் சரியான ப்ரிஸ்கிரிப்ஷன் இன்றி அடிக்கடி வாங்கிச் சாப்பிட்டால், அதுவும் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் வயிற்றெரிச்சல், புண், ரத்தக்குழாயில் சேதம் போன்றவை ஏற்படும்.

இபு புரூஃபன் போன்ற வலி நிவாரண மாத்திரைகளை முறையாகச் சாப்பிடாவிட்டால் சிறுநீரகத்தைப் பாதிக்கவும், ரத்த வெள்ளை அணுக்களைக் குறைக்கவும் செய்யும்.

இதைப்போன்ற மாத்திரைகளை டாக்டர்களே மிகுந்த கண்காணிப்புடன், போதிய ஆய்வுக்குப் பின்னரே தருவார்கள்.

சளி, இருமலுக்குப் பெரும்பாலும் மருந்துக் கடை வாசலில்தான் தவமிருக்கிறோம். 'இருமல் சளி மாத்திரை கொடுங்கள்' என்றுதான் கேட்கிறோமே தவிர, எனக்கு இந்தந்தப் பிரச்னைகள் உண்டு, அதற்காக இன்னின்ன மருந்துகள் சாப்பிடுகிறேன்

வாங்க வேண்டாம்!

என்கிற தகவல்களை நாம் சொல்வதும் இல்லை; அவர்கள் கேட்பதும் இல்லை.

சர்க்கரை நோய்க்கும் பலவித மாத்திரைகள் உண்டு. மருந்துக் கடையில் வேலை செய்பவர்களுக்கு, மாத்திரைகளைத் தெரியுமே தவிர, அவை கணையத்தில் இன்சுலினை சுரக்க வைக்குமா, ரத்தத்தில் உள்ள சர்க்கரையை குறைக்குமா, கல்லீரலிலிருந்து சர்க்கரை வெளியேறாமல் தடுக்குமா என்றெல்லாம் தெரியாது. இந்த விவரங்கள் மருத்துவர்களுக்குத்தான் தெரியும். மருத்துவர் ஆலோசனையின்றி இவ்வியாதிக்காரர்கள் கடை இருக்கும் பக்கம் கூடப் போகக் கூடாது.

ரத்தக் கொதிப்புக்கும் இப்படித்தான்.



ரத்தக் கொதிப்பை அதிகரிக்காமலிருக்க, மன உளைச்சலைக் குறைக்க, இருதயத்தைச் சீராகச் செயல்படுத்த என்று பலவித மாத்திரைகள் உண்டு.

கடைகளில் ரத்தக் கொதிப்பு மாத்திரை என்றால், பிரபல டாக்டர்கள் எதை எழுதுகிறார்களோ, அதை எடுத்துத் தருவார்கள். எதற்கு என்று தெரியாது. இது ஆபத்தில் போய் முடிய வாய்ப்புண்டு.

தலைவலி, காய்ச்சல், உடம்பு வலி, வயிற்று வலி, வயிற்றோட்டம், கைகால் குடைச்சல் என்று வாயினால் சொல்லி கடைகளில் வாங்கிச் சாப்பிடும் மாத்திரை மருந்துகள், உடல் நலத்தைச் சீர்படுத்தும் என்பதை விட சீர்குலைக்க அதிக வாய்ப்புள்ளதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.



விழிப்புணர்வு

மருத்துவர்கள் உணவுக்கு முன், உணவுக்குப் பின் என்று தரும் மாத்திரைகளை அந்த முறை மாறாமல் சாப்பிடுவதன் மூலம், பக்க விளைவுகள் இன்றி உடல்நலத்தைச் சீர்படுத்திக் கொள்ளலாம்.

நோயாளியின் உடற்கூறு, நோய் உண்டான சூழல், தாங்குகின்ற உடல்சக்தி, பாதிப்பில்லா தன்மை என்ற எல்லா விவரங்களும் மருத்துவருக்குத்தான் தெரியும். இந்த மருந்தை, இந்த அளவு சாப்பிட வேண்டும் என்பதைத் தீர்மானிப்பவர் அவர்தான்.

அதை விடுத்து மருந்துக் கடை கவுண்ட்டர்களில் மாத்திரைகளுக்காக தவமிருந்தால் வரத்துக்குப் பதிலாக சாபம் கிடைக்க வாய்ப்புவே அதிகம்!" என்கிறார் டாக்டர் எஸ்.கே.ராஜன்

• அருணாஸ்



ஆயாசமாக இருந்தது. என் கையில் இருந்த ஸ்வீட் பாக்ஸ் முழுதும் புழுக்கள் ஊர்வதாக உணர்ந்தேன். அதனை ஆர்வமாக எடுத்து, வாயினை அகலத் திறந்து உள்ளே போட்டுக்கொள்ளும் சக ஊழியர்கள் ஓணான்களாகக் காட்சி அளித்தனர். ஏதோ பவித்ரன் சார் மாதிரியான விதிவிலக்குகள் எப்போதாவதுதான் தோன்றுகிறார்கள்.

அவருக்கும் எனக்கும் இருபது வயது வித்தியாசம். இன்றைய தேதியில் இப்போது கிடைத்துள்ள பதவி உயர்வு மூலம் அவருக்கு முந்தைய பதவிக்கு நான் வந்து விட்டேன். சொல்லப்போனால் அவர் எனக்கு ஆண்டுதோறும் போட்டு அனுப்புகின்ற அஸெஸ்மெண்ட் ரிப்போர்ட் மதிப்பெண்கள்தான் எனக்கு இந்த ப்ரமோஷனை ஏற்படுத்தித் தந்தன. ஆனால், அது குறித்த பொறாமையோ, காழ்ப்புணர்ச்சியோ சிறிதும் இல்லாதவர் அவர்.

இரண்டு வருடங்களுக்கு முன் நான் வேறொரு செக்ஷனில் இருந்தேன். புதிதாக நான் செய்திருந்த ஒரு ப்ராஜெக்ட்டில் இம்ப்ரஸ் ஆகியிருந்த பவித்ரன் சார், எங்கள் செக்ஷன் தலைவர் மூலம் வருடாந்தர சேர்மன் அவார்டு பெயர்ப் பட்டியலில் என் பெயரையும் சேர்த்தே தீர வேண்டும் என்று முயன்றார். அந்தப் பட்டியலில் இருந்த வேறொரு செக்ஷனைச் சேர்ந்த சீனியர் ஒருவர், "பொம்பளையா இருந்தாத்தான் பல்லைக் காட்டி, கொஞ்சலாகப் பேசி எல்லாப் பயல்களையும் மயக்கிட முடியுதே! அப்புறம் மெரிட் என்ன விளக்கெண்ணெய்..." என்று என் காது படவே கமெண்ட் அடிக்க, பொங்கி எழுந்து பெரிய அளவில் சண்டை போட்டேன். பவித்ரன் சார்தான் தலையிட்டுச் சமாதானம் செய்து என்னைத் தன்னுடைய செக்ஷனுக்கு எடுத்துக் கொண்டார்.

அவருடைய பெரிய ப்ளஸ் பாயிண்ட், தனக்குத் தெரியாதவற்றைத் தெரியாது என்று வயது வித்தியாசமோ, கௌரவமோ பார்க்காமல் என்னிடம் வெளிப்படையாக ஒப்புக்கொள்வது. குறிப்பாகக் கணினியின் சமீபத்திய முன்னேற்றங்களைப் புரிந்து கொண்டு அவற்றின்



சிறுகதை

ஓணான்

பெ.நாயகி

பலன்களை அவரால் உபயோகிக்க முடிந்ததில்லை. எனக்கு அந்த விஷயங்களில் நல்ல ஈடுபாடும் அறிவும் இருந்ததால், எனக்கு முழுச் சுதந்திரம் கொடுத்து புதிய ப்ரொபோசல்கள் பலவும் செய்ய வைத்தார்.

"உங்களுக்கு மட்டும் ஏன் சார் என் மீது பொறாமையோ, வேறு மாதிரியான உணர்வுகளோ தோன்றுவதில்லை?"

"எனக்கு ஏன்மா தோன்றணும்? உன்னை என் மகள் மாதிரிதான் நினைத்திருக்கிறேன்!" என்பார்.

"பெண்களுக்கென்று இயற்கையாகவே சில திறமைகள் உண்டும்மா. வெவ்வேறு வகைப் பதார்த்தங்களை அததுக்கு எவ்வளவு நேரம் ஆகுமோ, அதுக்குத் தகுந்த வரிசைப்படி அடுப்பில் ஏற்றி, குறைந்த நேரத்தில் பலவும் சமைக்கற டைம் மேனேஜ்மெண்ட்; புருஷன், மாமனார், மாமியார், நாத்தனார், மகன், மகள் என்று சம்பந்தமே இல்லாத வெரைட்டியான குணம் கொண்டவர்களுக்கும் ஈடு கொடுத்துச் சமாளித்துத் தன் கைக்குள் கட்டுப்படுத்திக் கொள்கிற ஹ்யூமன் ரிஸோர்ஸ் மேனேஜ்மெண்ட்; புருஷன் எந்த வகை சம்பாத்தியக்காரனாக இருந்தாலும், அதிலும் நாலு காசு மிச்சம் பிடிச்சு சொந்த வீடு கட்டிவிடுகிற ஃபைனான்ஸ் மேனேஜ்மெண்ட்; சொந்தம், உறவு, நட்பு, அக்கம் பக்கம் என்று எல்லோரையும் சமாளிக்கிற பிஹேவியரல் சயின்ஸ்- இவற்றையெல்லாம் எந்த ஐ.ஐ.எம்.மிலும் படிக்காமலேயே மாஸ்டர் ஆனவர்கள் பெண்கள். இது புரியாதவங்களுக்கும், புரிந்தாலும் ஜீரணிக்க முடியாதவங்களுக்கும்தான் பெண்ணைக் குறித்த வக்ரமான சிந்தனை வர முடியும்" என்பார்.

இவ்வளவு தூரம் தெளிந்த சிந்தனை உள்ளவரை அவருடைய மனைவி விவாகரத்து வாங்கிக்கொண்டு பிரிந்து போய் விட்டார் என்று கேள்விப்பட்டு வியந்திருக்கிறேன்.

அடுத்த சில நாட்களில் எனக்குப் பிராந்திய இயக்குநர் அலுவலகத்துக்குப் பணி மாற்றம் ஏற்பட்டது. அது கிட்டத்தட்ட இன்னொரு பதவி உயர்வு மாதிரி என்று எல்லோருக்கும் தெரியும். இதன் பின்னணியிலும் பவித்ரன் சார் இருந்தார் என்று கேள்விப்பட்டேன். ஆனால், அவர் ஏதும் சொல்லிக் கொள்ளவில்லை. கிளம்புகிற அன்று இந்த அலுவலகத்தில் விருந்து கொடுத்தார்கள்.

பிராந்திய இயக்குநர் அலுவலகத்தில் புன்னகையுடன் வரவேற்றார்கள். "டைரக்டர், மீட்டிங்கில் இருக்கிறார். முடிந்ததும் போய்ப் பாருங்கள்" என்று பி.ஏ. சொன்னார். காத்திருந்த நேரத்தில் அங்கே புதிதாகச் சந்தித்தவர்கள், "ஹலோ! நீங்கதானா? பவித்ரன் சார் உங்களைப் பற்றிய நிறையச் சொல்லி இருக்கிறார்" என்று நட்புடன் கை குலுக்கினார்கள்.

இயக்குநர் அனுமதி கொடுத்ததும் அறையினுள் நுழைந்தேன். இயக்குநரின் எதிரே மூன்று பேர் உட்கார்ந்திருநதனர்.

"ஹலோ! வெல்கம்" என்று வரவேற்றார். "ஷீ இஸ் அனிமா. இன்னிலருந்து என் டெக்னிக்கல் அஸிஸ்டெண்ட்" என்று எதிரில் இருந்தவர்களிடம் அறிமுகம் செய்தார். அவர்கள் மார்க்கெட்டிங் மற்றும் நிதித் துறை இணை இயக்குநர்கள் என்று என்னிடம் சொன்னார்.

"அடடா! நீங்கதானா அது? பவித்ரன் எப்படி இருக்கார்?" என்று விசாரித்தார்கள்.

"யூ நோ, ஷீ இஸ் த மேக் ஆஃப் பவித்ரன்."

" 'நான் வேற, அனிமா வேற இல்லை



• தொடக்க விழாவில் கௌதம்...

உலகத் தமிழர்களுக்காக...

உலகம் முழுவதும் தமிழர்கள் வியாபித்திருக்கிறார்கள். அவர்களின் பொழுதுபோக்கு எல்லைகளை விஸ்தரிக்க முடிவெடுத்த ஜீ.வி. ஃபிலிம்ஸ் நிறுவனம், www.filmsntv.com என்கிற புதிய இணையதளம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. இதன் தமிழ் அங்கமான www.tamilpictures.com மூலம் இனி திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சித் தொடர்கள், நிகழ்ச்சிகளை டவுன்லோடு செய்து, வேண்டிய நேரத்தில் கண்டுகளிக்கலாம். டவுன்லோடு கட்டணம் குறைந்தபட்சம் ஒரு அமெரிக்க டாலர். இந்திய மதிப்பில் ரூபாய் நாற்பத்தைந்து. இதன் ஆரம்பம் அண்மையில் சென்னையில் நடந்தபோது, இந்தப் புதிய முயற்சியை வரவேற்றுத் தொடங்கி வைத்தார் இயக்குநர் கௌதம் மேனன். திரளான நடிகர், நடிகைகள் கலந்துகொண்ட இந் நிகழ்ச்சியில், ராம்ஜியின் மேடை நாடக நடன நிகழ்ச்சி பெரும் வரவேற்பைப் பெற்றது.

- மேனகா

சார்'னு பவித்ரன் அடிக்கடிச் சொல்லுவார்."

"யாயா! இவங்களோட ஒன்றிரண்டு ப்ரொபோசல்கள் பார்த்திருக்கேன்; அப்படியே பவித்ரனோட சாயல் இருக்கும்."

"அவர் ரொம்ப வித்தியாசமான பேர்வழி சார். அவருக்குத் தெரியாத விஷயமே கிடையாது. எல்லாத்துலயும் அப்டேட்டட் நாலெட்ஜ். ஆனா எதையும் வெளிக்காட்டிக்காம அமைதியா இருப்பார்."

"அதைவிட சுவாரஸ்யமான விஷயம் அவர் உருவாக்கி விடற யங்ஸ்டர்ஸ். எல்லாம் ஒருபடி மேலே வந்த உடனேயே பவித்ரனுக்கு எதுவும் தெரியாதுன்னு பேச ஆரம்பிச்சிடுவாங்க. அதையெல்லாம் கண்டுக்காம, தானுண்டு தன் வேலையுண்டுன்னு இருப்பார்."

பவித்ரன்! பவித்ரன்! பவித்ரன்!

அறையை விட்டு வெளியே வந்தபோது எனக்குள் இருந்த உற்சாகம் சகலமும் வடிந்துபோன மாதிரி உணர்ந்தேன். டாய்லெட் போக வேண்டும்போல் இருந்தது. நிலைக் கண்ணாடியில் பார்த்தபோது, என்னை முழுதும் காணாமல் ஆக்கி, அங்கே பவித்ரன்தான் தெரிந்தார். சிலிர்த்தேன் ஒரு கணம். அவருடைய நாக்கு மெள்ள நீண்டது. அது ஓணானாகவே இருந்தது. இன்னும் கூர்ந்து பார்க்க, அது ஓணானின் நாக்கு போலாகிவிட, பவித்ரன் சார் பெரியதொரு ஓணானாக விஸ்வரூபம் எடுத்தார். என்னையே நான் பார்க்க, கைகளில் புழுக்கள் ஊறத் தொடங்கின. கால்கள் ஒன்று சேர உடம்பு ஒடுங்கத் தொடங்கியது. நானே புழுவாக மாறிவிடுவேனோ என்கிற பயம் பூதமாய்க் கவ்வியது. வேகமாக என் இருக்கைக்கு வந்து கணினியில் படபடவென்று டைப் அடிக்கத் தொடங்கினேன். யாரோ கேட்டார்கள்...

"என்ன மேடம்! ஜாயினிங் ரிப்போர்ட்டா?"

"என் ராஜினாமா." என்றேன்.

●

கல்கி சதாசிவம் நினைவு அறக்கட்டளை



கல்கி சதாசிவம் நினைவுச் சொற்பொழிவு; கல்கி சதாசிவம் நினைவு விருது வழங்கும் விழா

- 2006-ஆம் ஆண்டில் தமிழ் இதழ்களில் வெளியான கலைநயமும், சமுதாய நோக்கும் இணைந்த தலைசிறந்த விளம்பரத்துக்கான விருது வழங்குதல்,
- படிப்பில் சிறந்த, பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை வழங்குதல்.

தலைமையுரை :

பாரதத்தின் முன்னாள் முக்கிய தேர்தல் ஆணையர்

திரு. டி.எஸ்.கிருஷ்ணமூர்த்தி

கல்கி சதாசிவம் நினைவுச் சொற்பொழிவு :

"ராமராஜ்யம், என்று?"

பேருரை : **திரு. சாலமன் பாப்பையா**

நாள் : 03.03.07, சனிக்கிழமை,
நேரம் : மாலை 6 மணி
இடம் : பாரதிய வித்யாபவன் அரங்கம்,
மயிலாப்பூர், சென்னை - 600 004

அனைவரும் வருக!

நிறைவளிக்கும் நிம்மதி ஸ்தலம்!



டெல்லி சுற்றுலா என்றவுடன் குதுப்மினார், காந்தி சமாதி, பாராளு மன்றம், ராஷ்டிரபதி பவன் என்று விரியும் பட்டியலில் சமீபகாலமாக இன்னொன்றும் சேர்ந்திருக்கிறது. அக்ஷர்தாம்.

குஜராத் காந்தி நகரில் ஏற்கெனவே ஓர் அக்ஷர்தாம் இருக்கிறது. அதற்கு வேறு சில இடங்களில் கிளைகளும் உண்டு. ஆனால், டெல்லியில் உள்ள அக்ஷர்தாம் இவையனைத்தையும்விட பரப்பில் பெரியது. டெல்லிப் பகுதியில் குதுப்மினாரைவிட அதிக உயரம் கொண்ட கட்டடங்களுக்கு அனுமதி கிடையாது. ஆனால் அக்ஷர்தாமுக்கு அனுமதி அளித்திருக்கிறார்கள்.

அக்ஷர்தாம் என்றால் இறைவனின் தெய்வீக இருப்பிடம் என்று பொருள். குஜராத்தில் வசித்த 'ஸ்வாமி நாராயண்' என்ற குருவுக்கு அவரது சீடர்கள் எழுப்பியுள்ள நினைவகம் இது. ஆனால் இது நினைவகமாக மட்டும் இல்லை; பக்தி, கலை, கேளிக்கை என்று எந்த நோக்கத்தில் பார்த்தாலும் நிறைவளிக்கும் நிம்மதி ஸ்தலமாக இருக்கிறது.


முக்கிய வாயிலில் நுழைந்தால் உள்ளே பத்து நுழைவாயில்கள் காட்சியளிக்கின்றன. இந்தியக் கலாசாரப்படி இவை பத்து திசைகளைச் சித்தரிக்கின்றன. அதாவது எண் திசைகள், ஆகாயம், பூமி.

அடுத்து உள்ளது 'பக்திவார்' எனும் நுழைவாயில். இங்கு இரண்டாயிரத்துக்கும் அதிகமாக தெய்வீகத் தம்பதியரின் சிற்ப அணிவகுப்பு. சீதா - ராமர், பார்வதி - சிவன், சாவித்ரி - பிரம்மா, ரேவதி - பலதேவர் இப்படிப் பல உருவங்கள்.

அடுத்து உள்ளது 'மயூர் த்வார்'. இதில் எண்ணூற்று அறுபத்தொன்பது மயில்கள் கண்கவரும் விதத்தில் செதுக்கப்பட்டுள்ளன.

நடுவிலுள்ள மைய மண்டபம் இரும்பு இல்லாமல் எழுப்பப்பட்டு, அற்புதமாகக் காட்சி அளிக்கிறது. இங்குள்ள தூண்களும், விமான உட்புற அற்புதங்களும், சிற்ப-கட்டடக்கலை ரசிகர்களுக்கு மாபெரும் விருந்து. உள்ளே பதினொரு அடி உயரத்தில் தங்கத்தகடு வேயப்பட்ட குரு ஸ்வாமி நாராயணின் திருவுருவம். அருகில் அவரது நான்கு நெருங்கிய சீடர்கள்.

வைதீக யாகம் நடத்தப்படும் இடமே இசை நீரூற்றுக்களின் தலமாகவும் விளங்குகிறது. மாலை சுமார் ஆறு மணிக்கு



சுற்றுலா

தொடங்கும் இசை நீரூற்றுக் கண்காட்சி, நம்மை இருபது நிமிடங்களுக்குக் கட்டிப் போடுகிறது.

மையக் கட்டடத்தின் வெளிப்பிரா காரத்தில் கீழ்ப்புறம் முழுவதும் விதவித மான யானைகள் (மொத்தம் 148ஆம்) சிரித்த படி, சண்டைபோட்டபடி, வேலை செய்த படி என்று விதவிதமாகக் காட்சி தருகின் றன. கஜேந்திர மோட்சம், கூர்மவதாரக் காட்சியில் பாற்கடலிலிருந்து வெளிப்படும் ஐராவதம் என்று புராண யானைகளும் உண்டு. பத்து வயதுச் சிறுவர்கள் இடுப்பில் வேட்டியும் நெற்றியில் திலகமுமாக இந்த யானைகளின் கதைகளையும் தத்துவங்களை யும் விளக்குவது ரம்மியமாக இருக்கிறது.


மிகப்பெரிய உணவகம் ஒன்றும் உள்ளே இருக்கிறது.

முக்கிய ஆலயத்தைச் சுற்றி அமைந் துள்ள கண்காட்சிக் கூடங்களில் விஞ்ஞா னமும் மெய்ஞ்ஞானமும் கைகோத்து களிநடனம் புரிகின்றன. முப்பரிமாண உத்தி, ஆடியோ அனிமட்ரானிக்ஸ் முறை ஆகிய வற்றின் மூலம் பகவான் ஸ்வாமி நாரா யணின் வாழ்க் கையில் நடைபெற்ற முக்கிய சம்பவங்கள் காட்டப்படுகின்றன.

இன்னொரு காட்சி அரங்குக்குள் கால் மணி நேரத் துக்கு 'அன்னப் படகில்' சவாரி. 'நதி'யின் இரு கரை களிலும் அந்தக் காலத்து வேதகால வாழ்க்கை நம் கண்முன்னே சித்தரிக்கப்படு கிறது. உலகின் முதல் பல்கலைக்கழகம் எனப்படும் தட்சசிலம், ஆயுர்வேதம், பை (கணிதவியல்), பிளாஸ்டிக் சர்ஜரி, வானியல் சாஸ்திரம் போன்றவற்றை உலகுக்கு அளித்த அந்தக் கால இந்திய ரிஷிகளின் உருவங்கள் தென்படுகின்றன. அங்கங்கே பொருத்தமான இசை, பின்னணியில் ஒலிக்கிறது.

"இவ்வளவு அருமையான கலா சாரம் கொண்ட இந்தியாவின் மேன் மையை நீங்கள் எப்படி மேலும் உய ரத்துக்கு எடுத்துச் செல்லப் போகிறீர்கள்?" என்ற கேள்வியை எழுப்பி விட்டு முடிவடை கிறது இந்தக் கண்காட்சி.

— ஜி.எஸ்.எஸ்.



புகைப்படக் கலைஞர் யோகாவின் மணிவிழா பிப்ரவரி 17ஆம் தேதி சென்னை நியூ உட்லண்ட்ஸ் ஓட்டலில் நடந்தது. தமிழகப் பிரபலங்களின் வாழ்த்துச் செய்திகளிலிருந்து சில துளிகள் :

நல்லி குப்புசாமி செட்டியார் :

ஓசைப்படாமல், உபத்திரவம் தராமல் புகைப்படம் எடுப்பவர். 'அப்படி நில்லுங்கள்', 'இப்படி முகத்தைத் திருப்புங்கள்', 'நிமிருங்கள்', 'கையை இடுப்பில் வையுங்கள்' என்றெல்லாம் ஒரு டிரில் மாஸ்டர் வேலையை அவர் செய்வதில்லை. அவரவர் இயல்பாக இருப்பதை அப்படியே படம் எடுத்து விடுவார். அதனால்தான் அவர் பத்திரிகைகளுக்குப் பொருத்தமானவராகிறார். எல்லோரும் புகைப்படக் கலைஞர்கள் ஆகலாம்; ஆனால் எல்லோரும் யோகாவாக முடியாது.

ஏ.நடராஜன் (சென்னைத் தொலைக் காட்சியின் முன்னாள் இயக்குநர்) :

வந்தோம், படம் எடுத்தோம், போனோம் என்பது ஒரு வகை. ஆனால் யோகா ஒரு படம் எடுக்கிறார் என்றால் ஆண்டுகள் பல தொடரும் விதமாய் தன் வசப்படுத்துகிற சாதுர்ய மிக்கவர். வாழ்க்கையில் ஒருவர் வெற்றியடைய அவரது திறமை மட்டுமல்ல பழகும் தன்மையும் முக்கியம். யோகா அதில் வெற்றியடைந்திருப்பவர். படம் எடுக்கும்போது சப்ஜெக்ட் மீதே அவர் கவனம் ஒருமுகப்பட்டிருக்கும். முகபாவனைகள் மாறிக் கொண்டிருக்கையில் மிகச் சரியான தருணத்தில் கிளிக் செய்வது அவருக்குக் கைவந்த கலை.

ஏவி.எம்.சரவணன் :

எல்லாரும் உபயோகப்படுத்தும் கேமராவில்தான் அவரும் புகைப்படம் எடுக்கிறார். ஆனால், எடுக்கும் விதத்தில் அவை மிகப் பிரமாதமாக இருக்கின்றன. அதுதான் அவருடைய முத்திரை.

கலைமாமணி விக்கிரமன் :

யோகாவுக்கு மூன்றாவது கண் உண்டு. கண் பார்த்துக் கொண்டே இருக்கும் கை மளமளவென்று இயங்கும். எந்த நொடியில் அவர் கேமரா பளிச்சிடும் என்றே கணிக்க முடியாது. அருமையான, அபூர்வமான வாய்ப்புகளை நழுவ விடமாட்டார். தோளில் கேமராவை மாட்டிக்கொண்டு மிகத் துணிவுடன் இங்கும் அங்கும் செல்வார். யோகாவின் கேமராவில் தங்கள் தோற்றம் வெளிவர வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள், விரும்புபவர்கள், ஆசைப்படுபவர்கள் பலர். பலருள் பிரபலங்கள் பலப் பலர்!

எழுத்தாளர் ஜெயகாந்தன் :

நண்பர் யோகா இனியவர், இதமானவர். மிகச்சிறந்த மனிதர்களை ஆத்மார்த்தமான நண்பராகப் பெற்றிருப்பது



* துணைவியாருடன் யோகா

விழா



மூன்றாவது கண்!

அவரது அரிய பண்புகளில் போற்றத்தக்கது.

பத்மா சுப்பிரமணியம் :

தலைசிறந்த திறனோடு, மாசற்ற நல்லொழுக்கமும் கீர்த்தி தரும் நன்னடத்தையும் கொண்டவர். தன் னம்பிக்கையோடு தன்னடக்கமும் கொண்டதால் மரியாதைக்கும் அன்பிற்குமுரியவராகத் திகழ்கிறவர் யோகா.

ஜெனித் ஆர்.சங்கர் (யோகாவின் குரு) :

நாம் நடும் மரம், நம் உயரத்தைவிட அதிகமாக வளர்வதில்லையா? நான் நட்ட மரத்தின் வளர்ச்சியைக் கண்டு பெருமிதம் அடைகிறேன்.

இயக்குநர் பாரதிராஜா :

பணம் சம்பாதிப்பதைவிட மனிதர்களை சம்பாதிப்பதுதான் பெரிய விஷயம். அந்த வகையில் நல்லவர்களைச் சம்பாதித்திருக்கிற என் நண்பனை அடைந்ததில் பெருமை கொள்கிறேன். யோகா படங்களில் யதார்த்தம் இருக்கும். அவருடைய ஆல்பங்கள் ஒரு ஸ்டோரி போர்டுபோல இருக்கும். அயல் நாட்டினரும் யோகாவின் படங்களைப் பார்த்து வியந்திருக்கிறார்கள்.

இராம.வீரப்பன் :

வெளி உலகத்தில் நல்லவன் என்று பெயர் எடுப்பது சுலபம். ஆனால் வீட்டில், மனைவியிடம் தன் கணவர் நல்லவர் என்று பெயர் எடுப்பதுதான் பெரிய விஷயம். அந்த வகையில் தன் துணைவியாருக்கும் குடும்பத்துக்கும், நண்பர்களுக்கும், தாம் ஏற்றுக்கொண்ட தொழிலுக்கும் நல்லவராக, வல்லவராக, பொறுப்புள்ளவராகத் திகழ்கிறவர் யோகா.

தொகுப்பு :
சிபிமனு

24

சுதா சேஷய்யன்

அம்பாளின் கவலை!

மனத்தையும் இந்த்ரியங்களையும் கொண்டுபோய் அம்பாளிடத்திலே போட்டு விட்டோமானால், அவள் அவற்றுக்குப் பொறுப்பேற்பாள்.

உலகியல் ரீதியாகவே இதைப் பார்ப்போமே... சில சமயங்களில் நமக்கு என்ன ஆகிறது...? சின்ன தூக்கம், சின்ன மயக்கம் வருகிறது. அதைப் போல் சிறிய அளவில் இருப்பவற்றைச் சமாளித்துக் கொள்கிறோம். ஆனால் நம்மையும் மீறி எழக்கூடிய பிரச்னைகளிலிருந்து எப்படி நம்மை நாமே காப்பாற்றிக் கொள்வது...?

இப்படிப்பட்டப் பிரச்னைகள்தாம் விக்னயந்த்ரங்கள்! விக்ன யந்த்ரம் என்பது என்ன...? மஹேசுவரனுடைய சக்தியைக் கொண்டு பண்டாஸுரன் விக்ன யந்த்ரத்தைச் செய்தான். அந்த யந்திரத்துக்கு எதிராக மந்த்ரிணியும் வாராஹியும் ஒன்றும் பண்ணமுடியவில்லை. காரணம் என்னவென்றால், சாக்ஷாத் மஹேசுவரனுடைய சக்தியாக இருக்கிறபோது, அதை வெற்றி கொள்வதற்கு அந்த மஹேசுவரனுடைய சக்தியாக இருக்கக்கூடிய அம்பாளால்தான் முடியுமே தவிர, வேறு யாராலும் முடியாது.

அம்பாள் பரமேசுவரனைப் பார்த்து, இலேசாகப் புன்னகை செய்து, கணேசரை சிருஷ்டி செய்தாள். விக்ன யந்த்ரம் முறியடிக்கப்பட்டது. அப்படியானால், நம்மை மீறிய விஷயங்கள் நம்மைத் தாக்குகிற போது, "நீதான் காப்பாற்ற வேண்டும்" என்று உண்மையாக, மனப்பூர்வமாக அவளைப் பிரார்த்தித்தால், அந்தப் பிரச்னையை அவள் அருளுடன் எதிர்கொள்கிற முயற்சியை நாம் மேற்கொண்டால், அந்தச் சமயத்தில் நம் பிரச்னையைத் தீர்ப்பதற்காகவே அம்பாள் புதிதாக ஒன்றை சிருஷ்டிப்பாள்; பிரச்னையைத் தீர்த்து வைப்பாள்.

அம்புக்கும் தீக்கும் அஞ்சாமல்...

அதனால்தான் பாரதி கேட்டார்... ரொம்ப அழகான வரி அது... என்ன கேட்டார் தெரியுமா?

"எனக்குப் பிரச்னையே வரக்கூடாது" என்று அவர் சொல்லவேயில்லை. பாரதியிடம் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயம் இது. அவருக்கு வராத பிரச்னையே கிடையாது, வாழ்க்கையில். ஆனால், அத்தனை பிரச்னைகளுக்கும் நடுவில் இன்றும் பாரதி நிலைத்து நிற்கிறார் என்றால், அது அவர் செய்த பிரார்த்தனையினால்தான்! என்ன சொன்னார் பராசக்தியிடம்...? 'நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும் நிறைந்த சுடர் மணி' பூண்டவளாக இருக்கக்கூடிய பராசக்தியானவள் நமக்கு எப்படிப்பட்ட வாழ்வைத் தர வேண்டுகிறார் என்று பாருங்கள்.

அம்புக்கும் தீக்கும் விடத்துக்கும்
நோவுக்கும் அச்சமில்லாதபடி
இம்பர்க்கும் உம்பர்க்கும் வாழ்வு தரும்
சக்தி அவள்!


அவள் எப்படிப்பட்ட பரம்...? அம்புக்கும் தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும் அச்சமில்லாதபடி நம்மை வைக்கக்கூடிய பரம்.

ஆகவே பாரதியார், 'அம்பு, தீ, விஷம், நோய் இவையெல்லாம் தாக்காமல் என்னைக் காப்பாற்று, தாயே!' என்று

ஸ்ரீ சர்வாங்க நாயகி
கருவேலி



ஸ்ரீ லலிதா



The following particulars regarding the ownership of 'KALKI' the Tamil Weekly newspaper, are published, as called for by rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. Place of Publication	:	Chennai
2. Periodicity of Publication	:	Weekly
3. Name of Printer	:	Lakshmi Natarajan
Nationality	:	Indian
Address		Old No. 36, New No.12, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020
4. Name of Publisher	:	Lakshmi Natarajan
Nationality	:	Indian
Address	:	Old No. 36, New No.12, 4th Main Road, Kasturba Nagar, Adyar, Chennai - 600 020
5. Name of Editor	:	Seetha Ravi
Nationality	:	Indian
Address	:	'Mangala Ganesh', Second Floor, 15, IV Seaward Road, Valmiki Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041

6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital: **Bharathan Publications Private Limited, 47-NP., Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 032.**

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

1.3.2007 Lakshmi Natarajan
Publisher

வேண்டவில்லை... 'அம்புகள், நோய், விஷம் எதையும் கண்டு அஞ்சாத நிலையை, திடச் சித்தத்தை அவள் தருவாள்' என்கிறார் உறுதியாக!

இன்றைக்கு நம் மேல் யாராவது அம்பு போடுவார்களா...? அன்றாட வாழ்க்கையில், நம் கட்டுப்பாட்டில் இல்லாமல் வெளியிலேயிருந்து வரக்கூடிய பிரச்னைகளைத்தான் அம்புகள் என்கிறார் பாரதியார்.

சரி, வெளியிலிருந்து நமக்கு என்னென்ன பிரச்னைகள் வருகின்றன...?

அம்பு - புறவுலகப் பிரச்னை.

விஷம் – நாமே பண்ணிய கர்மாவின் வினைப் பயன். நமக்கே அது திரும்பி வரும். நமக்குள்ளேயிருந்து புதிய வினைகள் விஷமாகப் புறப்பட்டு எழலாம் - நோயாகப் புறப்படலாம்...

– இப்படி எந்தப் பிரச்னையாக இருந்தாலும், "அம்மா! நீதான் சரண்" என்று போய் காலில் விழுந்தாயிற்று என்றால், அப்படி வந்து விழுந்த குழந்தைக்கு எது வேண்டுமானாலும் அந்தத் தாய் செய்யக்கூடியவள் - அவளே பிரத்யஸ்த்ர வர்ஷினி!

பாலா யார்...?

ஒன்பது வயது பாலாவை அலங்கரித்து அம்பாள் போருக்கு அனுப்பி வைத்தாள் என்று பார்த்தோமே, ஒருத்தர் ஒரு கேள்வி கேட்டார்– அதைப் பற்றி... சங்கர பரம்பரையில் வந்தவர் அவர் - சங்கராச்சார்யார் என்பது தெரிகிறதேயொழிய, அவர் பெயர் இல்லை. காரணம் என்னவென்றால், பெரிய மகான்கள் தங்கள் பெயர் முக்கியமென்று நினைத்தவர்கள் அல்லர்.

இந்த ஆசார்யர் கேட்ட கேள்வி இதுதான்:

இந்த ஒன்பது வயது பாலா திடீரென்று எங்கேயிருந்து வந்தாள்...? ஸ்ரீபுரத்துக்குப் போகிறபோது காமேசுவரனும் காமேசுவரியும்தானே போனார்கள். பாலா எங்கேயிருந்து வந்தாள்...?

யோக சாஸ்திரத்தில் இந்த பாலாவுக்கு ஒரு விளக்கம் உண்டு.

லலிதோபாக்யானம் என்ன சொல்கிறது...? பாலாவுக்கு விதவிதமாக அலங்காரங்களெல்லாம் பண்ணி, வெற்றித் திலகமிட்டு, போர்க் கவசமெல்லாம் அணிவித்து அம்பாள் அனுப்பினாளாம். அனுப்பிவிட்டு 'குழந்தை ஆயிற்றே; போர் முனைக்குப் போகிறதே' என்று கலங்கினாளாம்!

பாலா, அம்பாள் பராசக்தியினுடைய மகளாக இருந்திருந்தால் அம்பாள் கவலைப்பட்டிருக்க வேண்டிய அவசியமே இல்லை.

ஆனால் அம்பாள் கவலைப்பட்டிருக்கிறாள்; மந்த்ரிணியும் வாராஹியும் வந்து, "பாலா எப்படியெல்லாம் சண்டை போட்டாள் தெரியுமா? பண்ட புத்திரர்கள் முப்பது பேரையும் வீழ்த்தினாள்..." என்று விவரித்துச் சொல்லி அவள் கவலையைப் போக்க முற்பட்டிருக்கிறார்கள்.

பண்டாசுரனின் முப்பது மகன்களையும் பாலா வீழ்த்தினாள் என்றால் அதற்கு என்ன அர்த்தம்...?

நாம் ஆசைகளை அடக்கும்போது அவை தற்சமயத்துக்குச் சாம்பலாகின்றன. (காமதகனத்தால் மன்மதன் சாம்பலானான்). ஆனால் அதே ஆசைகள் பின்னர் வேறு வடிவத்தில் தோன்றுவது போல் தோன்றினான் பண்டன். அந்த மாதிரி, அடக்கப்பட்ட ஆசைகள் வக்கிர வடிவம்

பெற்று, அதிலிருந்து மேலும் சின்ன சின்னதாகப் பல வக்கிரங்கள் எழும். அவ்வாறு எழக்கூடியவற்றை அழிக்கவே அம்பாள் பாலாவை அனுப்பினாள்.

யோக சாஸ்திர விளக்கம்

யோக சாஸ்திரப்படி இந்த பாலா யார் என்றால்... ஒவ்வொரு ஜீவனும் பாலா!

அம்பாளுடைய குழந்தை பாலா திரிபுரசுந்தரி என்று சொன்னால், அம்பாளுடைய குழந்தைகளாக இருக்கக் கூடிய ஜீவன்களான நம்மைப் பற்றித்தான் அவள் கவலைப்படுகிறாள்!

பண்டாஸுரனை எதிர்த்து நடக்கக் கூடிய யுத்தம் எங்கே நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது என்று பார்க்க வேண்டும்... ராம - ராவண யுத்தம் இலங்கையில் நடந்தது; கந்தபெருமானுக்கும் சூரபத்மனுக்கும் நடந்த யுத்தம் வீர மஹேந்திரபுரத்தில் நடந்தது. ஆனால் பண்டாஸுரனை அழிக்க எங்கே யுத்தம் நடந்தது...? அம்பாள் ஸ்ரீபுரத்தில் வீற்றிருக்கிறாள் என்று கூறப்பட்டிருக்கிறதே யொழிய யுத்தம் எங்கே நடந்தது என்று சொல்லப்படவில்லை.

சண்டை எங்கே என்று ஏன் சொல்லப்படவில்லையென்றால், தனித்தனியாக ஒவ்வொரு ஜீவனும் எங்கே இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது!

இந்த ஜீவன் சண்டைக்குப் போகும்போது அம்பாள் அதைத் தயார்ப்படுத்தி அனுப்புகிறாள்! அம்மா குழந்தையைத் தயார் செய்வதுபோல் தயார்ப்படுத்தி அனுப்புகிறாள். பண்டன் ஏதாவது செய்தால் அவனை எப்படி எதிர்க்க வேண்டும்; அதாவது, வக்கிரத்தை மனத்தில் எப்படி வளர்த்துக் கொள்ளாமல் இருக்க வேண்டும்... என்றெல்லாம் அம்பாள் ஜீவன்களைத் தயார்ப்படுத்தி அனுப்புகிறாள். அப்படி அனுப்பிவிட்டுக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாளாம்!

'இந்தக் குழந்தை சரியாகச் சண்டை போட்டதா... தெரியவில்லையே!' என்று விசாரப்படுகிறாளாம். அங்கே போய் ஏதாவது மந்த்ரம், தந்த்ரம், தூக்கம் தாக்கப்பட்டுச் சலனப்பட்டுவிடுமோ என்று அம்பாளுக்கு வழக்கமாக இருக்கக் கூடிய கவலை!

அம்பாளுக்குக் கவலை இருக்குமா? துக்கம் உண்டா? ஸ்ரீ லலிதா சஹஸ்ர நாமத்தில், பின்னாலே ஓரிடத்திலே துக்கத்தைப் போக்கக்கூடியவள்; அவளுக்குத் துக்கமென்பதே கிடையாது' என்று கூறும் திருநாமங்கள் வரும்... அப்படியிருந்தும் அம்பாள் கவலையும் சலனமும் கொள்வது ஏன்...?

(தொடரும்)




கல்கியின்
கல்யாணப் பரிசு

விய ஆண்டு மாசி, பங்குனி மற்றும் ஸர்வஜித் ஆண்டு சித்திரை, வைகாசி ஆகிய மாதங்களில் மணமேடையை அலங்கரிக்க இருக்கும் ஆண்/பெண் வாசகர்களே... உங்களுக்குக் கல்கியின் 'கல்யாணப் பரிசு' ஐந்து டேபிள் டாப் கிரைண்டர்கள் காத்திருக்கின்றன. அதற்கு நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், கீழ்க்காணும் விவரங்களை எங்களுக்கு அனுப்பி வைப்பதுதான்!

* உங்களுடைய, உங்கள் வருங்கால வாழ்க்கைத் துணையின் பெயர், முழு விலாசம், குடும்ப விவரங்கள்.
* திருமணம் நடக்க இருக்கும் நாள், இடம் (முழு விலாசத்துடன்). திருமண அழைப்பிதழை அனுப்பினால் நல்லது.
* பெற்றோரால் நிச்சயிக்கப்பட்டதா? (அ) காதலித்துப் பிறகு பெற்றோரால் முடிவு செய்யப்பட்ட திருமணமா?
* மணமகள்/மணமகன் பார்க்கும் படலத்தில் அல்லது நிச்சயதாம்பூலத்தில் நடந்த சுவையான நிகழ்வு (பத்து வரிகளுக்குள் இருக்க வேண்டும்).

விவரங்களை, நிகழ்வுகளுடன் சுருக்கமாக எழுதி, மணமகன், மணமகள் புகைப்படங்கள் கையொப்பத்துடன் (இருவர் கையெழுத்தும் அவசியம் இருக்க வேண்டும்) அனுப்பி வையுங்கள்.

விவரங்கள் எங்களுக்குக் கிடைக்க வேண்டிய கடைசி தேதி : 10.03.2007



'கல்யாணப் பரிசு'களை
ஆசிகளுடன் வழங்குகிறார்
சரஸ்வதி கேட்டரிங் ஸர்விஸ்
உரிமையாளர்
இன்சுவை வேந்தன்
ஜி.சுப்பிரமணி அய்யர்




கல்கி

4.3.2007
இணைப்பு



பிடி...பிடி...



இந்தக் காலத்தில் பெண்ணுக்கு மாப்பிள்ளைகூட எளிதில் கிடைத்து விடுவார்; ஆனால் திருமண மண்டபம் கிடைப்பதுதான் குதிரைக் கொம்பாக இருக்கிறது. "இன்று திருமண மண்டபங்களுக்கு நல்ல கிராக்கி சார்! சினிமா தியேட்டர்களை இடித்து விட்டு ஒன்று ஷாப்பிங் வளாகம் கட்டுகிறார்கள்; அல்லது திருமண மண்டபம் கட்டுகிறார்கள்" என்கிறார் ஒரு ரியல் எஸ்டேட் புரோக்கர். அத்தனை டிமாண்ட்!

இன்று சாதாரண வசதிகள் கொண்ட, சிறிய திருமண மண்டபங்களுக்குக் கூட பல ஆயிரக் கணக்கில் வாடகை கேட்கிறார்கள். எனவே, திருமண மண்டபம் பார்த்து முடிவு செய்வதைக் கவனத்துடன் செய்ய வேண்டியது மிக அவசியம்.

* சென்னையைப் போன்ற பெருநகரங்களில் திருமணம் நடத்த வேண்டுமென்றால், முதலில், எந்த ஏரியாவில் மண்டபம் வேண்டும் என்பதை மாப்பிள்ளை - பெண் இரு வீட்டாரும் சேர்ந்து தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

* அடுத்தபடியாக, திருமணத்துக்கு சுமாராக எத்தனை பேர் வருவார்கள் என்பதையும் கலந்து பேசி தீர்மானித்து, அதற்கேற்ப மண்டபத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

மேலும் கவனிக்க வேண்டியவை:

* திருமணம் நடைபெறும் ஹாலில் எத்தனை பேர் அமரலாம்?
* சாப்பாட்டுக் கூடத்தின் கொள்ளளவு என்ன?
* இரு வீட்டாரும் தங்குவதற்கு எத்தனை அறைகள் உள்ளன?
* குளியலறைகள், கழிப்பறைகள் வசதியாகவும் போதுமான எண்ணிக்கையிலும் இருக்கின்றனவா?
* தண்ணீருக்கு என்ன ஏற்பாடு?



* திருமண மண்டபங்களில், பொருட்கள் திருட்டு போவதற்கு மண்டப நிர்வாகத்தினர் பொறுப்பேற்றுக்கொள்ள மாட்டார்கள். எனவே, இரு வீட்டாரும், சந்தேகத்துக்குரிய நபர்களின் நடமாட்டத்தைக் கண்காணித்தபடி இருக்க வேண்டும்.

* மாப்பிள்ளை அழைப்பின்போது ஊர்வலம் செல்ல வேண்டுமென்றால், கல்யாண மண்டபம் உள்ள பகுதியின்






மண்டபம் பிடி!

காவல் நிலையத்திலிருந்து ஊர்வலத் துக்கு அனுமதியை வாங்கிக் கொள்ள வேண்டும்.

* வாகனங்களை நிறுத்துவதற்குப் போதிய இடவசதி இருக்கிறதா என்று கவனம் செலுத்தி, திருமணத்தின்போது, குறிப்பாக-ரிசப்ஷனின்போது வரும் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்குத் தொல்லை இல்லாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். எதிர்பாராத விபத்துகள் நேர்ந்தால், அவ்வாறான தருணங்களில் பாதுகாப்புக்காக எமர்ஜென்ஸி வழிகள் மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளனவா என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும்.



* மண்டபத்தின் சமையல் கூடத்தில் உள்ள அடுப்புகள் விறகு, சமையல் எரிவாயு இவற்றில் எதைக் கொண்டு இயங்கும் என்பதற்கேற்ப, சமையல்காரர் அல்லது திருமண காண்ட்ராக்டரிடம் முன்னதாகவே பேசித் தக்க ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டும்.

* மண்டப அலங்காரம், வாழை மரம் கட்டுதல் மின் அலங்காரம் போன்றவை மண்டப வாடகையில் அடங்குமா, அல்லது உபரியாக நாம் பணம் செலவழித்து செய்ய வேண்டுமா என்பதை முன் கூட்டியே அறிந்துகொண்டு, அதற்கேற்ப திருமண காண்ட்ராக்டரிடம் பேசி முடிக்க வேண்டும்.

* மண்டப நிர்வாகமே மண்டபத்தில் உள்ள அறைகளுக்கான பூட்டு, சாவிகளைக் கொடுப்பார்களா; இல்லை, நாமே எடுத்துக் கொண்டு வர வேண்டுமா என்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டு அதற்கேற்ப ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

* எந்த அறை யாருக்கு ஒதுக்கப்படுகிறது என்பதை முன்னதாகவே முடிவு செய்து விடுவது புத்திசாலித்தனம். டென்ஷனும் இருக்காது.

* சம்பந்தப்பட்டவர்களுக்கு சாவிகளைக் கொடுத்த பின் டூப்ளிகேட் சாவிகள் அனைத்தையும் ஒருவர் பத்திரமாக வைத்துக் கொண்டால், சாவி தொலைந்து போனாலும் பிரச்னை இல்லாமல் இருக்கும். ●

"தஞ்சை மாவட்டம் பட்டுக் கோட்டைக்கு அருகில் இருக்கும் சொக்க நாதபுரம்தான் என் சொந்த ஊர். மூன்றாவது தலைமுறையாக நான் இந்தத் தொழிலை வெற்றிகரமாக செய்து வருகிறேன். அந்தக் காலத்தில், எங்களைக் கல்யாணங்களில் சமையல் வேலைக்கு மட்டுமே



• ஜி.சுப்ரமணிய ஐயர்

வெற்றிச் சுவையின் மூலதனம்!

கூப்பிடுவார்கள். இன்றுதான், ஒட்டுமொத்த கல்யாண வேலைகளையும் ஒப்படைத்து, 'மேரேஜ் காண்ட்ராக்டர்' என்ற அந்தஸ்த்தை எங்களுக்கு அளித் திருக்கிறார்கள்'' என்று கூறுகிறார் சென்னை மேற்கு மாம்பலம் சரஸ்வதி கேட்டரிங் சர்வீஸ் நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்தி வரும் ஜி.சுப்ரமணிய ஐயர்.

"எட்டு வயதில் இந்தத் தொழிலுக்கு வந்தேன். பந்தியின்போது தண்ணீர் ஊற்றுவதுதான் என் வேலை. அப்புறம் படிப்படியாக முன்னேறி, 'மாஸ்டர் குக்' ஆனபோது வயது இருபது.

"என் தாத்தா, சமையல்காரர்தான். என் அப்பா காரைக்குடியில் ஓட்டல் நடத்தி நஷ்டப்பட்டு, பிறகு கும்ப கோணம், மதுரை என்று பல ஊர்களிலும் ஓட்டலில் வேலை பார்த்தவர். கடைசி யில் சென்னைக்கு வந்து பல்வேறு ஓட்டல்களிலும் வேலை பார்த்தார்.

"1968-ஆம் ஆண்டு, சென்னையில் இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு நடந்த போது அப்போதைய முதல்வர் அறிஞர் அண்ணா என் அப்பாவை வீடு தேடி வந்து சந்தித்து, மாநாட்டுக்கு வருகைதரும் சுமார் இருபதாயிரம் பேர்களுக்கும்

அறுசுவை உணவு தயாரித்து வழங்கும் பொறுப்பை ஒப்படைத்தார். மாநாடு முடிந்தபோது, என் தந்தையாரின் சேவையைப் பாராட்டி நற்சான்றிதழ் வழங்கி கௌரவித்தார்.

1975-ஆம் ஆண்டு வரை, இவரது தந்தையார் திருமணங்களுக்கு சமையல் பொறுப்பை மட்டுமே ஏற்றுக் கொண்டு, திருப்திகரமாகச் செய்து வந்தார். அப்போது, அயல் மாநிலங்களில் வாழும் தமிழ்நாட்டுக்காரர்கள், தங்கள் வீட்டுத் திருமணங்களை இங்கே வந்து நடத்த மிகவும் சிரமப்பட்டார்கள். மந்தைவெளியைச் சேர்ந்த ஜகதீச ஐயரும் இவரும் இப்படிப்பட்டவர்களுக்கு எப்படி உதவலாம் என்று கலந்து ஆலோசனை செய்திருக்கிறார்கள். அப்போது பிறந்ததுதான் மொத்த திருமண காண்ட்ராக்ட் ஐடியா.

"எனக்கு நினைவு தெரிந்த நாள் முதலாகவே காஞ்சி மடத்துக்குச் சென்று பரமாச்சாரியாரை தரிசனம் செய்து வருபவன் நான். ஒரு முறை மடத்துக்குப் போனபோது, வாசலில் நல்ல கூட்டம். நான் வரிசையில் நின்று கொண்டிருந்தபோது, திடீரென்று ஒருவர் வந்து 'பெரியவா உங்களை அழைச்சுண்டு வரச் சொன்னா' என்று கூறி உள்ளே அழைத்துச் சென்றார். எனக்குப் பெரியவாளை, பர்சனலாகப் பரிச்சயமில்லை. நான் போய் அவரை வணங்கியதும், பிரசாதம் அளித்து, 'இப்போ பண்ணறதையே, நிறுவனமா ஆரம்பிச்சு செய்' என்று ஆசிர்வதித்தார். மனம் மகிழ்ந்து, பெரியவாள் பெயரிலேயே, 'சரஸ்வதி மேரேஜ் கேட்டரிங் சர்வீஸ்' என்று ஒரு நிறுவனம் ஆரம்பித்தேன். என்னுடைய அம்மாவின் பெயரும் சரஸ்வதி என்பது



* தன் ஊழியர்களுடன்....

ஒரு மகிழ்ச்சியான விஷயம்.

"பெரியவாள் ஆசியால், இரண்டே மாதங்களில் ஐந்து திருமண காண்ட்ராட்கள் கிடைத்தன. அவற்றை நல்லபடியாக முடித்துக் கொடுத்தேன். அப்புறம் என்ன... ஏறுமுகம்தான்!" என்றார் மகிழ்ச்சி பொங்க.


சரஸ்வதி கேட்டரிங் சர்வீஸின்

ஸ்பெஷாலிடி என்னன்னு நினைக்கறீங்க?

"எல்லாத்தையும் டாண் டாண்னு பக்காவா பண்றதுதான். இன்று நான் பொறுப்பேற்று நடத்தும் கல்யாணங்களில் பால், பூ எல்லாம் குறித்த நேரத்தில் வந்து இறங்கிவிடும். வேளாவேளைக்கு சாப்பாடு தயாராகிவிடும். வருகிறவர்களை வரவேற்கக் கூட எங்கள் ஆட்கள் இருப்பார்கள். மணமேடையில் புரோகிதர் எப்போது என்னென்ன கேட்கிறாரோ, அவற்றையெல்லாம் உடனே எடுத்துக் கொடுக்க ஒருவர் தயாராக இருப்பார். கோலம், வாழை மரம், மேளம், சீர்பட்சணம், நலுங்கு, விளையாட்டுச் சாமான்கள், என்று எதைப் பற்றியும் பெண் வீட்டார் கவலைப்பட வேண்டாம். எங்கள் பணியாளர்கள் வெள்ளை வெளேரென்ற சீருடை அணிந்து உணவு பரிமாறுகிறார்கள். தவிர, குளிர்பானம் வழங்கும், வரவேற்புப் பணிகளைக் கவனித்துக் கொள்ளும் பெண்களுக்கு சீருடை, மேற்பார்வையாளர்களுக்கு கோட்டு - சூட்டு என்றும் வழங்குகிறோம்."



கடந்த ஆட்சியின்போது, மாநிலம் முழுவதிலும் உள்ள மகளிர் சுய உதவிக்குழுக்களின் பிரம்மாண்டமான மாநாடு சென்னை நேரு உள் விளையாட்டரங்களில் நடைபெற்றது. அதற்கு வந்த பல்லாயிரக்கணக் கானோருக்கு சிறப்பாக உணவளித்து அனைவரின் பாராட்டையும் பெற்றது குறிப்பிடத்தக்கது.



உணவு விஷயமெல்லாம் எப்படி?

"முகூர்த்த சாப்பாட்டு விஷயத்தில் பாரம்பரியத்தைக் காப்பாற்றி வருகிறோம் என்றாலும், ஒட்டுமொத்த மெனு விஷயத்தில் நாங்கள் காலத்துக்கேற்ப புதுமைகளை அறிமுகப்படுத்தி வெற்றி கண்டு வருகிறோம். வட இந்திய உணவு வகைகள், சைனீஸ் மற்றும் காண்டினென்டல் உணவு வகைகளையும் ஸ்பெஷலாகத் தயாரித்து வழங்குவதில் நாங்கள் பெயர் பெற்றிருக்கிறோம்.

"இப்படி சாப்பாட்டு விஷயத்துல மட்டுமின்றி, புதுமைகள் மற்ற விஷயங்களிலும் உண்டு. முகூர்த்தத்தின்போது, அனைவரும் இருந்த இடத்திலிருந்தே அட்சதையைப் போட்டு, தரையெங்கும் அட்சதை மிதிபடும்படி செய்து விடுவார்கள். அதனால் வேலைபாடு செய்த ஒரு சிறு பிளாஸ்டிக் டப்பாவில் அட்சதையைப் போட்டுக் கொடுத்து விடுவோம். முகூர்த்தம் முடிந்தவுடன் அவரவர் மணமேடைக்குப் போகிறபோது அந்த டப்பாவிலிருந்து அட்சதையைப் போட்டு ஆசீர்வாதம் செய்வார்கள். அதேபோல, தாலி கட்டுகிற போதும், ரிசப்ஷனுக்கு வி.ஐ.பி.கள்



சென்னை உயர் நீதிமன்றத்தின் நீதிபதி ஜகதீசனின் மகன் திருமணத்துக்கு கேட்டரிங் செய்யும் பொறுப்பு

மறக்க முடியவில்லை!

இவருக்கு கிடைத்தது.

நீலாங்கரையில் இருக்கும் சாய் பாபா கோயிலில் காலையில் திருமணம். அன்றைய தினமே, மாலையில் எம்.ஆர்.சி. நகரில் உள்ள இமேஜ் அரங்கில் வரவேற்பு. திருமணத்துக்கு ஆயிரம் பேர், ரிசப்ஷனுக்கு ஐந்தாயிரம் பேர்கள் வரை வருவார்கள் என்று சொல்லப்பட்டது. இரண்டு இடங்களிலுமே, வழக்கமாக கல்யாண மண்டபங்களில் இருக்கும் சமையல் மற்றும் பாத்திர வசதிகள் கிடையாது. நீதிபதி, "இது மிகவும் சிரமம்தான் என்று எனக்குத் தெரியும்; ஆனால் இந்தப் பணியை உங்களால்தான் சிறப்பாகச் செய்து முடிக்க முடியும் என்ற நம்பிக்கையில்தான் உங்களிடம் ஒப்படைக்கிறேன்" என்று சொல்லிவிட்டார்.

திருமணத்துக்கு முந்தைய நாள் இரவு, சாய் பாபா கோயிலில் மொத்த சாமான்களையும் கொண்டு போய் இறக்கி விட்டார்கள். கிரைண்டர் போன்ற கருவிகளை உபயோகிக்கப் போதுமான அளவு எலக்ட்ரிக்கல் பாயிண்ட்கள் கூட அங்கே இல்லை. அனைத்தையும் தயார் செய்து, இரவு முழுக்கக் கண் விழித்து, வந்திருந்தவர்களுக்கு காலையில் சுடச்சுட டிபன் கொடுத்தபோது, அனைவருக்கும் ஆச்சரியம். அங்கே வேலையை முடித்துக் கொண்டு, அப்படியே எல்லாவற்றையும் ரிசப்ஷன் நடக்கவிருந்த இடத்துக்குக் கொண்டுவந்து அங்கும் சுவையான விருந்தைப் பரிமாறி வந்திருந்தவர்களைத் திக்குமுக்காடச் செய்துவிட்டனர்.

வருகிறபோதும் ரிமோட் மூலமாக இயக்கி, மேலே இருந்து மலர் தூவும்படி நாங்கள் செய்வோம்."

உங்கள் நிறுவனத்தின் வளர்ச்சி...

"பதினைந்து தொழிலாளர்களுடன் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம், இன்று சுமார் ஆயிரம் பேருக்கு நேரிடையாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு வழங்கும் அளவுக்கு ஆலமரமாக வளர்ந்துள்ளது."

இந்த வளர்ச்சியின் வெற்றிக்குக் காரணம்?

"தனது அலுவலக நுழை வாயிலில் உள்ள ஒரு வாசகத்தைக் காட்டுகிறார் சுப்ரமணிய ஐயர். அந்த வாசகம்: **முடியாது என்பது மூடத்தனம்; முடியும் என்பதே மூலதனம்."**

குடும்பத்தில் திருமணம் நிச்சயமாகி, கல்யாண மண்டபம் புக் பண்ணியவுடன், அடுத்து செய்ய வேண்டியது திருமண அழைப்பிதழ் அச்சடிப்பது தான். அந்தக் காலத்தில், ஒரு பக்கம் மஞ்சள், மறுபக்கம் பிங்க் நிறக் காகிதத்தில் பாரம்பரிய அழைப்பிதழை அச்சிட்டுவிடுவார்கள். ஆனால் இன்று எல்லாமே மாடர்னாகி விட்டதே!

கம்ப்யூட்டரும், ஸ்கிரீன் பிரிண்ட்டிங்கும் வந்து, திருமண அழைப்பிதழில் பெரும் புரட்சியே செய்து விட்டன. பல நிறுவனங்கள் இன்று திருமண அழைப்பிதழை வடிவமைத்து விற்பதில் புதுமைகளைப் புகுத்தி





சாதனை படைத்துக் கொண்டிருக்கின்றன. பாரம்பரிய தெய்வீகம், அரசியல், இலக்கியம், நவீன ஓவியம் என்று பலதரப்பட்ட ரெடிமேடு அழைப்பிதழ்கள் இன்று வந்துவிட்டன. அவரவர், தமது ரசனை மற்றும் தேவைக்கு ஏற்ப அழைப்பிதழ்களை வாங்கி அச்சிட்டுக் கொள்ளலாம்.

அழைப்பிதழ் மட்டும் அசத்தும் வகையில் இருந்து விட்டால் போதுமா? அதில் சரியான விஷயங்கள் இருக்க வேண்டும். அவை உறவினர்களைச் சரியாக சென்றடைய வேண்டும். அதற்குக் கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்னென்ன?

அழைப்பிதழில் இடம்பெற வேண்டிய விஷயங்களை எழுத உட்காரும்போது, குடும்பத்தில் ஏற்கெனவே நடந்த திருமண அழைப்பிதழின் பிரதியைக் கைவசம் வைத்துக்கொள்ளுவது உசிதம். அவரவர் குடும்பத்துக்கு என்று தனி பாணி இருக்கும். அதன்படி எழுதி, வீட்டுப் பெரியவர்கள் படித்து ஒப்புதல் அளித்தபின் அச்சிடக் கொடுப்பது நல்லது. மணமக்களின் பெற்றோர், தாத்தா ஆகியோரது பெயர்கள், சொந்த ஊர், மாவட்டம், அலுவலகப் பெயர், பணிப் பொறுப்பு போன்ற தகவல்களில் தவறில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது மிக அவசியம். இவற்றில் ஏதாவது சிறு தவறு நிகழுமாயின், மறுபடி அழைப்பிதழ் அச்சிட நேரிடலாம் என்பதை மறக்க வேண்டாம்.

திருமண அழைப்பிதழ் டிசைனைத் தேர்ந்தெடுப்பது மிக முக்கியம்.

குடும்பத்திலுள்ள பெரியோர்களைக் கலந்தாலோசனை செய்து அழைப்பிதழுக்கான டிசைனை முடிவு செய்வது நல்லது. அல்லது, கடையிலிருந்து நான்கைந்து டிசைன்களை சாம்பிள் வாங்கிக் கொண்டு வந்து அவற்றிலிருந்து ஒன்றை வீட்டில் அனைவரும் சேர்ந்து முடிவு செய்யலாம்.



எத்தனை அழைப்பிதழ்கள் அச்சடிப்பது என்பது மிக முக்கியமான கணக்கு.

இரு வீட்டாரும் சேர்ந்து அழைப்பதா, இல்லை தனித்தனியே அழைப்பிதழ் அச்சடிப்பதா என்பதை முதலில்

முடிவு செய்து கொள்ள வேண்டும். திருமணத்துக்கு அழைக்க வேண்டிய உறவினர்கள் எண்ணிக்கை, குடும்ப நண்பர்கள், மணமகன்(ள்) பெற்றோர்கள், சகோதர சகோதரிகள் ஆகியோரின் அலுவலக நண்பர்கள் என்று பலதரப்பட்டவர்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு மொத்தம் எத்தனை அழைப்பிதழ்கள் அச்சிட வேண்டும் என்று முடிவு செய்ய வேண்டியது அவசியம்.

அச்சிடப்பட வேண்டிய அழைப்பிதழ்கள் எண்ணிக்கையை முடிவு செய்த பிறகு, அதைவிட ஐம்பது அல்லது நூறு அதிகமாகவே அச்சிடுவது புத்திசாலித்தனம். அனைவருக்கும் அழைப்பிதழ்களை அனுப்பி வைத்தபிறகு, மிச்சமானால் பாதகமில்லை. ஆனால் கடைசி நேரத்தில் பற்றாக்குறை ஏற்பட்டு, அவசரம் அவசரமாக அச்சிட்டு வாங்குவது டென்ஷன் ஏற்படுத்தும் விஷயம்.

அடுத்தது அழைப்பிதழ் விநியோகம்.

இது அவசர யுகம். பெரும்பாலானவர்கள் ஃபார்மாலிட்டி பார்க்கும் ரகமில்லை. எனவே, முக்கியமானவர்களைத் தவிர மற்றவர்களை நேரில் போய் அழைப்பதைத் தவிர்த்தால் நேரம் மிச்சமாகும்; அலைச்சலும் குறையும். தபால் அல்லது கூரியர் மூலம் அனுப்பினால் மறுநாளே போய்ச் சேர்ந்துவிடப் போகிறது. அப்படி அனுப்பி வைத்த பிறகு, சம்பந்தப்பட்டவர்களுக்கு டெலிஃபோன் செய்து 'அழைப்பிதழ் வந்துசேர்ந்து விட்டதா?' என்று உறுதி செய்து கொள்வதுடன், திருமணத்துக்குத் தவறாமல் வரும்படி பர்சனலாக அழைக்கலாம்.

அழைப்பிதழ்களை எப்போது அனுப்பலாம்?

கேழும் விய வருடம்...



தபாலில் அனுப்பி வைக்கும்போது, பல நாட்கள் முன்கூட்டியே அனுப்பி வைத்தால், அழைப்பிதழ் வந்ததையே மறந்துவிட வாய்ப்புண்டு. கடைசி நேரத்தில் அனுப்பிச் வைத்தால், சரியான நேரத்துக்குப் போய் சேராமல் போகவும் கூடும். ஆகவே ஒரு வாரம், பத்து நாட்கள் முன்னதாக அனுப்பினால் சரியாக இருக்கும்.

திருமணத் தேதி முடிவு செய்யப்பட்டவுடன் அழைப்பிதழ் அச்சிட்டு வரவில்லை என்றாலும், வெளியூர்களிலிருந்து வரவேண்டிய உறவினர்கள், நண்பர்களுக்கு மட்டும் கடிதம் மூலமாகத் தகவல் அனுப்பி வைத்தால், அவர்கள் விமானம், ரயில், பஸ் டிக்கெட் பதிவு செய்வதற்கு வசதியாக இருக்கும்.

முன்பெல்லாம் நட்சத்திர ஓட்டல்களில்தான் புஃபே முறையில் உணவு சாப்பிட முடியும். ஆனால் தற்காலத் திருமணங்களில் புஃபே முறை விருந்துக்கு ஏற்பாடு செய்வது பிரபலமாகி வருகிறது. இங்கே திருமண ரிஷப்ஷனில் புஃபே விருந்து குறித்து உஷா ராமகிருஷ்ணனும், மீராவும் கலந்துரையாடுகிறார்கள்

உஷா ராமகிருஷ்ணன்: சமீபகாலமாக, நிறைய கல்யாணங்களில், ரிசப்ஷனில் புஃபே டின்னர்தான். வயதானவர்கள் ஒரு கையில் சாப்பாட்டுத் தட்டைப் பிடித்துக் கொண்டு, இன்னொரு கையால் சாப்பிட மிகவும் சிரமப்படுவதை நான் கவனித்திருக்கிறேன்.





தலைவாழ

மீரா: நீங்கள் சொல்வதை நானும் ஒப்புக் கொள்கிறேன் என்றாலும், திருமணங்களில் இலை போட்டு உணவு பரிமாறும்போது எப்படி சாப்பிடுகிறார்கள் என்று நீங்கள் கவனித் திருக்கிறீர்களா? எல்லா ஐட்டங்களும் எல்லோருக்கும் பிடிக்கும் என்று சொல்ல முடியாது. தட்டில் பரிமாறியதைச் சாப்பிடாமலேயே விட்டுவிட்டாலும் அது வீணாகிவிடும். சமைத்த உணவை சாப்பிடாமல் வீணாக்குவது மிகவும் தவறு."

உஷா: வேஸ்டேஜ் என்று பார்த்தால், புஃபேயிலும் எவ்வளவோ ஐட்டங்கள் வீணாவதை நான் கண்ணால் பார்த்திருக்கிறேன். இருக்கிற எல்லா ஐட்டங்களையும், டேஸ்ட்டுக்குக் கொஞ்சம் என்று எடுத்துப் போட்டுக் கொண்டு, கடைசியில் வீணாக்குவார்கள். இலை போட்டு சாப்பிடும்போது, பக்கத்தில் குழந்தைகளையும் நாற்காலியில் உட்கார வைத்து அவர்களையும் கவனித்துக் கொண்டு, நாமும் சாப்பிடலாம்; புஃபே என்றால் அது முடியாதே!



மீரா: ஆனால் புஃபே என்றால் நிறைய ஐட்டங்களைச் சாப்பிடக் கொடுக்கலாம்; இப்போதெல்லாம் வட இந்திய ஐட்டங்கள், தென் இந்திய ஐட்டங்கள், சாட் ஐட்டங்கள், ஐஸ்கிரீம், டெசர்ட் ஐட்டங்கள் என்று ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக கவுண்டர்கள் அமைத்து விடுகிறார்கள். எதுவும் ஒன்றுக்கு இரண்டு, மூன்று தடவைகள் கூட போட்டுக் கொண்டு



to புஃபே!



சாப்பிடலாம். நன்றாக அனுபவித்துச் சாப்பிடலாம். நிதானமாகவும் சாப்பிடலாம்.


உஷா: என்ன இருந்தாலும், ஒரு கையில் பிளேட்டை பிடித்துக் கொண்டு, இன்னொரு கையால் பிய்த்துச் சாப்பிடுவது என்பது எல்லாருக்கும் சுலபமாக இருக்குமா?

மீரா: வரிசையில் உட்கார்ந்து கொண்டு, ஜாலியாகப் பேசியபடி சாப்பிட முடியுமா? பக்கத்தில் இருப்பவர்களிடம் மட்டும் தான் பேச முடியும். புஃபே என்றால், ஐந்தாறு நாற்காலிகளை எடுத்து வட்டமாகப் போட்டுக்கொண்டு அரட்டை அடித்தபடி சாப்பிடலாமே!

உஷா இலை என்றால் ஒவ்வொரு ஐட்டத்துக்கும் ஒரு குறிப்பிட்ட இடம் உண்டு. ஆனால் புஃபேயில் மீடியம் சைசில் ஒரு பிளேட். அதில் எவ்வளவு போட்டுக் கொள்ள முடியும்? தவிர, ஒவ்வொரு தடவையும் "க்யூ"வில் நின்று தேவையானதைப் போட்டுக் கொண்டுவந்து சாப்பிடுவது என்பது சுகமாக ஈ.சி.ஆர். ரோடில் காரில் போய்க் கொண்டிருக்கும்போது அடிக்கடி ஸ்பீடு பிரேக்கர் வந்தால் எப்படி இருக்குமோ அப்படித் தான்."

ஆகவேதான் இப்போதெல்லாம் சில திருமணங்களில் இரண்டுவிதமான விருந்துக்கும் ஏற்பாடு செய்கிறார்கள். புஃபேக்கு புஃபே ஆச்சு. தலைவாழை இலைக்கும் இடமுண்டு.





சட்டம் என்ன சொல்லுது?

• இந்துமதத் திருமணங்கள் குறித்து சட்டங்கள் கொண்டுவரப்பட்டது பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில்தான். 1829ஆம் ஆண்டில்தான் இந்துத் திருமணம் குறித்த முதல் சட்டம் கொண்டுவரப்பட்டதாகத் தெரிகிறது. அந்தச் சட்டம் உடன்கட்டை ஏறுவதை தடைசெய்து கொண்டு வரப்பட்டது. 1856-ல் விதவைகள் மறுமணத்துக்கு சட்டபூர்வ அங்கீகாரம் கிடைத்தது. 1860-ல் கொண்டு வரப்பட்ட சட்டம் பலதார மணத்தைத் தடை செய்தது. 1886-ல் திருமணங்களை சட்டப்படி பதிவு செய்வதற்கு வழி செய்யும் சட்டம் வந்தது.

• அந்தக் காலத்தில் பால்ய விவாகம் மற்றும் முதியவர்கள், மிகச் சிறிய வயது பெண்களை மணம் செய்து கொள்ளுவது வழக்கத்தில் இருந்தது. 1894ஆம் ஆண்டில், மைசூர் சமஸ்தானத்தில் இவை காலத்துக்கு ஒவ்வாத வழக்கங்கள் என்று கூறித் தடை செய்யப்பட்டன. அதன்பிறகு சுமார் முப்பது ஆண்டுகள் கழித்து இந்தியா முழுவதிலுமாக இது சட்டபூர்வமாக்கப்பட்டது.

• 1923ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டத்தின் மூலமாக இந்து என்ற சொல் இந்து மதத்தவர்களை மட்டுமின்றி சீக்கியர்கள், ஜைனர்கள் மற்றும் புத்த மதத்தினரையும் உள்ளடக்கியது என்ற விளக்கம் தரப்பட்டது. 1937-ல், தயானந்த சரஸ்வதியின் ஆர்ய சமாஜ் திருமணங்கள், கலப்புத் திருமணங்கள் ஆகியவை சட்டபூர்வமாக்கப்பட்டு விட்டன.

• 1955ஆம் ஆண்டு, இந்துத் திருமணங்கள் பற்றிய அனைத்து அம்சங்களும் உள்ளடக்கிய இந்துத் திருமணச் சட்டம் அமலுக்கு வந்தது. அதன் அடிப்படையில், பல்வேறு மாநில அரசுகளும் தங்கள் பகுதிகளில் பின்பற்றப்படும் பழக்க வழக்கங்களை அனுசரித்து, சட்டங்களாய்க் கொண்டு வந்தன. 1961ஆம் ஆண்டில், வரதட்சிணை தடை செய்யப்பட்டது. இதனால் எழுந்த சில பிரச்னைகளையொட்டி அண்மையில் அன்பின் அடிப்படையில் மருமகனுக்கு, மனைவியின் பிறந்த வீட்டார் உதவுவது குற்றமாகாது என சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு அளித்தது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டில், சுயமரியாதைத் திருமணங்களும் சட்டபூர்வமானவை.

• சமீபகாலமாக திருமணம் முடிந்த கையோடு, அன்றே பதிவாளர் அலுவலகத்துக்குச் சென்று திருமணத்தைப் பதிவு செய்யும் வழக்கம் வந்திருக்கிறது. பாஸ்போர்ட் வாங்குவதற்கும் அடிக்கடி வெளிநாடு செல்பவர்களுக்கும் இது அவசியம். திருமணப்பதிவு குறித்து மேலும் விவரம் வேண்டுமெனில் www.tnreginet.net என்ற இணைய தளத்தில் பார்க்கலாம். ●



அனுபவம்... ஆலோசனை... இன்மை...

• திருமண மண்டபத்துக்குப் போகிற போது, ஒரு ரயில்வே கால அட்டவணைப் புத்தகத்தையும் எடுத்துக் கொண்டு செல்லுங்கள். வெளியூர்களிலிருந்து வரும் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் எந்த ரயிலில் எப்போது வருவார்கள் என்று சுலபமாகத் தெரிந்து கொண்டு, ஸ்டேஷனுக்குப் போய் அழைத்துக்கொண்டு வரவும், கல்யாணத்துக்கு வருகிறவர்களுக்கு ரயில் புறப்படும் நேரம் குறித்து சந்தேகங்களை நிவர்த்தி செய்யவும் உதவியாக இருக்கும்.

• ஒரு நோட்டுப் புத்தகம் வாங்கி, பொறுப்பான ஒருவரிடம் கொடுத்து, திருமணத்துக்கு வரும் அத்தனை பேர்களிடமும் பெயர், முகவரி, தொலைபேசி எண், செல் ஃபோன் எண், ஈ-மெயில் முகவரி ஆகியவற்றை எழுதி வாங்கிக் கொண்டால், அடுத்து நடக்கும் திருமணம் மற்றும் இதர விசேஷங்களின்போது அழைப்பிதழ் அனுப்புவதற்கு சுலபமாக இருக்கும்.





• திருமண ரிசப்ஷனில் வரவேற்கும் இடத்தில் ரோஜாப் பூக்கள் தருவது வழக்கம். கூடவே, ஹேர்பின்களும் வைத்தால், பெண்கள் உடனே பூவைத் தலையில் வைத்துக் கொள்வதற்கு சௌகரியமாக இருக்கும்.

• சமீபத்தில் ஒரு நண்பருக்கு ஏற்பட்ட அனுபவம் இது. நண்பரின் திருமண ரிசப்ஷனுக்கு அவருக்கு அழைப்பு வந்தது. நண்பருக்கோ அன்றைய தினம் மாலை வேறு ஒரு ரிசப்ஷனுக்குச் செல்ல வேண்டும். எனவே, நண்பர், மணமகனுக்கு ஃபோன் செய்து, "முகூர்த்தம் எப்போது?" என்று கேட்க, காலை ஆறு மணி முதல் ஏழரை வரை என்று பதில் வந்தது. "கண்டிப்பாக முகூர்த்தத்துக்கு வந்து விடுகிறேன்; ரிசப்ஷனுக்கு வர இயலாது" என்று சொல்லிவிட்டார்.

ரிசப்ஷன் நாளன்று காலை ஆறரை மணிக்கு சரியாக திருமண மண்டபத்தில் ஆஜர். அங்கே அவருக்கு அதிர்ச்சி. மண்டபத்தில் யாருமே இல்லை. குழம்பிப் போனார் நண்பர். அப்புறம்தான் தெரிந்தது. அன்று மாலை ரிசப்ஷன், மறுநாள் காலையில் முகூர்த்தம் என்று. 'காலையில் திருமணம்; அன்றைய தினம் மாலையில் ரிசப்ஷன்' என்று (தவறாக) நினைத்துக் கொண்டு விட்டதால் வந்த வினை.

ஸப்தபதீ!

இந்துமதத் திருமணங்களில் ஏராளமான சடங்குகளும், சம்பிரதாயங்களும் உண்டு. அவற்றை பற்றி வங்கியில் உயரதிகாரியாகப் பணியாற்றி ஓய்வுபெற்ற என்.எஸ். நடராஜன், ஆழ்ந்த ஆராய்ச்சி மேற்கொண்டு, விவரமாக 'அக்நி, அம்மி, அருந்ததி' என்று ஒரு புத்தகமே எழுதியிருக்கிறார். அதிலிருந்து பலரும் அறியாத சில தகவல்களின் தொகுப்பு:

திருமண மண்டபத்துக்குக் கிளம்புவதற்குமுன், வீட்டைச் சுத்தமாக துடைத்துவிட்டுச் செல்லக்கூடாது. சமையலறையில் சமைத்த அன்னம் சிறிதளவு இருக்க வேண்டும். சுவாமி அறையில் விளக்கு எரிய வேண்டும். முடிந்தால், கல்யாணத்துக்கு வரமுடியாதவர்கள் வீட்டில் தங்கி, தினமும் கோலமிட்டு, விளக்கேற்றி நைவேத்தியம் செய்வது நல்லது. திருமணம் மண்டபத்தில் நடந்தாலும், வீட்டிலும் வாழை மரம், தோரணம் கட்டி, அழகுபடுத்துவது நல்லது.

திருமணத்துக்கும், திருமண வாழ்க்கைக்கும் பணம் தேவைப்படும். எனவே, காசி ராஜாவிடம் சென்று பணம் கேட்டுப் பெறுவதற்காக மணமகன் புறப்படும் யாத்திரைதான் காசி யாத்திரை. இதைப் பற்றி இன்னொரு கருத்தும் உண்டு. அக்காலத்தில், குருகுலங்களில் கல்வி கற்றபின், மேற்படிப்புக்காக, காசி மாநகருக்குச் செல்வது வழக்கம். அப்படிப் புறப்படும் மணமகனை, பெண்ணின் தகப்பனார், "காசிக்குச் சென்றால் திரும்பி வர பல ஆண்டுகளாகும். என் மகளைத் திருமணம் செய்து தர நான் சம்மதிக்கிறேன். அவளைத் திருமணம் செய்து கொண்டு, காசிக்குப் போகலாம்" என்று கூறி திருப்பி அழைத்து வருகிறார். இதுவே காசி யாத்திரையின் பின்னணி!

அந்தக் காலத்தில் பால்ய விவாகங்கள் நிகழ்ந்தபோது, ஊஞ்சல் நிகழ்ச்சி பார்க்க அழகாக இருக்கும். வாழ்க்கை என்பது முன்னும் பின்னும் எப்போதும் ஒரு நிலையில்லாமல் ஆடிக் கொண்டிருக்கும். நாம்(மன)உறுதியுடனிருந்து, வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பதே ஊஞ்சலின் தத்துவம்!

கன்னிகாதானமா? கன்யாதானமா? சிறுவயதில் திருமணம் செய்து கொடுத்தால் கன்னிகாதானம். அவ்வாறு இல்லையெனில் கன்யாதானமே! இது மிக உயர்ந்த தானமாகும். பொதுவாக, எல்லா தானங்களையும் நின்றுகொண்டு கொடுக்க, உட்கார்ந்துகொண்டு வாங்குவார்கள். ஆனால் திருமணத்தில் கன்னிகா தானம் கொடுப்பவர் அமர்ந்திருக்க, வாங்கும் மணமகன் நின்று கொண்டும் இருப்பார்கள். மற்ற தானங்கள் செய்த பிறகு, கொடுத்தவருக்கு, அதில் எந்த உரிமையும் இருக்காது. ஆனால் கன்னியாதானம் செய்தபிறகும், பெண்ணுக்கும் பெற்றோருக்கும் உறவு தொடரும்.

கூறைப்புடைவை என்று ஏன் பெயர் வந்தது தெரியுமா? முன் காலத்தில் மயிலாடுதுறைக்கு அருகில் இருந்த 'கூறைநாடு' என்ற பகுதியில் நெய்யப்பட்ட ஒன்பது கெஜம் புடைவையைத்தான் மணப் பெண்ணுக்கு அணிவிப்பார்கள். இப்போது எல்லா ஊர்களிலும் இந்த ஒன்பது கெஜம் புடைவை தயாரிக்கப்பட்டாலும், கூறைப் (நாட்டுப்)புடைவை





என்றே பெயர் பெற்று விட்டது.

மாங்கல்ய தாரணம் என்கிற தாலி கட்டும் நிகழ்ச்சிக்கு வேத சம்பதமில்லை. இது ஒரு சம்பிரதாயமே! வட இந்தியாவில் இது பழக்கத்தில் இல்லை. தாலிகட்டும் போது சொல்லும் மந்திரத்தின் முதல் வரி மிகப் பிரபலமாகி விட்டது. "மாங்கல்யம் தந்து நா அனேந மமஜிவனே ஹேதுநா."

இதன் பொருள் பின்வருமாறு : ஹே! மங்கலகரமான பெண்ணே! நான் உயிர் வாழ்வதன் நோக்கம் நிறைவேறுவதற்காக, இந்தக் கயிற்றினை உன் கழுத்தில் அணிவிக்கிறேன். நீ நூறு ஆண்டுகள் வாழ்வாயாக!" ஸ்ரீலலிதா சகஸ்ரநாமத்திலும் மாங்கல்ய சூத்திரம் பற்றிக் குறிப்பிடப்படுகிறது.

இந்துத் திருமணம், 'ஸப்தபதீ' நிறைவேறும் போதுதான் முழுமையடைகிறது. ஏழு அடிகள் எடுத்து வைப்பதையே 'ஸப்தபதீ' என்கிறோம்.

மணமகன், பெண்ணின் வலப் பாதத்தின் கட்டை விரலை, தனது வலக்கரத்தால் பிடித்துக் கொண்டு ஏழுமுறை சிறிது சிறிதாக-ஆனால் ஒவ்வொரு முறையும் ஓரிரு அங்குலமாவது கிழக்கு அல்லது வடக்கு நோக்கி நகர்த்த வேண்டும்.

அதற்குரிய மந்திரத்தின் பொருள்:

"இந்த முதல் அடியை வைக்கும் போது தானிய விருத்தியின் பொருட்டு விஷ்ணு நமக்கு ஆசி வழங்கட்டும். இரண்டாம் அடி வைக்கும்போது உடல் வலிமையின் பொருட்டும், மூன்றாம் அடியில் விரதத்தின் பொருட்டும் நான்காம் அடியில் சுகத்துக்காகவும், ஐந்தாம் அடியில் பசுகளின் விருத்திக்காகவும், ஆறாம் அடியில் நல்ல பருவங்களின் பொருட்டும், ஏழாம் அடியில்யாக, யக்ஞங்களைக் குறைவற செய்ய அருளுமாறும் விஷ்ணு அருள்புரியட்டும்."



இது பிளாஸ்டிக் யுகம்!

'யூஸ் அண்ட் த்ரோ' ஸ்டைல் திருமண விசேஷங்களிலும் நுழைந்து விட்டது. தண்ணீர் குடிக்கும் டம்ளர்கள் முதல் தாம்பூலப் பைகள் வரை எல்லாமே 'யூஸ் அண்ட் த்ரோ'வாகி வருகிறதே..?

"அந்தக் காலத்தில் கல்யாண மண்டபத்தில் நுழைந்தவுடன் இத்தனை எவர்சில்வர் டம்ளர்கள், இத்தனை கிண்ணங்கள் என்று எண்ணி வாங்கிக் கொள்ள வேண்டும். மண்டபத்தை காலி செய்யும்போது, டம்ளர்களும், கிண்ணங்களும் எவ்வளவு குறைகிறதோ, அதற்கு விலை கணக்கிட்டு மண்டப நிர்வாகம் பணம் வசூலித்து விடும். அதெல்லாம் இன்று பழைய கதையாகி விட்டது. எல்லாமே "டிஸ்போசபிள்" ரகமாகிவிட்டன.



எவர்சில்வர் டம்ளர்கள், கிண்ணங்களைச் சுத்தம் செய்வதற்குத் தாராளமாகத் தண்ணீர் கிடைப்பதில்லை. இது பிளாஸ்டிக் யுகம். தேவை அதிகமாகிவிட்ட தற்கேற்ப டிஸ்போசபிள் ஐட்டங்கள் இன்று மார்க்கெட்டில் குவிந்துள்ளன. சில வருடங்களுக்கு முன்பு வரை, தெர்மோகோல் டம்ளர்கள், கப்கள் பயன்படுத்தப்பட்டன. தெர்மோகோல் ஐட்டங்கள் பெட்ரோலியப் பொருட்கள் உற்பத்தியின் போது கிடைக்கும் ஒரு பை-ப்ராடக்டிலிருந்து தயாரிக்கப்படுவன. பெட்ரோலியப் பொருட்களின் அபரிமிதமான விலை உயர்வு காரணமாக இப்போது தெர்மோகோல் ஐட்டங்கள் அதிகமாகப் புழங்குவதில்லை.

இருப்பது மைக்ரான்களுக்குக் குறைவான பிளாஸ்டிக் பொருட்களுக்குத்தான் சுற்றுச் சூழல் கட்டுப்பாட்டுத் தடைகள் உள்ளன. எனவே, இன்று பிளாஸ்டிக்கிலான டிஸ்போசபிள் ஐட்டங்கள் மலிந்து விட்டன. கூடவே மெல்லிய அட்டையினால் செய்யப்பட்ட 'பேப்பர் டம்ளர்கள், கப்களும் நிறைய விற்பனையாகின்றன. சமீபகாலமாக இந்த பிளாஸ்டிக் டம்ளர்கள், கப்களுடன் தண்ணீர் பாட்டில்களும் சேர்ந்து கொண்டு விட்டன. 'இவை மிகவும் சுத்தமாகவும் சௌகரியமாகவும் உள்ளன.'

"சில திருமணங்களில் தயிர், ஸ்வீட் ஆகியவை மண்ணில் செய்யப்பட்ட சின்னஞ்சிறு பானை மற்றும் பௌல்களில் வழங்கப்படுகின்றன. இவை கலை நயத்துடன் வண்ணம் பூசப்பட்டும், கோலமிடப்பட்டும் இப்போது வருகின்றன. ஆனால், கொஞ்சம் காஸ்ட்லி! அதேபோல, தாம்பூலத்துக்கு பிளாஸ்டிக் பைகளுக்குப் பதிலாக சணல் நார் பைகளும், மெல்லிய டிஷ்யூவிலான பைகளும் வந்துவிட்டன" என்கிறார் ஜி. சுப்பிரமணிய ஐயர்.



கெட்டிமேளம்
முழங்கிட... தொகுப்பு:
எஸ். சந்திரமௌலி
படங்கள்:
பொள்ளாச்சி சுந்தரம்
அட்டைப் படம்:
ஸ்ரீஹரி
நன்றி: **ஓவியர் மாயா**

4.3.2007

தழுடன் இணைப்பு...
16 பக்கங்கள்

கல்கி

குடும்பத்துடன் படிக்க...



வழங்குவோர்:
SCS
SARASWATHI
CATERING SERVICE

மீனாட்சி கல்யாண சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம்








மணமேடையை
அலங்கரிக்க இருக்கும்
ஜோடிகளுக்குக்
கல்கியின்
இனிய
நல்வாழ்த்துகள்!

உங்களுக்குக்
கல்யாணப் பரிசு
காத்திருக்கிறது!
விவரங்களுக்குப்
பார்க்க :
கல்கியில்
80-ஆம் பக்கம்.





PMG's Licence No.WPP TN/CC(S)DN/70/06-08-Registered as a Newspaper in Srilanka. Supplement to the Kalki Issue Dated 4.3.2007



JAYA JAYA SANKARA
HARA HARA SANKARA

Catering for Marriages is our speciality

SCS

SARASWATHI
CATERING SERVICE

தலைமுறையினர் வாழ்த்தும் அளவுக்கு உங்கள் இல்லத்தில் திருமணம்
இருக்க வேண்டுமென்றால் சமையல், சாப்பாடு என்பது தான் மிகசிறந்தது!
திருமணத்திற்கு சமையல் என்று சொன்னால் நினைவுக்கு வருவது
பாரம்பரியம் சுவைமிக்க தென் இந்தியாவின் மிகச்சிறந்த
ஒரே ஒரு முன்னணி ஸ்தாபனம்

சரஸ்வதி கேட்டரிங்

தலைமுறை தலைமுறையாக இத் தொழில் செய்து அனைத்து தரப்பு மக்களின் ஏகோபித்த ஆதரவை பெற்று அவரவர்கள் வசதிக்கேற்ப செய்து தருவது மட்டும்மின்றி பல பெரிய மனிதர்களின் வீட்டு திருமணம், பல முக்கிய பிரமுகர்களின் வீட்டு திருமணம் என்று பார்ப்பவர்கள் வியக்கும் வண்ணம் மிகச்சிறப்பாக புதுமையான முறையில் சைவ உணவு வகைகளான தென்னிந்திய, வட இந்திய, Rajastani, Punjabi, Gujarathi, செட்டிநாடு, மலபார் உணவு வகைகள், SP Chat counter, SP Desert Counter, Continental Food, Chineese Food, Italian Food, என்று சைவ உணவில் எவரும் இதுவரை செய்திராத வகையில் மிக புதுமையான முறையில் பல விதமான உணவு வகைகளை பாரம்பரியம் மிக்க சுவையுடன் தாயுள்ளத்தோடு பரிமாறி உங்கள் வீட்டு திருமணங்களை ஏற்று மங்களவாத்யம் முதல் கட்டுசாதம் வரை (A to Z) என்று அனைத்து சுபகாரியங்களுக்கும் முன்னின்று செய்து தருவதுடன் இப்பூவுலகில் எல்லோரும் பெருமையடையும் வகையில் செய்து தனக்கென தனி சமையல் உலகின் சாம்ராஜ்யத்தின் ஒரே முன்னனி நிறுவனம் என்று பலர் பெருமையுடன் கூறும் வகையில் இருக்கும் ஒரே ஸ்தாபனம்

தாயன்போடு இருகரம் கூப்பி உங்களை வரவேற்கிறோம்! உங்கள் வீட்டு
திருமணத்தை சரஸ்வதி கேட்டரிங் சர்வீஸ் மூலம் செய்து
இனிதாக்குங்கள்! சிறப்பாக்குங்கள்!



Vegetarian only

SARASWATHI
CATERING SERVICE

Insuvai Vendan **G. Subramani Iyer**

No.65, (old no. 30), Subramanian St., West Mambalam, Chennai - 33.
Off: 24742433 Res: 23719535 Cell: 98400 54900 Tele Fax: 24742433
Branch off: Coimbatore Ph: (0422) 2343710
E- Mail: insuvaivendhan@yahoo.com www.insuvai.com

We undertake Marriage Catering all over India

எக்ஸ்சேஞ்ச் எக்ஸ்சேஞ்ச் எக்ஸ்சேஞ்ச் எக்ஸ்சேஞ்ச் எக்ஸ்சேஞ்ச் எக்ஸ்சேஞ்ச்

வருடாந்திர சிறப்புத் தள்ளுபடி ஆரம்பம்!

மைலாப்பூர்

ஸ்ரீ காமாட்சி சில்க்ஸ் -ல்

25.02.2007 முதல்

புதிய காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள்

~~ரூ. 3,500~~	ரூ.1,750/-
~~ரூ. 5,800~~	ரூ.2,900/-
~~ரூ. 4,300~~	ரூ.2,150/-
~~ரூ.14,800~~	ரூ.7,400/-



பழைய காஞ்சிபுரம் பட்டுச்சேலைகள் எக்ஸ்சேஞ்ச் செய்யப்படும்.

காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளுக்கு முகூர்த்தம் மற்றும் திருமண கால சலுகை

ஸ்ரீ காமாட்சி சில்க்ஸ்

எண்.13/7, வடக்கு மாட வீதி, கபாலீஸ்வரர் கோயில் அருகில்,
மயிலாப்பூர், போன் : 044-24933097, 24610444

MASTER & VISA CARDS ACCEPTED

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 Registered No. TN/CC(S)DN/144/06-08 Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/70/06-08 Registered as a Newspaper in Srilanka.

You can

Win 75% Scholarship

on total course fee

SCHOLARSHIP APTITUDE TEST 14 SAT 2007

PROVE YOUR INTELLIGENCE & WIN SCHOLARSHIP

SAT 2007 | SCHOLARSHIP APTITUDE TEST | FOR DESERVING STUDENTS

இத்தேர்வுக்கு எவ்வித கட்டணமும் கிடையாது!

அறிவுத்திறனை நிரூபித்து வெல்லுங்கள்!



ABOUT THE SCHOLARSHIP APTITUDE TEST

- No Entry fee for SAT.
- SAT question paper comprises of 25 objective type questions from General Knowledge, Science, Geography & Mathematics.
- SAT question paper will be in English / Tamil.
- No age bar to participate in this test.
- Basic Qualification must be 9th Std.

SAT is conducted only once in a year - Don't miss it.

பயிற்சிக் கட்டணத்தை தவணைமுறையிலும் செலுத்தலாம்

Test Date: APRIL 1 SUNDAY

CSC
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2000 CERTIFIED INSTITUTION

Collect FREE admit card from your nearest CSC centres